Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly

வெள்ளி - 18 02 - 08 யூலை - 2004



## சமாதானம் தப்பிப்பிழைக்குமா?

## அழகு ஓவியங்களல்ல அத்திவாரக்கற்கள்

# திருமுக அறிமுகம்



## அ.ந. கந்தசாமி

அ.செ.மு என்ற அற்புதமான முன்னோடி படைப்பாளியை தமிழீழ மண்ணிற்கு வழங்கிய அளவெட்டி செம்மண் பூமி அ.ந.க என்ற மற்றொரு மூன்றெழுத்து வித்தகரையும் சமர்ப்பணம் செய்தது.

அளவெட்டி,நடராசா கந்தசாமி என்ற 'அ.ந.கந்தசாமியை தவிர்த்துவிட்டு ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றி எவரும் பேசவோ எழுதவோ முடியாது.

அந்தளவுக்கு ஈழப்படைப்புலகில் ஆழத்தடம் பதித்துச்சென்ற அற்புதமான சிந்தனையாளர் அவர் .

கவிதை,சிறுகதை,நாவல், நாடகம்,விமர்சனம் மொழிபெயர்ப்பு என.....அவரால் மெருகேற்றப்படாத படைப்பிலக்கியத்துறையே கிடையாது அனைத்துத்துறைகளிலும் அவரின் வித்துவத்துவம் பிரகாசிக்கவே செய்தது. அவரது மொழி ஆளுமையும், கலையுணர்வும், சிந்தனைச் செழுமையும் இன்னொருவரிடம் எதிர்பார்க்கவே முடியாத ஒன்று.

இவை எல்லாவற்றையும் விட அவரது சமூக சிந்தனை, மனிதநேயம்,மண்பற்று ஆகியவைதான் அ.ந.க.என்ற படைப்பாளிக்குள் உறைந்திருந்த மகத்தான மனிதனை இனம்காட்டியது எனலாம். மனித நேயம் அவரது சகல படைப்புக்களிலும் கொப்பளிப்பதை உணரமுடியும்.

சக மனிதனை மதித்த மனிதன் சக படைப்பாளியை நேசித்த படைப்பாளி, சக கலைஞனை மதித்த கலைஞன்.

ஒருகாலத்தில் இலங்கையின் இலக்கிய வளர்ச்சியில் முக்கிய பரிமாணங்களை ஏற்படுத்திய முற்போக்கு இலக்கிய வட்டத்தின் முன்னோடிப் படைப்பாளி...... நிஜமான முற்போக்கு சிந்தனையாளன் மட்டுமல்ல,செயலாளியும் கூட....

கருத்தில் நெருப்பன்,புகழ் போதையுடன் சமரசம் செய்து கொள்ளாத சமதர்மவாதி.

சிறுமை கண்டு பொங்கும் சுபாவம் அவரின் இயல்பானதால், அவரின் படைப்புக்களில் மனிதம் குறித்த தேடல் முக்கியத்துவம் பெற்றது.

மேடைப்பேச்சில் அவர் வல்லவர். ஆடம்பரமற்ற ஆனால் ஆழமான அவரது பேச்சில் கருத்துச்செறிவு நிறைந்திருக்கும்.

அவரது புகழ் பெற்றதும், சர்ச்சைக்குரியதுமான 'மதமாற்றம்,' என்ற நாடகம், ஈழத் தமிழ் நாடக உலகில் திருப்பத்தை ஏற்படுத்தி பல தடவைகள் நாட்டின் பல்வேறு இடங்களிலும் மேடையேறிய பெருமைக்குரியது.

தினகரனில் தொடராக வெளிவந்து சகலரையும் சிந்திக்கவைத்த மனக்கண் நாவல் ஈழத்தமிழ் நாவலுலகில் குறிப்பிடத்தக்க பதிவை ஏற்படுத்தியுள்ளது. அது பின்னர் வானொலி நாடகமாகவும் ஒலிபரப்பானது.

அவரது கவிதைகள் சமூக அவலங்களை எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடி மட்டுமல்ல, மனித கீழ்மைகளை சாடி, சீற்றம் கொள்ளும் வார்த்தைகளை உள்ளடக்கியவை.

உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் 'எமிலீஸோலா'வின் 'நாநா' என்ற நாவலை தமிழில் மொழி பெயர்த்து பிரமிக்க வைத்தவர்.

அவரது சிறுகதைகள் சமூகத்தை வன்மையாகச் சாடுபவை என்பது பேராசிரியர் சிவத்தம்பியின் கருத்து.

ஈழத்து மறுமலர்ச்சிப் படைப்பாளிகளில் முக்கியமானவரான 'அ.ந.க' மிகச் சிறந்த பத்திரிகையாளரும் கூட.... தேசாபிமானி,சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரிய பீடங்களை அலங்கரித்தவர்.

சமூக அநீதிகளுக்கு எதிரான போராட்டங்களில் தன்னைப் பிணைத்துக் கொண்ட இந்த அமர படைப்பாளியின் 'மனக்கண்' நாவல் இன்னமும் நூலுருப் பெறாதது கவலைக்குரிய விடயமே......

அவரதுசிறுகதைகள், கவிதைகள் மற்றும் ஏனையபடைப்புகளையும் நூலுருவில் கொண்டுவரவேண்டிய பொறுப்பின்ன சம்பந்தப்பட்ட தமிழுணர்வாளர்கள் ஏற்றுச் செயற்பட வேண்டும்.

ஈழத் தமிழுக்கு புதிய பரிமாணத்தை வழங்கி அடையாளப்படுத்தியவரை நாம் அடையாளப்படுத்தி கௌரவிக்க வேண்டுமல்லவா?.

அட்சயன்

# காரசாரம்

## யுத்த காலத்தில்கூட இப்படி இல்லையே...?



பண்டைக்காலத்தில் அரச சபைகளில் அபூர்வமாகத் துறவிகள் வருவர் அரசனுக்கு நன்நெறிகளை உபதேசிப்பர். சென்று விடுவர். மகாபாரதத்தில் துர்வாசர், வசிட்டர், விசுவாமித்திரர், என்று பலர் இருந்துள்ளனர். அசுரகுரு சுக்குலாச்சாரி, சந்திரகுப்த மௌரியன் காலம் சாணக்கியர். ராமாயணத்தில் வசிட்டர், சேரசோழபாண்டியர் காலத்தே புலவர்கள், நாயன்மார்கள் ஆழ்வார்கள், களப்பிரர்காலத்தே சமணர், காளர்கள் பௌத்த துறவிகள் என்று அரசனுக்கு ஆலோசனை வழங்கி அறநெறிப்படி ஆட்சி செய்ய வகை செய்தனர். ஆட்சியைத் துறந்து அடிகளானவர் இளங்கோவடிகள், அரசைத் துறந்து துறவியானவர் புத்தர். அரச போகங்களை மட்டுமல்ல புவன போகங்களையும் துறந்தவனே துறவியாவான். இவன் நாட்டுமக்களுக்கான விழிபாட்டுநெறிகளிலும், சமூகத்து மக்களை நன்னெறிக் கிட்டுச் செல்வதற்கான வழிமுறைகளை உபதேசிப்பதுவுமே இவர்கள் கடன். "அறுமின் அறுமின் ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின்" என்றார் சித்தர் ஒருவர். இன்றைய துறவிகளின் நிலை என்ன? நிலபாவாடை விரித்து வரவேற்று வெள்ளை விரித்து இருக்கை அமைத்து மண்டியிட்டிருந்து உபதேசம் கேட்கும் துறவிகளுக்கு 'மண்டகப்படி' நடத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கல்வியறிவற்றவர்களா? பாவம் அவர்களே கூறிக்கொள்வது போல மிருகத்தின் (சிங்கம்) வழித் தோன்றல்கள்தானே தமிழர்களை எதிர்க்கக் கிழம்பிய இவர்களுக்கு தடியெடுக்கப் பயிற்றுவித்த துறவிகளுக்கே 'வளர்த்தகடா மார்பிலும் பாயும்' எனத் தெரியாதோ பாவம் என்ன செய்வது. தலையில் கிழிந்த மயிரனையர் மாந்தர் நிலையின் இழிந்தகடை.

□

மாயா

## மார்பில் பாயும் வளர்த்த கடாக்கள்



தைமாதம்-மிளகாய்க்கண்டு குழிக்கண்டு வைக்கிற காலம்-அப்படியே கத்தரி,தக்காளி, கீரை என்று துணை மரக்கறிகளும், மிளகாய்க் கன்றுகள் சித் திரைமழைக்கு சாய்ந்துவிடாதிருக்க கரையோரங்களில் இரண்டுவரிசை மரவள்ளியும் நடுவதுண்டு- அதனையடுத்து மாசி-பங்குனி நெல் வயல்களின் அறுவடை முடித்து வெங்காயம் பயிரிடப்படும். வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் ஐந்து ரூபாவுக்கு கத்தரிக்காயும்,இருபது ரூபாவுக்கு வெங்காயமும், எட்டு ரூபா மரவள்ளியும் விற்பனைக்கு வந்துவிடும். வன்னியில் வவுனியா, முல்லைத்தீவு பிரதேசங்களில் இதற்கெனவே வழங்கப்பட்ட நிலங்களாக முத்துஐயன் கட்டு, விசுவமடு, வவுனிக்குளம், கல்மடு, சேமமடு, என்ற பாரிய கிராமங்கள் உண்டு. கிளிநொச்சியிலும் திருவையாறு, கோணாவில் வட்டக்கச்சி இன்னும் குறிப்பாகக் கூறக் கூடியகிராமங்கள் அதிகம்,கிணறுண்டு, குளமுண்டு, நிலமுண்டு, உழைக்கும் மக்களுண்டு. ஆனால் வன்னிச் சந்தையில் யாழ்ப்பாணம் தலவாக்கெல, ஹட்டன், வெலிமட போன்ற இடங்களிலிருந்து வரும் மரக்கறிகளே விற்பனையாகின்றன. ஆனைவிலை, குதிரைவிலை.

தக்காளி எண் பது ரூபா, கத்தரி நாற்பது ரூபா, பாகற்காய் எண்பது ரூபா, எல்லாம் போகட்டும் கீரை பத்து ரூபா.... மரவள்ளித்தடி எங் காவது கிடைக்குமா? கிழங்கு அவ்வப்போது பிடுங்கிச்சமைக்க வேண்டியது. சந்தைக்கே பழைய கிழங்குதான் வருகிறது. வைகாசி ஆனி ஆடியில் மரக்கறிகளின் விலையேற்றத்துக்கு என்ன காரணம் உருளைக் கிழங்கு எழுபத்தெட்டு ரூபா யுத்தம் நடைபெற்றகாலத்தில் கூட இப்படியில்லையே.

1970களில் விசுவமடுவிலிருந்தும் மல்லாவியிலிருந்தும் கொழும்புக்குச் செத்தல் ஏற்றிக்கொண்டு போன விவசாயிகள் கொழும்பிலிருந்து பெட்டி பூட்டிய உழவு இயந்திரத்துடன் திரும்பி வந்தார்கள். இன்று விசுவமடுவுக்கும் செத்தல் வெளியிலிருந்தேவருகிறது. எங்கள் மண்ணில் ஏராளமான விவசாய நிலங்கள் தரிசாகக் கிடைப்பதன் மர்மம் என்ன? எங்கே எங்களுக்கான பொருளாதாரத்திட்டமிடலில் தவறு விட்டோம் எனக்குத் தெரியவில்லை. எங்களுடைய பணமெல்லாம் இறக்குமதிக்குச் செலவானால் எப்படி நாடு முன்னேறப் போகிறது.

●

கடந்த கிழமை நடந்திருக்கும் சம்பவங்கள் அல்லது வெளித்தெரியவந்த விசயங்களை உற்றுக் கவனித்தால் ஒன்றுதெரியவரும். ஒரு பெரிய நாடகத்தின் நன்கு திட்டமிட்டு எழுதப்பட்ட ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய வெவ்வேறு பகுதிகள்போல அவை தோன்றும். அவற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது பெறப்படும் முடிவுகள் எம்மை சமாதானத்தின் அடுத்த கட்டத்தைக் குறித்த சரியான முடிவுகளுக்கு இட்டுச் செல்லக்கூடும். எனவே அந்தச் சம்பவங்களை ஒவ்வொன்றாகப்பார்ப்போம்.

முதலாவது, அமெரிக்கா சம்பந்தப்பட்டது கடந்த வியாழக் கிழமை அமெரிக்கா தனது யுத்தக் கப்பலான கறேஜஸ்சை சிறிலங் காக் கடற்படைக்கு நன்கொடையாக வழங்கியது. அதேநாளில் கொழும்பில் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் மூத்தபத்திரிகையாளர்களுடன் ஒரு சந்திப்பை மேற்கொண்டார். இச்சந்திப்பின்போது அவர் விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அதிகாரசபைக்கான யோசனைகளின்மீது பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என்ற தொனிப்படக் கதைத்திருக்கிறார். அவரைத் துருவித்துருவிக்கேள்விகேட்ட சிங்களப் பத்திரிகையாளர் ஒருவருக்கு அவர் சொன்னபதில் களில் இந்த விசயம் அழுத்தமாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஒருபுறம் அமெரிக்காவின் கப்பல் அன்பளிப்புச் செய்யப்படுகிறது. இன்னொருபுறம் கொழும்பில் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைமீதான பேச்சுக்களுக்கு ஆதரவாகக் கதைக்கப்படுகிறது.

இதேசமயம் கறேஜஸ் கப்பல் வழங்கப்பட்டது தொடர்பாக கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் "இலங்கைக்குச் சமாதானம் வேண்டுமானால் இலங்கையின் ராணுவம் பலமாக இருக்கவேண்டும்'' என்று கூறியுள்ளார்.

இந்தக் கப்பல் முன்பு ரணிலின் காலத்தில் ரணில் - மிலிந்த மொறகொட அரசாங்கத்தின் விசுவாசத்திற்குப் பரிசாகக் கிடைத்த தொன்று. ஆனால் அது இப்பொழுது தான் சிறிலங்காக் கடற்படையின் கைக்குக் கிடைத்திருக்கிறது. இது ஒன்றைக் காட்டுகிறது. ஆளுங்கட்சி எதுவானாலும் ஈழப்போர் தொடர்பான அமெரிக்காவின் அணுகுமுறை அதிகம் மாறாது என்பதே அது. ஒருபுறம் சமாதானம் செய்வதென்றால் ராணுவத்தைப் பலப்படுத்த வேண்டும் என்று சொல்லும் அமெரிக்கா இன்னொருபுறம் இடைக்கால ஏற்பாடு ஒன்றைக் குறித்து ஆதரவாகப்பேசுகிறது. இந்த இரட்டை நிலைப்பாட்டுக்கூடாக அவர்கள் வெளிக்காட்டவிரும்பும் செய்தி என்ன?

அது மிகத்தெளிவான ஒரு செய்தி. அதாவது, சமாதானம் வேண்டும். அதேசமயம் புலிகளின் மீதான அழுத்தங்களையும் விலக்காதிருக்கவேண்டும். இது முதலாவது.

இரண்டாவது, உலகவங்கி வடக்கு கிழக்குப் புனரமைப்புப் பணிகளுக்கென 64.7மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்க முடிவெடுத்திருக்கிறது. ஏற்கனவே இலங்கைக்கான உதவிவழங்கும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக வழங்கப்பட்ட நிதி உதவிகளின் இரண்டாவது கட்டமே இதுவென்று கூறப்படுகிறது. இந்த நிதி யுதவி அரசாங்கத்துக்கூடாகவே வழங்கப்படும். இது சமாதானத்தை நோக்கி நாட்டை ஊக்குவிக்கும் நோக்கிலானது என்ற தொனிப்பட இலங்கைக்கான உலகவங்கியின் பிரதி நிதி கூறியுள்ளார்.

வடக்குக் கிழக்கின் புனர்வாழ்வுப் புனர்நிர்மாணப் பணிகள் ஒரு இடைக்கால ஏற்பாட்டுக்கூடாகவே செய்யப்படவேண்டுமென்று கூறும் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அமைப்புக்கான யோசனைகளைப் பற்றிப் பேசுவதற்கு அரசாங்கம் பின்னடித்துக்கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் இந்த உதவி வந்திருக்கிறது.

அதிலும் குறிப்பாக, கிளிநொச்சியில் சில வாரங்களுக்கு முன்பு புலிகளின் திட்டச் செயலகத்தில் நிகழ்ந்த சந்திப்பொன்றில் உதவிவழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் புலிகள் நிலைமைகளை தெளிவாக விளக்கிய பின்னரும், அதில் நிதியுதவிகள் தொடர்பான தமது நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துக்கூறியபின்னரும் உலகவங்கி தனது நிதியுதவியை அரசாங்கத்துக்கூடாகவே தரமுன் வந்திருக்கிறது.

இது ஏற்கனவே வாக்களிக்கப்பட்டதும், ஏற்கனவே முதற் கட்டம் தரப்பட்டதுமாகிய ஒரு நிதியுதவியின் இரண்டாவது கட்டமே என்பதால் முன்னைய கட்டத்தில் பின்பற்றப்பட்ட அதே நடைமுறையைத் தான் இப்பொழுதும் தொடரமுடியும் என்றொரு விளக்கம் தரப்படக்கூடும்.

எதுவாயினும் இந்த நிதியுதவி ஒரு விசயத்தைத் தெளிவாகக்காட்டுகிறது. அதாவது சமாதானத்துக்கான அடிப்படைகளைப் பலப்படுத்தும் பொருட்டு தமிழ்ப் பகுதிகளில் புனரமைப்பு, புனர்நிர்மாணப் பணிகளைத் தொடர்ந்தும் செய்ய மேற்குலகம் விரும்புகிறது. ஆனால் அதேசமயம் புலிகளுக்கூடாக அந்த நிதியுதவிகளை வழங்க அவர்கள் இன்னமும் தயாராக வில்லை. அதாவது சமாதானம் வேண்டும். ஆனால், அது அரசுக்கு நிகராக புலிகளைப் பலப்படுத்தாமலும் இருக்க வேண்டும் என்று மேற்குலகம் விரும்புகிறது என இதை வியாக்கியானம் செய்யலாமா? இது இரண்டாவது.

மூன்றாவது, கருணா விவகாரம். இதில் இரண்டு நபர்கள் முக்கியமாகச் சம்பந்தப்படுகிறார்கள். முதலாமவர் அலிஸாகிர்மௌலானா. நியமிப்பது. மயோன்முஸ்தாபா தேர்தல் முடிவுகளின் பின் ரணில் தனக்கு உரிய முக்கியத்துவத்தைத் தரத் தவறிவிட்டதாகக்கூறி ரணிலை விமர்சித்துவிட்டு தனிக்கட்சி அமைக்கப்புறப்பட்டவர். அவரை மௌலானாவின் இடத்துக்கு நியமித்ததன் மூலம் அவர் அதை ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் தனக்கு எதிராகத் திரும்பிவிடாதபடி பார்த்துக்கொள்ளும் விசயத்தில் ரணில் கணிசமான வெற்றியைப் பெறக்கூடும்.

ஆனால் மௌலானா விவகாரம் தமிழர்களுக்கு மிகத் தெளிவான ஒரு செய்தியைத் தருகிறது. அதாவது, தமிழர்களின் பலத்தை உடைப்பதில் - கருணாவின் விவகாரத்தில் - இரண்டு பிரதான கட்சிகளும் ஒரேவிதமான உள்நோக்கங்களுடன்தான் இருக்கின்றன என்பதே.

மற்றது, தேவானந்தா. தனக்கும் கருணாவுக்கும் தொலைபேசித் தொடர்புகள் இருப்பதாகக் கூறும் டக்ளஸ் தேவானந்தா கருணா இருக்கும் இடம் மட்டும் தெரியாது என்கிறார். அதுவும் இந்தத் தகவல் யுகத்தில்?

தேவானந்தாவைக் கொண்டு சில விசயங்களை வெளிப்படுத்தியதன்மூலம் அரசாங்கம் சில சமிக்ஞைகளை கிளிநொச்சிக்கு அனுப்ப விரும்புகிறதா?

முக்கியத்துவம் குறைந்த ஒரு தமிழ் அமைச்சரை கருணாவுக்கு ஆதரவாகப் பேசவைத்த அரசாங்கம் முக்கியத்துவம் மிக்க அமைச்சர் மங்களசமரவீரவூடாக தனக்கும் கருணாவுக்கும் இடையிலான உறவை உத்தியோகபூர்வமாக மறுத்திருக்கிறது. அதாவது, அரசாங்கத்துக்கும் கருணாவுக்கும் இடையிலான உறவை தேவான்ந்தாவுக்கூடாக உத்தியோகப்பற்றற்றவிதத்தில் அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இதன்மூலம் அவர்கள் கூறவிரும்பும் செய்தி என்ன?

அது மிகத் தெளிவானது. அவர்களுக்குச் சமாதானமும் வேண்டும் அதேசமயம் கருணாவும் வேண்டும்.

நிதியுதவிபெறச் சமாதானம் வேண்டும். அதற்குப் புலிகள் வேண்டும். அதேசமயம் புலிகளின்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் விதத்தில் கருணாபோன்ற சக்திகளையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவேண்டும்.

இது இப்பத்தியில் இதற்கு முன்பு பார்த்த உதாரணங்களில் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் செய்யும் காரியங்களின் பின்னாலிருக்கும் அதே அரசியலின் பாற்பட்ட ஒரு விவகாரம்தான். அதாவது, அமெரிக்கா கப்பல்கொடுத்ததும், உலகவங்கி அரசாங்கத்துக்கூடாக நிதியுதவி செய்வதும் அரசாங்கம் உத்தியோகப்பற்றற்றவிதத்தில் கருணாவைப் பேணவிரும்புவதும் எல்லாமும் சமாதானம் என்று அவர்கள் கருதும் ஏதோ ஒன்றை அடைவதற்கான ஒரு பொதுச்சிந்தனையின் வெவ்வேறு ஓட்டங்கள்தான்.

அந்தப் பொதுச்சிந்தனை என்னவெனில் - சமாதான முயற்சிகளைப் பேணும் அதேசமயம் புலிகள் யுத்தத்துக்குத் திரும்பிவிடாதபடி அவர்களின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பது என்பதே.

இவ்வாறு அழுத்தங்களைப் பிரயோகிப்பது என்பது புலிகளின் பொறுமையைச் சோதிக்கும் ஒரு எல்லைவரை போய்விடாதபடிக்குப் பார்த்துக்கொள்வதில் ஒருவித சமநிலை பேணப்பட்டுவந்ததன் விளைவாகவே கடந்த இரண்டாண்டுகளுக்கும் மேலாக சமாதான முயற்சிகள் தப்பிப்பிழைத்து வந்தன.

ஆனால் கருணாவின் விவகாரத்தோடு நிலைமைகள் அந்த எல்லைக்குக்கிட்டவாக வந்துவிட்டது போல ஒரு தோற்றம் உண்டாகியுள்ளது. இப்பொழுது அரசாங்கம் கருணாவா? அல்லது சமாதானமா? எது வேண்டும் என்ற கேள்விக்குப் பதில் கூறவேண்டிய ஒருவேளை வந்துவிட்டதுபோலவும் ஒரு தோற்றம் உண்டாகியுள்ளது.

ஆனால், நிலைமைகள் யுத்தத்துக்குக் கிட்டவாக வருமா இல்லையா என்பது அதாவது, புலிகளின் பொறுமையை எதுவரை சோதிக்கலாம் என்பது புலிகள் கருணாவை எந்தளவுக்கு ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளப்போகிறார்கள் என் பதில்தான் பெரிதும் தங்கியிருக்கிறது.



**மௌலானாவிவகாரம் தமிழர்களுக்கு மிகத் தெளிவான ஒரு செய்தியைத் தருகிறது. அதாவது. தமிழர்களின் பலத்தை உடைப்பதில் - கருணாவின் விவகாரத்தில் - இரண்டு பிரதான கட்சிகளும் ஒரேவிதமான உள்நோக்கங்களுடன்தான் இருக்கின்றன என்பதே.**

**மற்றது. தேவானந்தா. தனக்கும் கருணாவுக்கும் தொலைபேசித் தொடர்புகள் இருப்பதாகக்கூறும் டக்ளஸ் தேவானந்தா கருணா இருக்கும் இடம் மட்டும் தெரியாது என்கிறார். அதுவும் இந்தத் தகவல் யுகத்தில்?**



# தப்பிப்பிழைக்குமா சமாதானம்?

கருணா தப்பிச்செல்ல உதவிய இவர் இதுபற்றி தமது கட்சித் தலைமைக்குத் தெரியாது என்கிறார். ஆனால் கிடைக்கப்பெறும் தகவல்களின்படி கருணா தப்பிச்சென்ற வழிநெடுக எந்தவொரு சோதனைச் சாவடியிலும் அவர்கள் ராணுவத்தினரால் மறிக்கப்படவில்லை. இது ஒன்றைக் காட்டுகிறது. கருணா தப்பிச்செல்வது குறித்து படைத்துறை உயர்மட்டத்துக்கு ஏற்கனவே

**நிலாந்தன்**


தகவல் தரப்பட்டிருக்கிறது என்பதே அது. ஆயின் படைத்துறை உயர் மட்டத்துக்கு அதாவது அரசாங்கத்துக்கு இது பற்றித்தெரிவித்த மௌலானா தனது கட்சித் தலைமைக்குச் சொல்லாமல் விட்டிருப்பாரா?

உண்மையில் இதுபற்றி ரணிலுக்கும் தெரியும். ஆனால் அவர் தனக்கும் புலிகளுக்குமிடையிலான சுமுகஉறவைப் பாதுகாக்கும் பொருட்டு மௌலானாவை இராஜினாமாச் செய்யவைத்துவிட்டார். ஆனால் இதன்மூலம் அவர் இரட்டை லாபத்தைப் பெறமுயல்கிறார்.

முதலாவது சமாதானத்தின் மீதான தனது விசுவாசத்தை நிரூபிக்கும் விதத்தில் ஒரு கனவான் அரசியலுக்குரிய விழுமியங்களின்படி மௌலானாவை ராஜினாமாச் செய்ய வைத்து அதன்மூலம் புலிகளின் நன்மதிப்பைத் தொடர்ந்தும் பேணுவது.

மற்றது, மௌலானாவின் இடத்துக்கு மயோன்முஸ்தாபாவை

ரத்தில் - இரண்டு பிரதான கட்சிகளும் ஒரேவிதமான உள்நோக்கங்களுடன்தான் இருக்கின்றன என்பதே.



**கரும்புலிகள் நாள் யூலை ~ 05**

**அப்பன் ஆத்தை**
**அரிய சோதரங்கள்**
**நெஞ்சத்து இனிய**
**நண்பிகள்**
**அனைத்துமே அறுத்து**
**ஆய்வாளர் திகைக்கப்**
**புதிரானார்.**

மக்களற்ற மயான அமைதிப்பூமியாக ஊர்காவற்துறை அதற்கு தெற்கே நாரந்தனை சரவணை, புளியங்கூடல், வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவுவரையான கிராமமக்கள் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தனர். நிலம் வெளிக்கும் நேரம் அராலி-அராலித்துறை போக்குவரத்தும் நின்றுவிட்டது. அதிகாலைவேளை எறிகணைகள் முழங்க இக்கிராம மக்கள் திடுக்கிட்டு விழித்தனர். நாரந் தனை மக்கள் சுதாரிக்கும் முன் முன்னேறியபடைகள் அங்கு புகுந்து விட்டன. அங்கு விமானங்கள் கண்மூடித்தனமாகக் குண்டுகளை வீசின. மறுபுறம் எறிகணைகளை வீசினமக்களை துவம்சம் செய்தன. மக்கள் அதிர்ச்சியில் உறைந்து அல்லோலகல்லோலப்பட்டனர். நாரந்தனை முதல் யாழ்ப்பாணம் செல்லும் வடக்கு வீதியை மையமாகக்கொண்டு ஒரு சூறா வளியாக சிறிலங்காப் படைகள் நகரத்தொடங்கின. அதே வேளை இந்தநகர்வுச் சூறாவளியால் மக்களும் நரபலிவேட்டையாடப்பட்டனர். வீடுகளுக்குள் புகுந்தபடையினர் மக்களை சுட்டுக்கொல்ல ஆரம்பித்தனர். யார் எவர் எனப் பாராது வயது பால் வேறுபாடு இன்றி நரபலிவேட்டை நடந்தது. பதுங்குகுழிகளில் உயிருக்கு அஞ்சி பதுங்கியிருந்த மக்கள் மீது குண்டுகளை வீசி கொன்றனர். படையினர் வீடு வீடாக வருவதை அறிந்து கட்டில்களின் கீழ் ஒழித்திருந்த இளைஞர்கள் வெளியில் இழுத்துக் கொல்லப்பட்டனர்.

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்... 03



சமநேரத்தில் வடக்கு வீதி சிறிலங்காப் படையினருக்கு பாதுகாப்பாக அதன் தென்புறப்பகுதி களுக்கும் எறிகணைகள் விமானக்குண்டுகள் பொழியப்பட்டன. வடக்கு வீதியில் நாரந்தனை முதல் சரவணை வரை இருந்த குடியிருப்புக்களில் படையினர் ஈவிரக்கம் இல்லாமல் நரபலி வேட்டையாடினர்.

அவர் ஒரு ஆசிரியை அவருக்குப் பிள்ளைகள் இல்லை. தன் மருமகனை தனது வீட்டில் வைத்து வளர்த்து வந்தார். படையினர் வீட்டை நெருங்கிவிட்டனர் எதையும் செய்ய முடியாது மருமகனை கட்டிலின் கீழ் ஒழியச்செய்தார். அதி வேகமாக வீட்டினுள் படையினர் நுழைந்தனர். கட்டிலின் கீழ் ஒழித்திருந்த மருமகன் மீது சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. மருமகன் பிணமானார் . ஆசிரியர் அதிர்ச்சியில் உறைந்து போனார். பல ஆண்டுகளாக அவர் அதிர்ச்சியாகவே இருந்தார், அவர் இதுவரையும் இயல்பாகவில்லை.

எதிர்ப்பட்டவர்களையும் எதிர்ப்படாதவர்களையும் தேடித்தேடிச் சுட்டுக் கொன்றவாறு நடந்த சிங்களக் காட்டுமிராண்டிப் படைகள் ஒரு புறம் சிறு வயது ஆண்களை பிடித்தும் சென்றனர். சரவணைக்கப்பால் உட்புற கிராமங்களான சோழாவத்தை, பள்ளம்புலம், மயிலம்புலம் கிராமங்களுக்குள்ளும் படையினர் நுழைந்து வேட்டையாடினர். சிங்களப்படைகளின் வேகமான சூறா வளியான நகர்வு நரபலி வேட்டையால் தீவுகளை விட்டு மக்கள் தப்பிஓட முடியாது தவித்தவேளை, புளியங்கூடல் சுருவில் மக்கள் உடமைகளை கைவிட்டு உயிர்காத்துக்கொள்ள புங்குடுதீவுக்குத் தப்பிஓடினர்.

ஒரு பொறியாகவே தீவினை விட்டு யாழ்ப்பாணத்துக்கான அராலிப் பாதை படையினரால் தாக்கப்பட்டது. படையினர் வடக்கு வீதியை மையமா கொண்டு வீதியில் இல்லாமல் வீதியின் இருமருங்காகவே நடந்தனர். அராலிச் சந்திக்கு வேலணை வழியாக விடுதலைப்புலிகள் தாக்குதலை நடத்தலாம் என்று அந்தப் பாதையையும் கடுமையான தாக்குதலுக்கு இலக்கானது. அராலிப்படையினரை மறித்து கடுமையான அடி படையினருக்கு கொடுக்கப்பட்டது. இந்த அராலிச் சந்தி முழுமையான வெளிப்பகுதி. குறிப்பாக சொல்லப்போனால் போருக்குச் சாதகமற்றபகுதி உருமறைப்புக் கான சாதகங்கள் ஏதுமற்ற ஒரு உவர் வெளி கடற்கரையில் மட்டுமே கண்டல் தாவரங்கள் இருக்கின்றன. படையினரின் உலங்குவானூர்திகளும், விமானங்களும் அராலிமுதல் மண்டைதீவுவரை பாதை வழிகளையும் யாழ்ப்பாணத்திற்கு உதவிகள் கிடைக்கக்கூடிய கடற்பகுதிகளையும் மடக்கி தாக்குதல்கள் நடத்தினர். அந்த வெளி சாதகமாக இருந்த போதிலும் மக்களை அடிக்கும் நோக்கில் படையினரின் நகர்வை தேக்குவதற்கான குறுகிய காலப்பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த நகர்வின் சிங்களப் படையினரின் முக்கிய தளபதியாக பிரிகேடியர் ஜாலியநமுனி தலைமையிலான லெப்டினன் கேணல் சரத் பொண்சேகா லெப்டினன் கேணல் காமினி குணசேகர லெப்டினன் கேணல் கொடபகய ராஜபக்ச ஆகியோர் பற்றாலியன்களை தலைமையேற்றனர். இந்தளவு முக்கியமான சிங்களத்தளபதிகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர். சிங்களப் படையினரின் துட்டகைமுனுவான மேஜர் ஜெனரல் டெண்சில் கொப்பைக்கடுவவின் ஒருங்கிணைப்பில் நடாத்திய இராணுவ கொமாண்டோ அணி ஒன்று லெப்டினன் கேணல் காமினி ஹெற்றி ஆராய்ச்சி தலைமையில் நடத்தப்பட்டது. கிட்டத்தட்ட 4000 படையினர் இதில் ஈடுபடுத்தப்பட்டனர். ஒரு பெரிய அரக்கப்படை மக்களை துவம்சம் செய்தவாறு மண்டைதீவு நோக்கி நகர முற்பட்டவேளை போராளிகளின் சிறிய அணி ஒன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டது.

துருவன்

**கரும்புலிகள் நாள் யூலை ~ 05**



கருமையைக்
காதலிக்கவைத்தீர்
அதனுள் தமிழின்
மதிப்பைக் கலந்தீர்
கருமை கலைத்த உயர்
ஒளிகளே!



தொல்லியல்

# வன்னிமண் இலச்சினைகள்

வட்டமான மண் முத்திரைகள் வன்னியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் என்ன அதிசயம் இருக்கப் போகிறது. இவை தொனமைககாலத்துக்குரியவைதான் முக்கியமான செய்தியாகும்.

வன்னியில் பெருமளவு தொன்மை சான்றுகள் எடுக்கப்பட்ட வன்னியின் அக்கராயன் நிலை ஆற்றுக்கரையோரம் இந்த மண் முத்திரைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவைபோன்ற மண் முத்திரைகள் முல்லைத்தீவின் தண்ணிமுறிப்பிலும் எடுக்கப் பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தின் மிகத் தொன்மையான குடியிருப்பு இருந்த கந்தரோடையிலும் இவை எடுக்கப் பட்டுள்ளன.

(SEALS) எடுக்கப்பட்டன.

அறிவியல் காலக் கணிப்புக்குட்படுத்தப்பட்ட இந்த முத்திரைகள் கி.மு.2550 (இற்றைக்கு 4550) ஆண்டுகளுக்கு முற்பட்டதென அறியப்பட்டது. இந்தமண் முத்திரைகள் தொடர்பாக மத்திய கிழக்கில் சாரா-ஹீல்ற் ஆய்வுகளை செய்துள்ளார். அதே போல் றொஜர். J மத்தியூவும் ஆய்வுகளில் ஈடுபட்டு மண்முத்திரைகளின் வகைகளை வெளியிட்டார்.

களிமண் பதப்படுத்தப்பட்டு உருளையாக உருட்டப்பட்டு குறித்தளவு அகலத்தில் வெட்டப்பட்டு






ஈரமானநிலையிலேயே முத்திரைகள் அச்சால் பதிக்கப்படுகின்றன. இந்த மண் முத்திரைகள் தென் மொசபத்தேமியாவில் கி.மு.3500 ஆண்டுகளில் பயன்படுத்தப்படத்தொடங்கின. இவை வணிகத்துக்கு அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டன.

இவைபோன்ற மண்முத்திரைகள் கடந்த ஆண்டு வன்னியின் அக்கராயன் குளத்தின் நிலை ஆற்றங் கரையோரம் ந.குணரட்ணத்தினால் கண்டுபிடிக்கப்பட்டன. கோட்டு உருவப்படங்களாக அந்த இலச்சினைகள் இருந்தன.

சிங்களதேசத்தில் பண்டைய மன்னராட்சி இடங்களிலும் மண்முத்திரைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டையின் திஸ்ஸமகா ராமாவில் 1989இல் 30 மண் இலச்சினைகள் எடுக்கப்பட்டன. அவையே இலங்கையின் தொன்மை யான மண் இலச்சினை என சிங்கள வரலாற்றாசிரியர் 0 போபியாராச்சி குறிப்பிடுகிறார். இவை கி.மு.77 ஆண்டுகள் வரை தொன்யைானதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இலங்கை முழுவதும் அந்த ஆய்வு செய்யப்பட்டு இதுவே தொன்மையானது என்பது நிரூபிக்கப்படவில்லை.

இவை மொசபத்தேமிய நாகரீகத்தில் முதல்தடவையாகக் கண்டெடுக்கப் பட்டன. இப்போதைய ஈராக்கின் யூப்ரதீஸ்,தைகிரீஸ் நதிகளுக்கிடையிலான உலகின் முதல் நாகரீகமான மொசபத்தேமியாவில் இருந்த உர் UR என்ற இடத்தில் உலகத்தின் முது தொன்மை மண் முத்திரைகள் எடுக்கப்பட்டன. 1990இல் இவை எடுக்கப்பட்டன. இவை களிமண்ணால் செய்யப்பட்டு சுடப்பட்டவையாகும். தென் ஈராக்கில் யூப்ரதீஸ் நதியின் ஓரம் இந்த உர்UR நகரம் இருந்தது. இங்கு மண்ணுள் புதையுண்ட நிலையில் மண்முத்திரைகள்





கடந்த ஆண்டில் அக்கராயனில் எடுக்கப்பட்ட மண்இலச்சினைகள் காலக் கணிப்புக்கு உட்படுத்தப்படுகையில் இது நிரூபிக்கப்படும். அதற்கான முயற்சிகளை தொல்லியல் புலமையாளர்கள் மேற்கொள்ள வேண்டும்.


குரலோன்




# உலகை சுருங்கச்செய்யும் அறிவியலின் துரித வளர்ச்சி

அறிவியல் உலகை நவீன மயமாக்கிவருகின்றது. இந்த அறிவியல் சகல பரிமாணங்களிலும் ஆட்சி புரிகின்றது. இன்றுள்ள உலகில் மனிதர்களை தூர இடைவெளிகளுக்கு அப்பால் அவர்களை மிக மிக அருகாக நெருங்கியிருப்பது தொடர்புத் தொழில்நுட்பம்.

தொடர்புத்தொழில் நுட்பம் உலகத்தை ஒரு கிராமமாக மாற்றிக்கொண்டிருக்கின்றது. தூரம் தான் மனிதர்களை எட்ட வைத்திருக்கின்றது. தூரம் தொடர்புகளுக்கு ஊடாகவே கணிக்கப்படுகின்றது. இருமனிதர்கள் தூரத்தால் பிரிக்கப்பட்டாலும்கூட



தொடர்பு மூலம் அவர்கள் தூரம் இல்லாமல்போகின்றது.

அறிவியலறிஞர் அல்பேர்ட் ஜன்ஸ்ரீன் வெளியிட்ட இன்றுவரை உலகில் பலவகைகளில் விளங்கிக்கொள்ளப்படும் சார்புத்தத்துவம் - தூரம் - நேரம் பற்றிய தொடர்பையே கூறுவதாகும்.


தூரம் - காலம் என்பது தனியானவை அல்ல. தூரமும் - காலமும் ஒன்றையொன்று சார்ந்துள்ளது. தூரமும் - காலமும் பிரிக்கப்பட முடியாதவை - இது ஜன்ஸ்ரீனின் சார்புத் தத்துவம் கூறும் விளக் கம்.




இதன்படி தூரம் என்பது அது கடக்கப்படும் நேரத்தில்தான் தங்கியுள்ளது. மிதிவண்டியில் ஒருமைல் தூரத்தை கடக்கும் நேரம் ஒரு அளவு வேக ஊர்திகளில் இத்தூரத்தை கடக்கும் நேரம் ஒரு அளவு. ஆகவே தூரம் என்பது அது கடக்கப்படும் நேரத்தை பொறுத்ததாகும்.


அதனால்தான் இன்றுள்ள தொடர்பு உலகம் உலகத்தை ஒரு கிராமமாக மாற்றி விட்டுள்ளது. தொலை பேசி கள், இணையத்தொடர்புகள், வானொலி, கானொளி, ஒலி ஒளி பரப்புகள் வினாடிகளுக்கும் குறைவான காலத்தில் பலலட்சம் மைல்கள் தூரத்தை கடந்து மக்களை சென்றடைகின்றன. ஒலி ஒளி பரப்புகளில் நேரடி ஒலி ஒளிபரப்புகைகள் உலகின் ஒரு முனை நிகழ்வை சம நேரத்தில் மறு முனையில் மக் களைச் சென்ற டைகின்றது. இது உலகின் தூரங்களை இல்லாமல் செய்ததாகும். தூரம் என்பது தொடர்புகளால் தான் கணிக்கப்படுகின்றது. தொலைபேசிகள் இன்று உலகின் சகல மக்களையும் கணநேரத்தில் ஒன் றாக்கி - அவர்களிடையிலான தூரங்களை இல்லாமல் செய்துள்ளது. இணையமும் இதனைத் தான் செய்கின்றது. தொலைத் தொடர்பும் - ஒலி ஒளி பரப்புகளும் உலகில் தூரங்களை இல்லாமல் செய்து - உலகினை ஒரு கிராமமாக்கிவிட்டுள்ளன. இதுவே இன்றுள்ள உலகம் ஒரு கிராமம் என்ற கருத்துருவாக்கலாகும். உலகினை ஒரு கிராமமாக மாற்றுவதில் செய்கோள்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்கின்றது.

இந்த உலகம் ஒரு



கிராமம் என்ற விடயத்தைப்பற்றி கூற வந்ததன் நோக்கத்தைப்பற்றி சொல்லவருகிறேன்.

உலகினை ஒரு கிராமமாக மாற்றும் தொடர்புத்



தொழில்நுட்பத்தில் நேற்று வரையான புனைபுகளை முழு மையமாக[illegible] கிய [illegible]யை முழுமையா[illegible] பார்க்கும் சந்தர்ப்பம் மிக அரிதாகக் கிட்டியது. அதைப் பற்றி அங்கிருந்த தொழில்நுட்பங்களைப் பற்றி கூறுவதற்கான ஆடித்தளமே நான்முன் கூறியதாகும். Broud casting asia 2004' என்ற தொடர்புத் தொழில்நுட்ப கண்காட்சி கடந்த மாதம் சிங்கப்பூரில் நடைபெற்றது.

வானொலி ,கானொளி, ஒலி, ஒளிபரப்புகளின் நவீன நுட்பங்கள், வீடியோ, கணனி வரைகலைகள்,வீடியோ,செலுலொயிட் சினிமா, செய்கோள், தொடர்பு, தொலைபேசித் தொடர்பு, உயர் அதி விண்வீச்சு குறும் தூரத் தொடர்பு, இராணுவத் தொடர்பு என தொடர் தொழில்நுட்பத்தின் முழுமையும் அக்கண்காட்சியில் வெளிப்பட்டிருக்கிறது.

த.அரு[illegible]

---




## இதய நோய்களிலிருந்து குழந்தைகளைக்காப்பாற்ற....

* குழந்தைகள் தேவையான அளவு உறக்கம் கொள்கின்றனவா என்று கவனியுங்கள்.
* புகையற்ற சுற்றுச் சூழலை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.
* உடற்பயிற்சிகள் குழந்தைகளின் அன்றாட பள்ளி நிகழ்ச்சிகளில் ஒன்றாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.
* குழந்தைகளின் எடை கட்டுப்பாட்டில் இருக்கும்படி கவனித்துக்கொள்ளுங்கள்.

## முடக்குவாதம் நீங்க...

தற்காலத்தில் முதியோர்கள் மட்டுமின்றி இளைஞர்களும் முடக்கு வாதத்தால் பாதிக்கப்படுகின்றனர். மூளையில் ஏற்படும் இரத்தக்கசிவுதான் பொதுவாக நமது உடல் முடக்குவாதம் உண்டாவதற்கு முக்கிய காரணம்.

மனித மூளையானது மிக மிக நுண்ணிய பல இரத்தக் குழாய்களை உள்ளடக்கி உள்ளது. இதில் உள்ள இரத்தக்குழாய் சிதையும் போதுதான் முடக்குவாதத்தின் முதல் கட்ட தாக்குதலுக்கு உள்ளாகிறது. இந்த நுண்ணிய இரத்தக்குழாய் சிதைவதற்கு முக்கிய காரணம் உயர் இரத்த அழுத்தம்தான்.

உயர்இரத்த அழுத்தம் மட்டுமின்றி தவறான உணவு முறைகள், அதேபோல் உணவில் அந்த அளவு வேதிப்பொருட்கள் சேர்ந்து வீடுவது மற்றும் குளிர்பானங்கள் குடிப்பதும் முடக்குவாதம் ஏற்படும் காரணிகளாகும். மூளை நரம்புகளில் அழுத்தம் உண்டாகும் போது உடலின் ஒரு பகுதி திடீரென செயலற்றுப்போய்விடும் நிலை ஏற்படுகிறது.

இந்த நோயால் பாதிக்கப்படுபவர்கள் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு தண்ணீர் மட்டுமே குடிக்கவேண்டும். அதன் பிறகு ஆரஞ்சு பழச்சாற்றினை மட்டும் தர வேண்டும். பின்னர் உடல் நலத்திற்கு ஏற்ப இவற்றின் அளவை அதிகரிக்க வேண்டும்.

செயலிழந்த, பாதிக்கப்பட்ட உறுப்புக்களை 'மசாஜ்' செய்து விடவேண்டும். நாளடைவில் உணவும், பாலும் அருந்தலாம். ஆனால் இவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் புகைத்தல், மதுப்பழக்கம் போன்றவற்றின் பக்கம் போகக்கூடாது. போனால் நோயின் தீவிரம் அதிகரித்து உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

## வயிற்றுப்புண்ணா! அலட்சியம் வேண்டாம்...

*வயிற்றுப்புண் நாட்களாகியும் கவனிக்காமல் விடும்போது புற்றுநோயாக மாற வாய்ப்புண்டு. அல்சர், வயிற்றுப்புண், வயிற்றுவலி இவைகளின்போது உணவுக்குழாயில் ரத்தம் சேதமடைவதால் உணவுக்குழாயின் "எப்பகுதியிலும் புற்றுநோய் ஏற்படலாம் என்று ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. இப்படி நிறையச் சொல்லமுடியும். ஜீரண உறுப்புக்களுக்கும், உணவுக்கும் உடலின் 80 சதவீத பிரச்சினைகளுக்குத் தொடர்பு இருக்கிறது. மதுவிலிருக்கும் அற்ககோல், காரம், வலி நிவாரணி மாத்திரைகளால் ஏற்படும் பக்க விளைவுகள் போன்றவற்றாலும் ஜீரண உறுப்புக்கள் பாதிப்படைய வாய்ப்புண்டு".*

## இரத்தக்கொதிப்பை மருந்துகள் இல்லாமல் குறைக்க முடியுமா?

*இரத்த அழுத்தத்திற்குரிய மருந்துகளைச் சாப்பிடுவதற்கு முன் சிலவகையான கட்டுப்பாடுகளை கடைப்பிடித்தால், மருந்துகள் இல்லாமலேயே இரத்தக் கொதிப்பைக் குறைக்கமுடியும். உணவுக் கட்டுப்பாடு உப்புச்சத்துக் குறைவான சாப்பாடு, உடற்பயிற்சி, எடையைக் குறைத்தல் மற்றும் தியானம் போன்றவை மூலமாக நாம் நமது இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தலாம்.*

**கரும்புலிகள் நாள் யூலை - 05**



*கடல் கடந்து பழி முடித்தவர்
வசந்த கால கனவுகள்
புதைத்தவர்.
அழுகைகள் எட்டா தூரத்தில்
அங்கம் சிதைந்து புதைந்தவர்.*

# ஈழநாதம்

## வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி 02 . 07 . 2004

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com


## இரட்டை வேடமா.....?

இலங்கையின் சமாதான முயற்சியில் சர்வதேச சமூகம் இரட்டைவேடம் போடுகிறதா என்று சந்தேகிக்கும்வண்ணம் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் அமைகிறது.

இலங்கையின் சமாதான முயற்சியில் நோர்வேயின் பங்களிப்பு தொடங்கியதிலிருந்து இலங்கையின் சமாதான முயற்சி மேற்குலகமயமாகியது.

இந்த மேற்குலகமயமாதலின் பின் சமாதானத்தின் பால் அரசை கட்டுக்குள் வைத்திருக்க அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் நிதி வழங்களை திறந்துவிடுதல் அல்லது மூடிவிடுதல் என்ற அடிப்படையில் அதன் நாணயக்கயிற்றை பற்றியிருந்தன.

ஆனால் இலங்கையில் சமாதான முயற்சிதொடர்பான நிலைப்பாட்டில் ஐக்கிய தேசிய முன்னணி அரசும் சுதந்திர மக்கள் ஐக்கிய முன்னணி அரசும் சமாதான முயற்சி முன்னகர மேற்கொள்ளவேண்டிய சில முன் முயற்சிகள் என்ற அடிப் படையில்கூட விட்டுக் கொடுப்புக்கள் எதனையும் மேற் கொள்ளாது நிதியைப்பெற்று விடுவதிலேயே கவனத்தை செலுத்தின

இத்தகையதொருநிலை நீடித்துக்கொண்டிருக்கையில் இலங்கை இராணுவத்தை பலப்படுத்தும்வகையில் இராணுவ ரீதியான உபகரணங்களை வழங்குவது மற்றும், பாதுகாப்பு ரீதியான ஒப்பந்தங்களை மேற்கொள்வதுபோன்ற சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் சமாதானம் மீதான சர்வதேச சமூகத்தின் அக்கறையை சந்தேகம் கொள்ளச் செய்கிறது.

இது சமாதானத்தின் பெயரால் இலங்கை இராணு வத்தை சர்வதேச சமூகம் பலப்படுத்த முனைகிறதா என்ற கேள் வியையும் எழவைக்கிறது.

இலங்கையில் தொடரும் சமாதான முயற்சியானது புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மேல் கட்டியெழுப்பப்பட்ட சமாதான முயற்சியாகும்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இராணுவ ரீதியாக இரு தரப்பும் பேணவேண்டிய சில விடயங்கள் தெளி வாகவே உணர்த்தப்பட்டுள்ளன.

இதில் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்பும் இராணுவ சம நிலையை, புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த போது எந்த நிலையிலிருந்ததோ அதே நிலையில் பேணி வர வேண்டும் என்பது பலமுறை வலியுறுத்தப்பட்டது.

புலிகளுக்கும் நோர்வே சமாதானக் குழுவினர் மற்றும் கண்காணிப்புக் குழுவினருடன் நடந்த பல சந்திப்புக்களில் இந்த இராணுவ சமநிலை பற்றிய கருத்தாடல் விபரமாக விவாதத் துக்கு எடுத்துக்கொண்டமை தெரிந்ததே.

இதிலும் குறிப்பாக யாழில் மக்களை மீள குடியமர்த்த தடை யாக இருக்கும் உயர்பாதுகாப்புவலயம் தொடர்பான சர்ச்சை நீடித்த போது இந்த இராணுவ சமநிலைபற்றி அதிகமாகப் பேசப்பட் டது.

ஆனால் இப்போது இந்த இராணுவ சமநிலைக்கு மாறாக படையினரின் இராணுவ வலுவை அதிகரிக்கும்வகையில் இராணுவ ரீதியிலான உதவியை சர்வதேச சமூகம் வழங்குவதானது அடிப்ப டையில் பேணப்பட்டுவரும் அரசு புலிகளுக்கிடையிலான இராணுவ சமநிலையில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தவே செய்யும்.

சமாதானத்துக்கு விரோதமாக அல்லது சமாதானப் பேச்சுக்களுக்கு தடையாக அரசை உற்சாகத்தோடு இயங்க செய்வதாக இந்த உதவிகள் அமையும்.

அத்தோடு சிறிலங்கா புலனாய்வுத்துறையினர் கிழக் கில் யுத்தநிறுத்தத்துக்கு அச்சுறுத்தலை விடுத்துக்கொண்டி ருக்கும் பின்னணியில் வழங்கப்படும் இவ் உதவிகள் அரசின் செயலை சர்வதேச சமூகம் அங்கீகரிப்பது போன்றுள்ளது.

சர்வதேசத்தின் இந்தச் செயலானது படையினரை பலப் படுத்தி புலிகளை பலவீனப்படுத்துவதற்குப் பதிலாக யுத்த நிறுத்தத்தைப் பலவீனப்படுத்தி சமாதான முயற்சிக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாகவே அமையும்.

இது இறுதியில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பலவீனப் படுத்தும்வகையில் அமைந்துவிடும்.

அவ்வாறாயின் சர்வதேச சமூகத்தின் இராணுவ ரீதியி லான உதவியென்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பலவீனமாக்கி சமாதான முயற்சிக்கு முடிவுகட்ட எடுக்கும் முயற்சியா என்று சிந்திக்கவைக்கிறது.

சர்வதேச சமூகத்தீன் இந்த முயற்சியானது சமாதானம் முன்னகரத் தடையாக இருப்பது அரசு மட்டுமல்ல, சர்வதேச சமூகமும்தான் என சொல்லாமல் சொல்லும் செய்தியா?

## பாலூட்டி வளர்த்த இனவெறி பாயத் தொடங்கிவிட்டது

வேரற்கேணியன்

இந்த நாட்டில் தமிழர் படு கொலை 1956 யூன் 5 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது.

அந்நாளில் சிறிலங்கா வின் பிரதமராய் இருந்த சுதந்திரக் கட்சித் தலைவர் எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்க சிங்களம் மட்டும் சட்டப்பிரேரணையை நாடாளுமன்றில் முன்வைத்த போது, அதற்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் ஒரு அறவழிப் போர் நாடாளுமன்றத்தின் எதிரேயுள்ள புற்றரையில் நடந்தது. அங்கு அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்த, தந்தை செல்வா வன்னியசிங்கம் , சுந்தர லிங்கம் உட்பட இருநூறு வரை தமிழர்கள், சிங்களக் காடையர் களால் கல் எறிந்தும் கால்களாலும் தாக்கப்பட்டனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து கல்ஓயா வரை இனக்கலவரம்

1956 யூன் 24ஆம்திகதி நாடாளு மன்றத்தில் முன்மொழிந்தார். தொடர்ந்து பேசிய சுந்தரலிங்கம் அவர்கள் தமிழர் எதிர்ப்பு வலுக்கும், காலப்போக்கில் "காடுகளும் சுடும்" என்று எச்சரித்தார். யார்? எந்த வடி வத்தில் என்பதை அவர் தெளி வாகக் கூறவில்லை. அவர் எதனைக் கருதி தீர்க்கதரிசனத்துடன் சொன் னார் என்று இன்று புரிகிறது.

1961 சனவரி முதலாம் திகதி முதல் சிங்களம் மட்டும் சட்டம் தீவிரமாக நாடெங்கும் நடைமுறைக்கு வந்தது. தமிழ் மக்களின் சத்தியாக் கிரக வழிமுறைகளும் தீவிரமடைந் தன. யாழ்ப்பாணத்தில் சட்ட ஒழுங்கை சீர்செய்ய 1961 மார்ச் மாத முதல் முறையாக இராணுவம் யாழ்ப்பாணம் வந்தது.

அரச பீடங்கள் மாறின.

பேச்சுவார்த்தைகள் நடந்தன.

என்று சட்டம் இயற்றுவேன் என்று கொக்குவில் கூட்டத்தில் சொல்லி விட்டுப் போன சேர்.ஜோன் கொத் தலாவலயும்-

தொழிலாளர் புரட்சி மூலம் தான் இந்த நாட்டில் ஒரு சமதர்ம ஆட்சியை அமைக்க முடியும் என்று ஆண்டுக்கு ஒருமுறை அறிக்கை விட்டுக்கொண்டிருந்த அபேதவாதக் கட்சியும்-

அரசியல் அலைகளில். கண்மூடிச்சிக்கி, தங்கள் கொள்கை களைக் காற்றில் பறக்கவிட்ட வரலாற் றை நாம் சந்தித்தோம்.

அரசியல்வாதிகளால் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட இனவெறி படிப்படியாக மதகுரு மாரைத்தாக்கும் அளவுக்கு (அவர்களின் காலில் விழுந்து வணங்கிய காலம் போய்) வந்து விட்ட நேரம் இது. இன்னுமா நம்பிக் கை, அந்தப்புதுமைப் பண்பாளருடன் பேசித் தீர்வு கண்டிடலாம் என்று?

வெடித்தது. 150 தமிழ் மக்கள் வரை கொல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து , சிங்களம் மட்டும் அரசகரும மொழி புத்தமதமே அரச மதம், பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கு சகல துறைகளிலும் முன்னுரிமை எனப் பல இன விரோதக் குரல்கள் எழுந்தன.

### இனக்கலவரம்

தமிழ்த் தலைவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் பல வடி வங்களில் தொடர்ந்தன.

வாகனங்களின் இலக்கத் தகடு களில் அரசு வைத்த சிங்கள சிறீ எழுத்தை மாற்றி தமிழில் சிறீ எழுதிய தமிழ்த்தொண்டர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர். பல ஊர்களிலும் தமிழ்த் தலைவர்கள் நடத்திய எதிர்ப்புக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், அற வழிப் போராட்டங்களின் விளை வாக, பண்டாரநாயக்க, தந்தை செல்வாவை அழைத்துப் பேசி சில உரிமைகளைத் தமிழருக்குத் தரும் உடன்படிக்கை ஒன்றை உருவாக் கினார். அந்நாளில் எதிர்க்கட்சித் தலைவராயிருந்த ஜே.ஆர். ஜயவர்த்தனா நடத்திய எதிர்ப்பு யாத்திரையின் பயனால் அந்த உடன்படிக்கை கிழித்தெறியப் பட்டது.

மீண்டும் எழுந்த தமிழரின் எதிர்ப்பு நடவடிக்கைகளின் பயனாய் 1958இல் மற்றொரு இனக்கலவரம் வெடித்தது. நாடெங்கும் தமிழர் கொலை, உடைமைகள் கொள்ளை, தீயிடல் பன்னீராயிரம் தமிழர் ஏதிலி களாகக் கப்பல்களில் வடக்கே வந்தனர்.

### தமிழீழம்

அதுவரை சிங்கள அரசுடன் ஒத்துழைத்து வந்த, வவுனியா பிரதிநிதி சி.சுந்தரலிங்கம், சிங்கள அரசியலாளரின் இனவி ரோதப் போக்கைக் கண்டித்து, தமிழ்மக்களுக்குத் தனி நாடு "வேண்டும் என்ற பிரேரணையை

உடன்படிக்கைகள் எழுதப்பட்டன. ஏமாற்றங்கள் வரலாற்றில் பாடங் களாகின

அதிபருடன்பேசுகிறார், எங்கள் பிரதிநிதிகள்.

கடந்த ஐம்பது ஆண்டு களில்-

சுந்தரலிங்கம் சொல்லி எச்சரித்தார்.

**தமிழ் மாணவரின் கல்வியை முடக்கும் வகையில் அரசினால் அமுல் செய்யப்பட்ட தரப்படுத்தலும் தமிழருக்கு தொழில் வாய்ப்பு திட்டமிட்டே மறுக்கப்பட்டதும், தமிழ் இளைஞருக்கு வெறுப்பையூட்டின. சுயநிர்ணய உரிமையுள்ள ஒரு தமிழ் நாட்டில் மட்டுமே தமிழர் வளமாக வாழமுடியும் என்று உணர்ந்தனர்.**

### ஆயுதப்போராட்டம்

அதுவரை,சமஷ்டி-கூட்டாட்சி முறை யைக் கோரி நின்ற தமிழரசுக் கட்சி, ஏனைய தமிழ்க்கட்சிகளையும் இணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கி 1975-இல் தமிழீழம் என்ற இலக்கை பிரகடனம் செய்தன.

இந்நிலையில் தமிழ் மாண வரின் கல்வியைமுடக்கும் வகையில் அரசினால் அமுல் செய்யப்பட்ட தரப்ப டுத்தலும் தமிழருக்கு தொழில் வாய்ப்பு திட்டமிட்டே மறுக்கப்பட் டதும், தமிழ் இளைஞருக்கு வெறுப்பையூட்டின. சுயநிர்ணய உரிமையுள்ள ஒரு தமிழ் நாட்டில் மட்டுமே தமிழர் வளமாக வாழ முடியும் என்று உணர்ந்தனர்.

அரச அநியாயங்களுக் கெதிராக ஆயுதம் எடுத்துப் போராடத் தொடங்கினர்.

### ஏமாந்த வரலாறு

இந்த நாட்டுக்கு சமஷ்டி ஆட்சி முறைதான் சிறந்தது என்று 1935 இல் சொன்ன எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவும் தமிழ்-சிங்கள மொழிகளுக்கு சமத்துவம் தான் சமசமாஜக் கட்சியின் கொள் கை என்று சொல்லிக்கொண்டிருந்த என்.எம்.பெரேராவும் கொல்வின் ஆர்.டி.சில்வாவும்-

தமிழும் சிங்களமும் சமம்

வன்னியசிங்கமும் ஐயாவும் ஏனையோரும், காலிமுகத்திடலில் பட்ட காயங்களுடன், நாடாளுமன்றம் போய், நம்பி ஏமாந்த கதையைச் சொல்லி 'சாபம்'போட்டுவிட்டு வந்தார்கள்.

தந்தை செல்வா அமைதி யாக, ஆனால் உறுதியாக "தமிழீழம் தான் தமிழன் தன்மானத்துடன் வாழ வழி " என்றுரைத்துவிட்டு வந்தார்.


போதாதா?

வேறு வழி?

நேர்மையற்ற அரசியல் சந்தர்ப்பவாதம் பேசும் பேரினவாதத் தலைமைகள் நியாயபூர்வமான பேச்சுக்களுக்கு சம்மதிப்பார்கள்என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு முற்றாக இல்லாமல் போயிற்று.

பேச்சுவார்த்தைகள் மூலம் போலித்தனமான சமாதான சூழலை நீடிக்கச் செய்யும் தந்திரோபாயத்தை கையாள முனையும் அரசு ஒரு நீதியானதும், தமிழ்மக்களின் அபிலாசைகளை நிறை "வேற்றி வைக்கக் கூடியதுமான தீர்வைத் தரத்தயாராக இல்லை என்பதையே கடந்த காலப்பேச்சுக் காட்டி நிற்கிறது.

இது எதுவரை நீடிக்கப் போகிறது என்பது அரசின் அசமந் தத்தின் தோல்வியில்தான் இறுதியில் சென்றுமுடியும்.




# கண்காணிப்புக்குழு தட்டிக்கழிக்குமா...?

**சிறி. இந்திரகுமார்**

**யுத்த நிறுத்தத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தை அரசு புரிந்து கொண்டு தனது அடுத்த நகர்வை மேற்கொள்ளப் போகிறது என்பதிலும், கண்காணிப்புக்குழு இதற்கான தனது அதிகார வினைத்திறனுடன் கூடிய தீர்வை எவ்வாறு தேடப்போகிறது என்பதிலும் தான் கிழக்கில் தோன்றியிருக்கும் நிலைக்கு தீர்வை எட்டமுடியும்.**

**கண்காணிப்புக் குழுப்பிரதித் தலைவர் பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தது போல "உள்ளூர்த் தலைவர்கள் சந்தித்துப்பேசுவது இந்தப் போர் நிறுத்தத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்தது'' என்றால் கண்காணிப்புக்குழு சில துணிச்சலான காரியங்களில் ஈடுபட்டாக வேண்டும்.**

இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் டொன்புருவ் ஹொவ்டே யுடனான தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் சந்திப்பின் போது கருணாவை படையினர் பயன்படுத்தி வரும் விவகாரத்தைப் புலிகள் பாரதூரமான விவகாரமாகக் கருதுகிறார்கள் என்பது தெளிவுபட உணர்த்தப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தைப் புலிகள் எவ்வளவு தூரம் கடுமையாக நோக்குகிறார்கள் என்பதை உணர்த்தும் வகையில் கிழக்கில் படையினரிற்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் சந்திப்பினை ரத்துச் செய்யப்பட்டதன்மூலம் உணர்த்தப்பட்டுள்ளது.

இப்போது கருணாவின்



விவகாரம்தொடர்பான புலிகளின் நிலைப்பாடு கண்காணிப்புக்குழுவினருக்கு உணர்த்தப்பட்டதன் பின்னர் புலிகள் கண்காணிப்புக்குழுவின் அடுத்த கட்டச்செயற்பாடு எத்தகையதாக இருக்கப்போகிறது என்பதை எதிர்பார்ப்பர்.

இதில் கண்காணிப்புக்குழுவுக்கு ஒரு சவால் காத்திருக்கிறது. எப்படியென்றால் உலகில் இலங்கையிலேதான் யுத்தநிறுத்தம் செம்மையாகப் பாதுகாக்கப்படுகிறது என்ற நற்பெயருக்கு ஆபத்து வந்துவிடக் கூடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த யுத்த நிறுத்தம் ஒப்பீட்டில் செம்மையாகப் பாதுகாக்கப்படுவதில் புலிகளுக்கும், அரசுக்கும் எவ்வளவு பங்கிருக்கிறதோ அதேயளவு அதனை ஒரு ஒழுங்குமுறையில் பேணப்படக்கூடியதாகக்கண்காணிப்புக் குழுவின் உழைப்பு அதில் இருக்கிறது என்ற உண்மையும் தங்கியிருக்கிறது.

இந்தக் கண்காணிப்புக்குழுவின் பங்கு என்பது முரண்பாடுகளைத் தணித்தும், சில தவறுகளை கண்டித்தும் ஒழுங்குபடுத்தும் கண்காணிப்புக் குழுவினருக்கு இதை இலகுவாகச் செய்வதற்கு ஏதுவாக இருப்பது யுத்த நிறுத்தத்தோடு சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கிடையிலான சந்திப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் சாத்தியப்பாடாக்கப்பட்டு வருகிறது.

இப்போது இதில் சிக்கல் தோன்றியிருக்கிறது. புலிகள் இயக்கம் கிழக்கில் படைத்தரப்பினருடனான சந்திப்புக்களில் கலந்துகொள்ளப்போவதில்லை என அறிவித்திருப்பதன்மூலம் தோன்றியிருக்கிறது.

இந்தச் சந்திப்பினைப் புலிகள் நிராகரிப்பதன் மூலம் யுத்தநிறுத்தத்தின் பாதுகாப்புக்கான பங்கை அச்சத்துக்குள்ளாக்குகிறார்கள் என எண்ணத் தோன்றலாம்.

ஆனால் புலிகளுக்கு இந்த விவகாரம் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது என்பதை எவரும் இலகுவில் புரிந்துகொள்வர்.

புலிகள் யுத்தத்தை யுத்தமாகவே சீரியசாக மேற்கொண்டார்கள். சமாதானம் என்று வந்தபோது அதனையும் அவர்கள் சீரியசாகவே மேற்கொண்டார்கள்.

ஆக புலிகள் படையினருக்கு எதிரான யுத்தத்தின் முனைப்பில் நூறுவீதம் தங்கள் வினைத்திறனை வெளிப்படுத்தினார்கள். சமாதானத்திலும் புலிகள் தமது நூறுவீத அப்பழுக்கில்லாத பங்கை வழங்கினார்கள்; வழங்கிவருகின்றார்கள்.

ஆனால் அரசோ தனது எல்லா வல்லமைகளையும் போல யுத்தத்தையும், சமாதானத்தையும் ஒன்றாக்கி அந்த இலக்கை நோக்கி நகர வழியெதுவும் செய்யவில்லை.

இதன் ஒரு கட்டமாகப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவைப் பயன்படுத்தித் தனது நிழல் யுத்த அரங்கை தீவிரப்படுத்தத்தொடங்கியது.

இதன் விளைவு கிழக்கில் அமைதி இழக்கப்பட்டு, பல கொலைகளும் தாக்குதல்களும் தீவிரமடையத் தொடங்கின.

ஆனால் படைத்தரப்போ இதற்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லாததுபோல தப்பிக்கொள்ள முயன்றபோது பெண்புலிகள் நால்வர் கருணாவிற்குப்படைத்தரப்பு வழங்கும் ஆசியையும்., ஆதரவையும் தெளிவாக வெளிப்படுத்தினர்.

இதன் மூலம் புலிகளுக்கு தெளிவாக ஒரு செய்தியை உணரக் கூடியதாக இருக்கிறது.

கிழக்கில் தோன்றியிருக்கும் நிலைமைக்கு படைத்தரப்பே காரணமாக இருக்கும் போது அந்தப் படைத்தரப்போடு அமைதி பற்றியும் சுமுக நிலையை ஏற்படுத்துவது தொடர்பாகவும் பேசுவதன் மூலம் எத்தகைய பலனை கிழக்கில் பெற்றுவிட முடியும் என்ற நிலைப்பாட்டை புலிகளுக்குள் ஏற்படுத்தியுள்ளது.

புலிகளின் இந்த நிராகரிப்பு புலிகளின் நூறுவீத சமாதான பங்களிப்பின் இன்னுமொரு வடிவம்.

இதனை அரசு எந்த வகையில் புரிந்துகொண்டு தனது அடுத்த நகர்வை மேற்கொள்ளப்போகிறது என்பதிலும், கண்காணிப்புக்குழு இதற்கான தனது அதிகார வினைத் திறனுடன் கூடிய தீர்வை எவ்வாறு தேடப்போகிறது என்பதிலும் தான் கிழக்கில் தோன்றியிருக்கும் நிலைக்கு தீர்வை எட்டமுடியும்.

கண்காணிப்புக் குழுப்பிரதித் தலைவர் பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தது போல "உள்ளூர்த் தலைவர்கள் சந்தித்துப் பேசுவது இந்தப் போர் நிறுத்தத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்தது" என்றால் கண்காணிப்புக்குழு சில துணிச்சலான காரியங்களில் ஈடுபட்டாக வேண்டும்.

அதாவது புதிய அரசு பதவி ஏற்றதிலிருந்து யுத்தநிறுத்தத்துக்கு ஒவ்வாது செய்யும் சில நடவடிக்கைகளை பட்டியலிட்டு வெளிப்படுத்தப்படவேண்டும்.

இதனைக் கண்காணிப்புக்குழு செய்வதற்கு சில தார்மீக அடிப்படைகள் அந்தக் குழுவுக்கு உண்டு .

அதாவது சிறிலங்கா அரசின் சில முக்கிய அமைச்சர்களே கருணாவை படைத்தரப்பு பயன்படுத்துவதையும், கருணாவிற்கும் தமக்கும் தொடர்புகள் இருப்பதையும் வெளிப்படுத்தியிருக்கும் நிலையில் இது தொடர்பான ஒரு முடிவுக்கு வருமாறு முப்படைத்தளபதியும் நாட்டின் தலைவியும் என்றவகையில் சனாதிபதி சந்திரிகாவைக் கோரலாம்.

கண்காணிப்புக்குழு இந்த விவகாரம் முற்றி புரையோடி சத்திர சிகிச்சைவரை சென்றாகவேண்டும். என எதிர்பார்த்தால் இது சமாதானத்தின் உயிர் மையத்தில்கூட சேதத்தை ஏற்படுத்தலாம்.

இதுசில வேளைகளில் கண்காணிப்புக்குழுவுக்கு ஒரு அதிர்ச்சித் தோல்வியையும் ஏற்படுத்திவிடக்கூடும்.

இந்த நிலையில் கண்காணிப்புக் குழு முன் இந்த விவகாரத்திற்கான ஒரு உரிய முடிவை எட்ட வேண்டிய கடப்பாடு இருக்கிறது.

ஆனால் கண்காணிப்புக் குழுவினரோ. தங்களால் புலிகளின் குற்றச்சாட்டை நிரூபிக்க முடியவில்லை என்றும் இதனை புலிகள் புரிந்து கொண்டு மனம் மாறுவார்கள் எனத் தெரிவிப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆனால் கருணா சிறிலங்கா அரசின் கோட்டைக்குள்ளேதான் பாதுகாக்கப்படுகிறார் என்று படைத் தளபதிகள் முதல் அரச அமைச்சர்கள் வரையான கூற்றுக்களிலிருந்து வெளியாகியுள்ளது.

யுத்த நிறுத்தம் பேணப்படுவதற்கு அடித்தளமாக இருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்துக்களின் படி பேச்சுத் தரப்பான அரசு-புலிகள் இரு தரப்பினைவிட ஏனைய எல்லா மாற்றுக்குழுக் களிடமிருந்தும் ஆயுதம் களையப்படவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறாயின் கிழக்கில் நடக்கும் தாக்குதல்கள் கருணா குழுவினரின் செயல் எனின் கருணாவை பாதுகாக்கும் அரசு தானே கருணா குழுவினரிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும்.

அரசு இவ்வாறு செய்யவில்லையாயின் அரசு தானே புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் புறம்பாக யுத்தநிறுத்தத்தை ஆபத்தின் விளிம்புக்குக் கொண்டு செல்கிறது. □

## நாற்றிசை நடப்புகள்



# மேற்கின் அணுகுமுறையும் ஆசியாவின் விழிப்புணர்வும்

ஐங்கரன்

நாகரிகங்கள் மீதான படுகொலைகள் மேற்காசியா முழுவதும் ஆரம்பித்துவிட்டன. இஸ்லாமியத் தீவிரவாதத்தை எதிர்த்து மேற்காசிய இஸ்லாமிய மிதவாத அரசியல் தலைமைகள் மேற்கு நாட்டுத் தலைமைகளுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துவிட்டன. ஆப்கானிஸ்தான், ஈராக், சவுதி அரேபியா, பாகிஸ்தான் என அனைத்து நாடுகளிலும் இஸ்லாமிய தீவிரவாதத்துக்கு எதிரான இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அமெரிக்கர்களையும், மேற்கு நாட்டவரையும் பாதுகாப்பதற்காக மிதவாத இஸ்லாமியத்தலைமைகள் தீவிரவாத இஸ்லாமிய தலைமைகள் மீது தாக்குதல் நடத்திவருகின்றன. குரானை முன்னிறுத்தி இஸ்லாமிய ஆட்சி முறையையும் அரசியல் அமைப்பு முறைகளையும் திட்டமிட்டு வந்த இஸ்லாமிய மிதவாதத் தலைவர்கள் மேற்குலகின் சட்டங்களுக்கும், ஆட்சி முறைக்கும் கட்டுப்பட்டு செயல்படுகின்ற ஒரு நிலை இன்று அரசியலில் அமுலாகிவருகின்றது.

இவ்வாறான அரசியல் ஆசியாவின் ஏனைய பிராந்தியங்களிலும் மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கப் பிரதேசங்களிலும் மேற்கு நாட்டவர் அமுலாக்கிவிட்டனர். இந்த நாடுகளில் மிதவாத அரசியல் தலைமைகளும், தீவிரவாதஅரசியல் தலைமைகளும் போரிட்டு உருவாக்க திட்டமிட்டதையும், இயல்பையும் அழித்த வரலாறு பல நாடுகளில் காணப்படுகிறது. சில நாடுகளில் தீவிரவாதம்நிலையான பரிமாணத்தை தக்கவைத்து வருகிறது. மக்களும் தீவிரவாதமும் ஒன்றிணைந்து சில வரலாற்றுச் செயற்பாடுகளைச் சாத்தியப்படுத்தியுள்ளன. ஆனால் அநேக நாடுகளில் மிதவாதம் மேற்குடன் இணைந்து ஆட்சியை தக்கவைத்தமையை அவதானிக்க முடிகிறது. இதே பாணியில் மேற்காசிய நாட்டுத் தலைவர்களும் தீவிரவாதத்தை அழித்து ஆட்சியில் குளிர்காய விரும்புகின்றனர். தீவிரவாதம் அழிக்கப்பட வேண்டியதென்ற மேற்குலகில் சித்தாந்தத்தையே இவர்கள் பின்பற்ற முயலுகின்றனர். இதனை மேற்கு நாட்டவர்கள் விரும்புவதுடன் அதனாலேயே மேற்காசிய நாடுகளை ஆளலாம் என்பதையும் ஏனைய ஆசிய நாடுகள் போன்று கையேந்தவைக்குமெனவும் கருதுகின்றனர்.

### ஆசிய மாநாடு

ஆசிய நாட்டுத் தலைவர்களிடம் புதிய அரசியல் விழிப்புணர்வு ஒன்று அண்மையில் ஏற்பட்டிருந்தது. சீனாவின் கிங்டோவில் ஆசியாவின் 21 நாடுகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் கடந்தவாரம் கூடினர். ஆசியாவின் தனித்துவத்தைப் பற்றிய சிந்தனை மிக நீண்ட காலத்திற்கு பின்பு நடந்ததுடன் மேற்கு நாடுகளின் கண்காணிப்பின்றி நிகழ்ந்த மாநாடாக அமைந்திருந்தது. இந்த மாநாடு முதற்தடவையாக பின்வரும் தீர்மானங்கள் பலவற்றை முன்னெடுத்தது.

01) ஆசியாவுக்கு உரித்தான புதிய உலக வர்த்தக அமைப்புக்கான ஏற்பாட்டை தொடக்குவதுடன் கூட்டாக செயற்பட முயலுதல்.

02) ஆசிய நாடுகள் தமது பிராந்திய நாடுகளின் தனித்துவத்தையும், முதன்மையையும் பேணும் பொருட்டு முதலீடுகளை ஆசியாவுக்குள்ளேயே மேற்கொள்ள வழிசமைத்தல்.

03) ஆசிய நாடுகளுக்கிடையே அரசியல் இராணுவ ஒத்துழைப்புக்களை உருவாக்குவதும் அதனால் கூட்டுத் தன்மையை சாத்தியப்படுத்த உழைத்தல்.

04) கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார உதவிகளையும், பரிமாற்றங்களையும், பரஸ்பரம் ஆசிய நாடுகள் தமக்கிடையே பகிர்ந்துகொள்ள முயலுதல்.

05) ஆசிய நாடுகளுக்கிடையே எரிசக்தி, கணனிமயப்படுத்தல், மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றங்களை சாத்தியப்படுத்த உதவுதல்.

என ஆசிய நாடுகள் ஒன்றாக சந்தித்து தீர்மானம் எடுத்துள்ளன. இது ஒரு ஆரம்பக்கட்டமாயினும், ஆசியாவின் தனித்தன்மையை இந் நாட்டுத் தலைவர்கள் உணர்ந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுமாயின் மேற்குலகம் ஆபத்தான கட்டத்தை அடையும். இத்தகைய சூழலை ஆசிய நாட்டவர்கள் அதிலும் சீனர்கள் அல்லது இந்தியர்கள் ஈடுபடுபவர்களாயின் உலக ஒழுங்குகள் யாவும் தலைகீழாக மாறும். மேற்குலகம் இதனை அனுமதியாது மட்டுமன்றி, முளையிலேயே கிள்ளிவிடும் நிலை உருவாகும். அது மட்டுமன்றி ஆசியாவுக்குள் ஏற்பட்டிருக்கும் இன, மத, மொழி பிணக்குள், எல்லையற்ற விதத்தில் காணப்படுவதுடன் தீர்க்க முடியாத நெருக்கடிகளையும் ஆபத்துக்களையும் மேற்குலகம் திட்டமிட்டு உருவாக்கி வருகின்றது. இவற்றைத் தாண்டி கிங்டோ மாநாடு வெற்றியளிக்குமாயின் ஆசியர்கள் அதிர்ஷ்ரசாலிகளாகவே மாறுவார்கள்.

### ஈராக் நிலைமை:-

ஈராக்கின் இடைக்கால அரசியல் ஆமை வேகத்தில் செல்ல தீவிரவாதத்தாக்குதல்கள் முயல் வேகத்தில் செல்கின்றது. தற்கொலைத் தாக்குதல்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரிப்பதுடன், அழிவுகள் பாரியளவில் நிகழ்ந்து வருகின்றன. ஒரே நாளில் பாக்தாத், பலூஜா, மொசூழ், ராம்டி ஆகிய நகரங்களில் தொடர்க்குண்டுத் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. இதில் 100க்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 300க்கு மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளாகி உள்ளனர். இதனைத்தொடர்ந்து ஈராக்கில் பல இடங்களில் தற்கொலைத் தாக்குதல்களும், ரொக்கட் தாக்குதலும் நிகழ்ந்துள்ளன. மனிதாபிமான உதவிகளுக்காக ஈராக்கிற்கு வருகைதந்த தென்கொரிய பிரஜை ஒருவரை பணயக் கைதியாக வைத்திருந்த தீவிரவாதிகள் அவரது கழுத்தைத் துண்டித்து கொலை செய்துள்ளனர். தென்கொரியத் துருப்புக்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும். ஈராக்கிற்கு மேலதிக துருப்புக்களை தென்கொரியா அனுப்பக்கூடாது எனவும் தீவிரவாதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை ஈராக்கிய தேசிய மாநாட்டுக்கான ஏற்பாடு நிகழ்வதுடன் அதில் இடைக்கால நிர்வாகத்திற்கான ஆலோசனைச் சபை ஒன்று அமைக்கப்படுவதுடன் சில அதிகாரங்களை இச்சபைக்கு கையளிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட உள்ளது. ஈராக் முழுவதிலிருந்தும் ஆயிரம் உறுப்பினர்களை திரட்டுவதுடன் நிரந்தர அரசமைப்புக்கான தேர்தல் இடம்பெறும்வரை இவ் ஆலோசனைச் சபையே நிர்வாகத்துக்கு ஆலோசனை வழங்கும் தேசிய சபையாகக்காணப்படும். ஆனால் இத்தேசிய மாநாட்டுக்கான அழைப்பினை ஷியா முஸ்லிம்களின் தலைவரான மெக்ராடா, சதார் நிராகரித்துள்ளார்.

இடைக்கால வரைபு ஒரு புறம் மறுபக்கத்தில் தற்கொலைத் தாக்குதல்களால் அமெரிக்க நிர்வாகம் அதிர்ந்துபோய் உள்ளது. எந்த அடிப்படையிலும் தீவிரவாதப் பிரச்சினையை தாம் தவறாக மதிப்பீடு செய்துவிட்டதாகவும் ஈராக்கில் தவிர்க்க முடியாத நெருக்கடி ஏற்பட்டுவிட்டதாகவும் அமெரிக்க வெளிவிவகார செயலாளர் கொலின் பவல் கூறியுள்ளார். இது அமெரிக்காவின் போட்டிக்கு பெரும் சவாலாக மாறியிருப்பதுடன் அதனை விரைவில் முறியடித்துவிடலாம் எனவும் அமெரிக்கத்தரப்பு கணக்குப் போடுகிறது.

### போர்க் குற்றத்திலிருந்து விலக்கு

உலகத்தில் வேறு எந்தப் படைக்கும் இல்லாத சிறப்பு அமெரிக்கப் படைக்கு வேண்டும் என அமெரிக்கா கோருகிறது. இது ஒரு அதிவிசேட இராணுவம் என்பது போலே அமெரிக்கர்களின் அர்த்தம் காணப்படுகின்றது போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச நீதிமன்ற விசாரணைகளிலிருந்து அமெரிக்க இராணுவ வீரர்களுக்கு விலக்களிக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ளது. இதனை பாதுகாப்புச் சபை நாடுகள் நிராகரித்துள்ளன. இது இரண்டாவது முயற்சியாகும். ஏற்கெனவே ஆப்கான் போரின் போதும் இத்தகைய பிரேரணை கொண்டுவரப்பட்டு பாதுகாப்புச் சபையால் நிராகரிக்கப்பட்டது. ஆனால் இத்தீர்மானம் என்றோ ஒரு சந்தர்ப்பத்தில் அமெரிக்கா நிறைவேற்றுவதாகவேயுள்ளது. அப்படியாயின் அமெரிக்க இராணுவத்தை சட்டப்படி எந்த நாட்டவரும் பிரஜைகளும் தாக்கமுடியாது. நாட்டைவிட்டு வெளியேற்றவும் முடியாது. சட்டப்படி அமெரிக்கத் துருப்புக்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு படையாகவே கருத முடியும்.

இத்தகைய அங்கீகாரம் இன்றியே முழு உலகத்தையும் அடிமைப்படுத்த முயலும் அமெரிக்க இராணுவம் போர்க் குற்றங்களில் இருந்து விலக்களிக்கும் பிரேரணை ஏற்கப்படுமாயின் உலகமே அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் வரும். ஐ.நா. சபையோ அல்லது அதன் பாதுகாப்புச் சபையோ இருப்பதில் அர்த்தமற்றதாகிவிடும். அமெரிக்க இராணுவத்தினதும் அதன் கட்டளை அதிகாரிகளினதும்அபுகிராய் சிறைச்சாலை சித்திரவதையை அவதானித்தால் அமெரிக்க இராணுவவாதத்தின் இயல்பை புரிந்துகொள்ளமுடியும்.

### பஞ்ச சீலமும் வெளிநாட்டு உறவும்


ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் முதல் பிரதமர் ஜவர்கல்லா நேரு சீனாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையே பஞ்ச சீலக் கொள்கையாகும். அதனை அன்றைய நேரு அரசாங்கம் தனது வெளிநாட்டு கொள்கையாகவும் பிரகடனப்படுத்தியது. அன்று முன்வைக்கப்பட்ட பஞ்சசீலக்கொள்கையின் அடிப்படையை மிக சுருக்கமாகப் பார்ப்போம்.

போரைத் தவிர்ப்பது, காலனித்துவத்திற்கு எதிராக அமைதியான முறையில் போராடுவது பரஸ்பரம் ஒத்துழைப்பையும் விட்டுக்கொடுப்பையும் உருவாக்குதல் இணைந்து செயலாற்றுவதன்மூலம் சுமுகத் தன்மையை ஏற்படுத்த முயலுதல், பரஸ்பரம் தலையிடாக்கொள்கையை பின்பற்றுதல் என இந்தியாவும்- சீனாவும் ஏற்படுத்திக் கொண்ட கொள்கையாகும். இதன் அடிப்படையில் நேருவின் வெளியுறவுக்கொள்கை காணப்பட்டாலும் சீனாவினால் மீறப்பட்டது. ஆனால் 1962 ஆம் ஆண்டுப் போரை நேருவே தொடக்கியதாகவும் சீனா அதற்கு பதிலாக செயற்பட்டே இந்தியாவுக்குள் புகவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பஞ்ச சீலத்தை நேருவே தளர்த்தார் என்ற வாதம் ஒரு புறமும் சீனாவே பஞ்ச சீலத்தை மீறி அருணாச்சலப் பிரதேசத்துக்குள் புகுந்ததாகவும் உலக வரலாற்றில் சுட்டிக்காட்டப்படுகிறது. இதற்கு வரலாற்று ஆய்வாளர்களே பதிலளிக்க வேண்டும்.

ஆனால் இன்று ஏன் பஞ்ச சீலம் மீண்டும் பேசப்படுகின்றது என்பதே முக்கிய கவனம் செலுத்த வேண்டியது. இந்தியாவை ஆளும் காங்கிரஸ் கூட்டணி தனது புதிய அரசாங்கம் புதிதாக எதையாவது சாதிக்கவேண்டும் என கருதுகிற தாக தெரியவில்லை பாகிஸ்தானை அழைத்து பேசுகிறது. தூரநோக்கற்ற, இராஜதந்திரம் இல்லாத அணுகுமுறைகளை பாகிஸ்தானுடன் பின்பற்ற முயலுகின்றது அவ்வாறே [சீ]னாவுடனும் பஞ்சசீலத்தை [நி]லைப்படுத்தி இந்திய - [சீ]ன உறவை அணுகப் பார்க்கிறது. பஞ்சசீலத்துக்கான ஐம்பதாண்டு நிகழ்வை பெரிது படுத்தும் புதிய அரசின் உள் நோக்கம் அயல் நாடுகளோடு சுமுக உறவை பேணுவதோ இல்லையோ, நேருவினதும், இந்திராகாந்தியினதும், ராஜீவ் காந்தியினதும் கொள்கைகளுக்கு மீள உருக் கொடுப்பதாகவே உள்ளது. பதவி ஏற்றதுடன் இலங்கை விடயத்தில் இந்திராவின் கொள்கையை பின் பற்றப் போவதாக புதிய அரசு கூறியது. பாகிஸ்தானுடன் சில்மா உடன்படிக்கையில் இருந்து பேசலாமெனக் கூறிய சீனாவுடன் பஞ்ச சீலக் கொள்கையிலான உறவெனக் கூறுகிறது. புதிய அரசாங்கத்துக்கென எந்த புதிய கொள்கையும் இல்லை என்பதே இதன் அர்த்தமாகும். இந்தியாவின் தலையிடாக்கொள்கைக்கும், அணிசேராமைக்கும் உட்படுத்தும் புதிய அரசாங்கம் வலிமையான அரசுகளுக்கு எதிராகவே

(18ஆம் பக்கம் பார்க்க)

### கரும்புலிகள் நாள் யூலை ~ 05



நாயகன் மனத்து தீபங்கள்
அறிந்தவர்க்கு
ஆலய கலசங்கள்
கவிகளுக்கு
ஈகத்து நிறை வடிவங்கள்
எதிரிக்கு கனவிலும் உலுப்பும்
காலன்கள்.

# நேர்நோக்கு

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இல்லாதொழிக்குமாறு கோரி ஜாதிக ஹெல உறுமய ஜே.வி.பி. ஆகியன தாக்கல்செய்த மனு நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட இவ் ஒப்பந்தத்தை ஆரம்பமுதலே எதிர்த்துவரும் இவர்கள் இந்த வழக்கின் பிரதிவாதிகளை இப்பொழுது மாற்றியமைத்துள்ளார்கள். அதாவது பிரதிவாதியாக ரணில் விக்கிரம சிங்கவிற்கு பதில் மகிந்தராஜபக்ச தற்போது உள்ளார்.

இதிலே குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், மகிந்த ராஜபக்ச மட்டுமல்ல அவரது தலைவி சந்திரிகா குமாரதுங்க உட்பட அவரது கட்சி இவ் ஒப்பந்தத்திற்கு எதிரானவர்களாகவே இருந்து வருகின்றனர். இவ் ஒப்பந்தம் ஏற்பட்டுவிடாது தடுக்கப்படாது இவர்கள் பாடுபட்டவர்கள்.

அத்துடன் இந்த ஒப்பந்தத்தைச் சீர்குலைக்கும் பல்வேறு நடவடிக்கைகளிலும்

## ஒப்பந்தம் மீதான தாக்குதல்கள்

தீவிரமாக ஈடுபட்டவர்கள். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் அவருக்கு மிகப்பலமான ஒன்றாக இருந்த சமாதான நடவடிக்கையின் அடித்தளமாக இருந்த இவ் ஒப்பந்தத்தைப் பலவீனப்படுத்தி ஒழித்துக் கட்டிவிடப் பகீரதமுயற்சி எடுத்தவர்கள்.

ஆனால் விடுதலைப் புலிகள் காட்டிய மிக அதீதமான பொறுமையும் ராஜதந்திரமும் இந்த ஒப்பந்தம் தொடர் காரணங்களாயிருந்தன. அதிலும் குறிப்பாக இந்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகளை மீறுமாறு செய்வதற்கே இவர்களால் தீவிர முயற்சி எடுக்கப்பட்டது. பல்வேறு ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் சீண்டல்கள் என்பன படையினரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்பு அமைச்சு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் வசம் இருந்தாலும் முப்படைகளினதும் தளபதி என்றவகையில் படையினரை இவ்விடயங்களுக்கு ஏவிவிடும் அதிகாரம் சந்திரிகா குமாரதுங்கவிற்கு இருந்தது.

இதனைப்பயன்படுத்தி ரணில்விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளில் ஒன்றாக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மீது தொடர் தாக்குதலை அவர் மேற் கொண்டார். எனினும் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைக் கவிழ்க்க அவரால் முடிந்ததே தவிர புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஒழித்துவிட முடியவில்லை.

இப்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் சிறுபான்மை அரசாக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதவியேற்றிருக்கிறது. பாதுகாப்பு அமைச்சை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்றவுடனேயே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மதிக்கா விட்டாலும்- ஏற்றுக் கொள்ளா விட்டாலும் அதனை நடைமுறைப்படுத்தவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. இதனால் அவர் அந்த ஒப்பந்தத்தை செயற்படுத்துகின்ற போதிலும் அதனைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையை கைவிட்டு விடவில்லை.

அவர் பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்று ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதை முற்று முழுதாகப் பெற்றுக்கொண்ட பின்னர் ஒப்பந்தத்திற்கு எதிரான பல நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டுவந்துள்ளனர்.

இவற்றிலே மிகவும் மோசமான நடவடிக்கையாக கிழக்கு மாகாணத்திலே கருணாவின் விவகாரம் உருவெடுத்துள்ளது.

கிழக்கிலே கருணா தனது குழப்பத்தை ஆரம்பித்தது முதல் இப்பொழுது கொழும்பிலேயிருந்துகொண்டு மேற்கொண்டு வரும் செயற்பாடுகள்வரை இவற்றுக்கு சிறிலங்காப் படையினதும் அரசாங்கத்தினதும் ஆதரவு இருந்து வருகின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஆரம்பம் முதலே கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே கருணா குழுவினரின் அராஜகச் செயற்பாடுகள் தீவிரமாக இடம் பெற்றிருப்பதும் அங்கு பின்னர் தொடர்ந்த புத்திஜீவிகள், ஊடகவியலாளர் படுகொலையும் இதனை நிரூபிக்கப்போதுமானதாகும்.

அதாவது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நிலை கொள்ளமுடியாது தப்பியோடிய கருணா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தஞ்சமடையவும் அங்கு தனது படுகொலைகளைத் தொடரவும் முடிந்தது என்றால் இதன் அர்த்தம் என்ன என்பதை அரசியல் அரிச்சுவடி தெரியாதவர் கூடப் புரிந்து கொள்ளமுடியும்.

எனவே புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வெளிப்படைக்கு செயற்படுத்திவருவதாகக் காட்டிவரும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த ஒப்பந்தத்தின் மீது மேற்கொள்ளும் பலமான இத் தாக்குதலை நிரூபிக்க இப்பொழுதுதேவையான ஆதாரமில்லாது இருக்கலாம். அதாவது கண்காணிப்புக் குழுத் தலைவர் கூறுவது போன்ற ஆதாரமில்லாது இருக்கலாம் ஆனால் ஒரு வகையிலும் அது நிரூபிக்கப்படாத ஒன்று அல்ல என்பதும் வெளிப்படையாகும்.

ஆனால் வெளிப்படையாக இந்தப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீக்கக் கோரி மனுத்தாக்கல் செய்திருப்பதைவிட இது மோசமான செயற்பாடாகும். ஏனெனில் இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் சட்டபூர்வமானதா? என்பதனை ஆராய்ந்து அதன் முடிவை நீதிமன்றம் வெளியிடக் கூடும். ஆனால் அதன் மீது மறைமுகமாகவும் பாரதூரமான முறையிலும் மேற் கொள்ளப்படும் தாக்குதல்கள் விபரீத நிலைக்கே இட்டுச்செல்லும் என்பதில் ஐயம் எதுவுமில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக தமிழர்களின் தலைமைகளுடன் செய்து கொள்ளப்பட்ட முன்னைய ஒப்பந்தங்கள் காலத்துக்குக் காலம் மீறப்பட்டு கைவிடப்பட்டமை வரலாறு. அந்த மீறல்கள் காரணமாகவே தமிழ் மக்கள் நடத்திய உரிமைப் போராட்டம் தீவிரமடைந்தது. மென்முறை ரீதியான போராட்டம் தோல்வியைத் தழுவ ஆயுதப் போராட்டம் வளர்ச்சியடைந்தது. இதனை முறியடித்துவிட தீவிர முயற்சிகளை சிங்கள அரசுகள் எடுத்த போதும் அவற்றில் வெற்றி பெறாத நிலையில் இடையிடையே சமாதானப் பேச்சுக்களுக்கும் உடன்பாடுகளுக்கும் அவை வந்தன. ஆனால் அவற்றின் போதெல்லாம் அவை ஏமாற்ற முனைந்தனவே தவிர முழுமனத்துடன் செயற்படுத்த முயலவில்லை.

இவ்வாறான மோசமான நயவஞ்சக நடவடிக்கைகள் தமிழரின் போராட்டத்தை முறியடிக்க அவற்றுக்கு உதவவில்லை. மாறாக வளர்க்கவே பயன்பட்டன.

இப்பொழுது ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் செயற்பாடுகள் பழைய சூழலையே ஞாபகப்படுத்துகின்றன. சமாதான முயற்சிகளின் அடித்தளமாகவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பிலுள்ள ஒரு தரப்பாகிய புலிகள் அதனை உறுதியாகச் செயற்படுத்த மறுதரப்பு அதற்கு பல்வேறு வழிகளிலும் ஊறுவிளைவிக்கும் நடவடிக்கைகளை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் மேற்கொண்டுவருகிறது.

இன்றைய அரசாங்கத்தின் முக்கிய பங்காளியான ஜே.வி.பி. வெளிப்படையாகவே செயற்பட அரசாங்கம் மறைமுகத் தாக்குதலை தொடுத்திருக்கிறது. இதன் முடிவும் கூட வெளிப்படையானதே என்பதை கடந்த கால நிகழ்வுகளிலிருந்து புரிந்துகொள்ளமுடியும்.

**வேலவன்**

---

### கரும்புலிகள் நாள் யூலை - 05



துயர் தந்தோர் கதைமுடிக்கும்
பெருமகள் இவள்
நாளை அன்னை மண்ணின்
• உயிர்ப்பொருள்.

---

## யாழில் கல்வி என்பது அடிமை சாசனப் பொறியா?

யாழ்ப்பாணத்தில் படையினரின் அக்கறையும் கரிசனையும் சமீபகாலமாக அதிகமாக தமிழ் மாணவர்களின் பக்கம் திரும்பியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் படையினர் ஆக்கிரமித்தபோது எந்த இளம் சந்ததியினரை குறிவைத்து சமூகவிரோத செயல்களில் அவர்களை நாட்டம் கொள்ள வைக்கக்கூடியதாகவும், மாணவர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான கொலை, பாலியல் வல்லுறவு போன்றவற்றை புரிந்தவர்களும், ஊக்குவித்தவர்களும் இதே படையினர் இப்போது நீலிக் கண்ணீர் வடிக்கத்தொடங்கியுள்ளனர்.

இதற்கு படையினர் பக்கபலமாக பயன்படுத்துவது அவர்களின் கட்டுப்பாட்டிலிருக்கும் யாழ் F.M வானொலியாகும்.


அண்மையில் யாழ் F.M வானொலியூடாக யாழ்.படைத்தலைமையகம் இரண்டு விளம்பரங்கள் ஒலிபரப்பின. இவை இரண்டு விளம்பரங்களையும் பார்ப்போம்.

ஒன்று, ஆசிரியர்களுக்கான விளம்பரத்தில் இளைய சமுதாயத்தினர் பாதைமாறிபோகும் வகையில் சில அரசியல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது போலவும் இதிலிருந்து மாணவர்களை பாதுகாத்து மாணவர்களை கல்விமீதான அக்கறையை செலுத்துமாறுகோரியிருந்தன.

இரண்டாவது மாணவர்களுக்கானது, மாணவர்கள் எந்த அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபடாது கல்வியில் மட்டும் தங்கள் கவனத்தை செலுத்த வேண்டும் எனவும் 'கோழைத்தனமாக இறந்தவர்களின் நினைவு நிகழ்வுகளில் கலந்துகொண்டு பாதைமாறி மாணவர்கள் செயற்படக் கூடாது எனவும் யாழ் படைத் தலைமையகம் யாழ் F.M ஊடாக விடுத்திருந்தது.

மேலோட்டமாக படையினரின் இந்த விளம்பரம் மாணவர்மீது படையினர் கொண்டுள்ள அக்கறையா? என கேட்கக்கூடும். ஆனால் படையினரின் தமிழ்மாணவர்மீதான கடந்தகால மறக்கமுடியாத வரலாற்றுப் பாடங்கள் இன்றும் தமிழர் மனங்களில் பசுமையாகவே உள்ளது.

இன்று இலங்கையில் நடக்கும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான



போராட்டமே, தமிழ் மாணவர் மீது கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறைதான் என்பதையும், அதனால் மாணவர்களே இந்த விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள் என்பதையும் மறந்துபோய் யாழ்.படைத்தலைமையகம் தமிழர் எள்ளிநகையாடக்கூடிய செயலில் ஈடுபட்டுவருகிறது.

இதனைவிட தமிழ் மாணவர்கள் கல்விமீது அக்கறைகொள்ளுமாறு கோரும் யாழ். படைத்தலைமையின் கீழ் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் எத்தனை பாடசாலைகள் இராணுவ வலயத்துக்குள் சிக்குண்டு கிடக்கிறது. அந்தப் பாடசாலைகளில் கல்விகற்க வேண்டிய எத்தனை ஆயிரம் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. இதற்கு யாழ் படைத்தலைமையகம் என்ன நியாயம் கூறப்போகிறது.

இவற்றைவிட எத்தனை மாணவர்கள் காணாமற்போயினர், படுகொலைசெய்யப்பட்டனர், எத்தனை பாடசாலைகளின் வளாகங்களில் இன்று துப்பாக்கிகளோடு படையினர் குந்தியிருக்கின்றனர். இவற்றிற்கு படைத்தரப்பு எத்தகைய விளக்கத்தை அளிக்கப்போகிறது.

இவ்வாறு தமிழ்மாணவர்கல்வி மீது தனது இராணுவ பாதங்களை அழுத்தப் பதியவைத்துக்கொண்டு, தமிழ் மாணவரின் கல்வி தொடர்பாக யாழ். படைத் தலைமையகம் பேசுவது தமிழர் செவிகளில் சாத்தான்களின் ஓலமாகவே ஒலிக்கிறது.

இன்றுவரை யாழ்ப்பாணத்தில் இளம் சந்ததியினரும் கல்வி மீதான ஆர்வமும் மதிப்பும் குறைந்து சமூகவிரோத செயல்களின் பக்கம் சென்றிருப்பதற்குப் படையினரின் திட்டமிட்ட செயற்பாடுகள் எத்தனையோ, ஊடகங்கள் மூலம் அம்பலத்துக்கு வெளிவந்தவண்ணமே உள்ளது.

யாழ்ப்பாணத்தில் போதைவஸ்து பாவனையும், ஆபாசப்படங்களின் வருகையும் என மாணவர்களின் கரங்களுக்கு இவை சென்றடையும்பிரதான மூலமாக படைத்தரப்பினரே இருந்துள்ளனர் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்த வகையில் உரிமையாலும், பண்பாட்டுவழித்தடங்களிலிருந்து திசைமாறிப்போக முயலும் இளம்சந்ததியினரை இந்த மண்ணின் மகத்துவத்தையும், அவர்களுக்கான புனிதத்துவத்தையும் அவர்களின் மனங்களில் நினைவு படுத்திக்கொண்டிருப்பது தமிழ் மக்களுக்கான உயிர் நீத்த தியாகிகளின் நினைவுகளுக்கு கணிசமான பங்குண்டு என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

சிறிலங்கா அரசு முதலில் எந்தக் கல்வியைப் பயன்படுத்தி தமிழரை அடிமைப் பதுமைகளாகப் பயன்படுத்த முனைந்ததோ, இன்று அதன் அவலத்தைதானே நேரில் அனுபவித்துவரும் நிலையில், மீண்டும் அதேகல்வியை தமிழர் மீதான அடிமைசாசனப் பொறியாகப் பயன்படுத்த முனைகிறது போலத்தெரிகிறது.

சிவில் நிர்வாகக்கட்டமைப்புக்குள் அடங்கும் கல்வித்துறையோடு சார்ந்த. மாணவச் சமுதாயத்தின் பக்கம் படைத்தரப்பின் பார்வை எந்த அடிப்படையில் திரும்பியிருக்கிறது.

இப்போது யாழ்மாவட்ட இராணுவத்தளபதியாக செயற்படும் சந்திரபால முன்பு வவுனியா மாவட்டத்தின் இராணுவத்தளபதியாக செயற்பட்டபோது அங்கும் மாணவர் மீது அவரின் பார்வை ஆழமாகப் பதிந்திருந்தமை கவனிக்கத்தக்கது.


இந்த நிலையில் யாழ் படைத்தலைமையகம் முதலில் மாணவர் மனங்களை வெல்ல வேண்டுமானால் அதற்கு முன் தன்னுடைய இராணுவ பிரசன்னத்தைக் குறைத்துக்கொண்டு மாணவர்கள் தத்தமது சொந்த வாழ்விடங்களில் மாணவர்கள் மாணவர்களாக வாழ வழி விடுதல் அவசியம்.

இல்லையேல் படையினரின் எத்தகைய காரியங்களினாலும் அவை தமிழ் மாணவர்களின் கோவங்களை மேலும் கிழறிவிடுவதாகவே அமையும்.

**நக்கீரர்**

# நறுக்கென...

## ஹெல உறுமயவினரின் சிபார்சு எதற்காக?



அட கடவுளே கருணாவுக்கு ஹெல உறுமயவினர் சிபார்சு செய்ய வேண்டிய பரிதாபநிலை ஏற்பட்டு விட்டது கவலைக்குரியதுதான்.

'கருணாவின் உயிருக்கு அரசு பாதுகாப்பு வழங்க வேண்டுமாம்' ஹெல உறுமயவின் கோரிக்கை இதுவாகும்.

ஒரு பிரதேசவாதியை பேரினவாதிகள் பாதுகாக்க முயல்வது வேடிக்கையான விடயம்தான்.

கடந்த பொதுத்தேர்தலில் யாழ். குடாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக சுயேட்சை அணிகளை அமைத்து போட்டியிட்டு வரலாற்றுப் பெரும் தோல்வியை வெண்றெடுத்த ஆனந்த சங்கரியார் அதிர்ச்சி தாங்காது புலம்பிய வேளையில் அவருக்குத் தமது தேசியப்பட்டியலில் இடம் கொடுத்து உறுப்பினர் ஆக்க ஹெல உறுமயவினர் முன்வந்தமை தெரிந்த விடயமே.

எப்படியோ எல்லா வகையிலும் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சகல தரப்பினரையும் தம்வசமாக்கி அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதில் ஹெல உறுமயவினர் காட்டும் அக்கறை தனித்துவமானதொன்றே........

தமிழ் மக்களின் போராட்டத்தை முனைமழுங்கச் செய்யும் சக்திகளை பேரினவாதத்தின் காவலர்களாகவே இவர்கள் பார்க்கின்றனர்.

ஏன் கதிர்காமரை சிங்களமக்களின் விசுவாசமான, நம்பிக்கைக்கு பெரு மகனாக ஏற்றுக்கொண்டு அவரின் தமிழின விரோதசெயல்களை பாராட்டி "முடிசூட்டும்" வகையில் பிரதமமந்திரி பதவியை(அதிகாரமில்லாத பொம்மை பதவிதான்) வழங்க நினைக்கவில்லையா........

ஆகக் "கருணா"வை எந்தப் பட்டியலில் பேரினவாதிகள் சேர்த்திருக்கிறார்கள் பார்த்திருக்கிறீர்களா?

இராணுவப் பாதுகாப்பைத்தானே ஏற்கனவே நாடி ஒளிந்து கொண்டுள்ள கருணா பேசாமல் ஹெல உறுமயவில் இணைந்து கொண்டால் புதுக்கட்சியை தொடங்கி அவமானப்படும் நிலை ஏற்படாது தானே...!

அப்படித்தான் அவர் புதுக்கட்சியை தொடங்கினாலும் கூட எதிர்காலத் தேர்தல்களில் ஈ.பி.டி.பி.,ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி),ஜே.வி.பி. ஹெல உறுமய, எம்.ஈ.பி, என பேரினவாதப் பெரும் அணி ஒன்றுடன் கூட்டுச் சேர்ந்து கொள்ள வாய்ப்பு அதிகம் உள்ளதல்லவா?



என்ன செய்வது தமிழின தனித்துவ அடையாளம் இழந்து விட்ட நிலையில் பேரினவாதத்தை சரணடைந்தாவது தனது இருப்பைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் கருணாவுக்கு ஏற்பட்டது... அவருக்கு அவரால் ஏற்பட்ட அவலமே.

கருணா அவர்களே ... பேரினவாதம் உங்களை பாதுகாக்க நினைப்பது கருணையினால் அல்ல என்பதை என்றாவது ஒருநாள் புரிந்து கொள்ளவே செய்வீர்கள்... அது காலம் கடந்த ஞானோதயமாகவே இருக்கும்.

## ஹெல உறுமய-ஜே.வி.பி அமைதிக்கான வேட்டு

நிபந்தனைகளின் அடிப்படையில் மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கத் தயாராம்.....!

ஜாதிக ஹெல உறுமயவினர் மீண்டும் முனகத் தொடங்கியுள்ளனர்.

அறுதிப் பெரும்பான்மையற்ற அரசு தனது பலத்தை நிரூபிக்க பகீரத முயற்சிகள் மேற்கொண்டு வருவது தெரிந்ததே...! அந்த வகையில் அமைச்சர் மங்கள சமரவீர ஜாதிகஹெல உறுமயவினரின் காலில் விழவேண்டி ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் வைத்து பௌத்த துறவிகளான ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நடந்த சங்கிராந்தியின் பின்னணியில் இயங்கிய ஜே.வி.பியினரின் நெருங்கிய தோழரான மங்கள சமரவீர ஹெல உறுமயவினரை சந்தித்ததும் அவருடன் இவர்கள் இரகசிய உடன்பாட்டிற்கு வந்ததும் ஹெல உறுமய சாதுக்களும் சாதாரண மூன்றாந்தர அரசியல் வாதிகள் தான் என்பதை நிரூபித்து நிற்கின்றன.

ஆக ஜே.வி.பி. யும் ஹெல உறுமயவினரும் ஒரே குட்டையில் ஊறும் மட்டைகள் தான். இரு தரப்பும் தனித்தனியாக முரண்பட்டாலும் பேரின வாத சிந்தனையுடன் இயங்குவதில் ஒருமைப்பாடான கொள்கைகளையே கடைப்பிடிக்கின்றன.

நாடாளுமன்றத்தில் தாங்கள் அவமதிக்கப்பட்டமைக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்டால் அரசுக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரவை வழங்க ஹெல உறுமய தயாராக இருப்பதாக கூறுவது ஒரு நாடக நிகழ்வேயாகும்.

எந்த வகையிலும் ஹெல உறுமயவினர் அரசுக்கு ஆதரவு தரும் நிலைப்பாட்டினை அரசுக்குள்ளான அதன் நுழைவாக அனுமதிக்க ஜே.வி.பி விரும்பாது. அது அரசுக்குள் தனது ஆதிக்க வலுவை பலவீனமாக்கிவிடும் என்றே ஜே.வி.பி நம்புகிறது.

அரசுடனான ஹெல உறுமயவின் நெருக்கம் எதிர்காலத்தில் தனக்கும் - சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான நெருக்கத்தை மட்டுமல்ல அரசியல் வெற்றிகளையும் பாதிக்கும் என்றும் ஜே.வி.பி. நம்புவதால் ஹெல உறுமயவின் வளர்ச்சியை சிதைக்கவே அதுவிரும்புகிறது.

தனது ஆதரவை அரசுக்கு நல்க ஹெல உறுமய விதித்துள்ள நிபந்தனை நிச்சயமாக சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு குறிப்பாக இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேச அரசு தீமானிக்கும் பட்சத்தில் - பெரும் தடையாகவே இருக்கும் என்பதில் ஐயமே கிடையாது.

ஆக... சனாதிபதி - ஜே.வி.பி -ஹெல உறுமய 'கூட்டு அமைதி முயற்சிகளுக்கு வைக்கும் வேட்டென' யாரோ சொன்னது நினைவுக்கு வரவே செய்கிறது.



## இருபக்கமும் உதைபடும் சமாதானப் பந்து

கடைசியாக அம்மணி இறங்கவேண்டிய நிலைக்கு இறங்கி வந்துவிட்டார் போல் தெரிகிறது.

அல்லது இறங்கி, வருவது போன்று, பம்மாத்து, விடுகிறாரோ என்றும் தெரியவில்லை.

ஆனால் இறங்கியே தீரவேண்டும் என்ற அழுத்தம் அம்மையாருக்கு நிறையவே - அதுவும் தவிர்க்கவே முடியாதபடி ஏற்பட்டுள்ளது என்பது மட்டும் உண்மை.

அவரைச்சுற்றிலும்...சுற்றிஎன்ன... அவரைத் தாங்கிநிற்பது சமாதான எதிர்ப்பு சக்திகள் தான்... இந்த நிலையில் அவரால் சமாதானப் பேச்சுக்களை அதற்குரிய வழியில் முன்னெடுக்க முடியுமா என்ற சந்தேகம் எல்லா மட்டத்திலும் இருந்தாலும் ஏதோ ஒரு வகையில் அதனை முன்னெடுத்துச் செல்வது போன்று பாவனை காட்ட வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டுள்ளது.

இல்லையேல் ஆட்சியை தொடர்வது அரசுக்கு கஷ்டமாக இருக்கும் என்பது உண்மையே....ஆனாலும் சமாதானத்தை முன்னெடுக்கும் அவரது முயற்சிகளுக்கு அவரது சகாக்களிடையேதான் கடுமையான எதிர்ப்பு இருப்பது தான் முரண் நகையான விடயம்!

ஒரு பக்கம் சர்வதேச அழுத்தம் சமாதானத்தை நோக்கி தள்ளுகிறது மறுபக்கம் சர்வவல்லமை மிக்கவர்களாக அரசை ஆட்டிப் படைத்து வரும் ஜே.வி.பியினரும், ஹெல உறுமயவினரும் அதற்கு எதிர்த்திசையைச் சுட்டிக்காட்டி அரசை அச்சுறுத்தி நிற்கின்றன.

சமாதானப் பந்து இரு பக்கமும் உதைபடுகிறது.

இடைக்கால நிர்வாகத்துடன் தொடர்புடைய பேச்சுக்களுடன் இறுதித் தீர்வு குறித்தும் பேச வேண்டும் என்ற யதார்த்தத்திற்கு முரணான நிலைப்பாட்டை இதுவரையும் வலியுறுத்திய சந்திரிகா அம்மையார் அதனை புலிகள் சாத்தியமற்ற தென நிராகரித்ததை அடுத்து சில வாரங்கள் மௌனம் சாதித்த பின் இப்போது இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேச இணக்கம் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

அப்படிச் சொல்லியாவது ...அதற்கான பேச்சுக்களை தொடரும் கால இழுத்தடிப்பை மேற் கொண்டாவது சர்வதேச நிதியுதவியை பெற்றுக் கொள்ள முடியுமா என அவர் முயற்சிக்கிறார் போல் தெரிகிறது.



வரவு செலவுத்திட்டம் வரப்போகின்றது. சர்வதேச நிதி பற்றிய உறுதியான பதில் கிடைக்காமல் அதனைத் தயாரிப்பது முடியவே முடியாத காரியம் என்பதால், சமாதானத்தை நோக்கி பொய்யாக வேனும் வலது காலை எடுக்க வேண்டிய தேவை சந்திரிகா அம்மையாருக்கு ஏற்பட்டுள்ளது காலத்தின் அழுத்தத்தின் பாற்பட்டதொன்றே.

நிதியின் தேவையின் பொருட்டு மேற்கொள்ளப்படும் சமாதானப் பேச்சுக்கள் நீதியை கொண்டு வருமா.?

## சந்தகிரியின் பயணம் சமாதானத்துக்கான அவலம்

இப்போது கடற்படைத் தளபதி அட்மிரல் தயாசந்தகிரி மீண்டும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் துடிக்கும் முனைப்புடன் செயற்படும் நபராக மாறியுள்ளார்.

முப்படைத்தளபதியும் சனாதிபதியுமான சந்திரிகாவின் அபரிமிதம் ஆதரவையும் ஆசியையும் பெற்றவரான சந்தகிரியின் கடந்த கால செயற்பாடுகள் ரணில் ஆட்சிக்காலத்தில் சமாதான முன்னெடுப்பு முயற்சிகளுக்கு ... குறிப்பாக போர்நிறுத்த உடன்பாட்டிற்கு... எவ்வளவு அச்சுறுத்தலாக விளங்கியது என்பதை கூறவேண்டியதேயில்லை.

சமாதான காலத்தில் சர்வதேசக் கடற்பரப்பில் பயணித்த விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பலை தாக்கியழித்தது முதல், கடற்பரப்பில் கடற்புலிகளின் போக்குவரத்திற்கு புரிந்துணர்வு உடன் படிக்கையை மீறும் வகையில் இடையூறு செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு விடுதலைப் புலிகளுக்கு சினமூட்டி அவர்களைப் போருக்கழைக்கும் நடவடிக்கைகளை நெறிப்படுத்திய புண்ணியவான் சந்தகிரியேதான்.

ஆனால் விடுதலைப்புலிகள் அந்த சினத்தை உள்வாங்கி சேமித்துக் கொண்டார்களேயொழிய அதனை உடனடியாக வெளிப்படுத்தி சமாதான முயற்சிகளை குழப்பாது பொறுமை காட்டியதால் சந்தகிரியின் மூலோபாயம் தோல்வி கண்டது....

அது சனாதிபதிக்கும் அப்போது ஏமாற்றத்தை அளித்தே இருந்தது. இப்போது மீண்டும் சந்தகிரி தனது போர்க் கோலத் தோற்றத்தை காட்ட முயல்கிறார்... அதுவும் அரச நல்லாசியுடன்.... இந்திய மற்றும் அமெரிக்க உதவியுடன்...

அடிக்கடி இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் செல்லும் இவரது பயணங்கள் அவருக்கு இலாபகரமானதாக...(பல்வேறு வகையிலும்) இருந்தாலும் நட்டம் என்னவோ சமாதானத்திற்குத்தான்.

அண்மையில் அமெரிக்கா சென்ற அவர் அமெரிக்க கடற்படை நடவடிக்கைகளுக்கான துணைத் தளபதியை சந்தித்து பேசியுள்ளார்.

அதுவும் சட்டவிரோத ஆயுதக் கடத்தலைத் தடுப்பது, துறைமுகங்கள் மற்றும் கடல் வலயங்களை பாதுகாப்பது, இலங்கையின் சமகால இராணுவ நிலவரம் என்பன குறித்தெல்லாம் பேசியுள்ளாராம்.

இந்தச் சந்திப்பு அமெரிக்க பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகமான பென்ரகனில் நடந்துள்ளது.

இந்தச் செய்தியானது வேறு பல தகவல்களையும் எமக்கு உணர்த்தவே செய்கிறது.

-கடற்படை ஒரு போருக்குத் தயாராகிறதா?

செங்குட்டுவன்

தலைதெறித்துக் கிடக்கிறார்கள் சிங்களத்தின் அமைச்சர்களும், அதிகாரிகளும் முழுப்பூசணிக் காயை வெறும் கோப்பைக்குள் மறைத்து வைத்துவிட்டுப்பூசணிக் காயும் கிடையாது கோப்பையும் கிடையாது எனச் சாதிக்கிறார்கள் அவர்கள்.

கொழும்பு அரசியலில் இரு பெரும் கட்சிகளும் சிங்கள இராணுவமும் ஆப்பிழுத்துவிட்டு மிலாந்திக் கொண்டிருக்கிறார்கள். தம்மைத் தற்காத்துக்கொள்ளவும் மறுதரப்பினரை மாட்டிவிடுவதற்காகவும் அவர்கள்விடும் அறிக்கைகளே மீளவும் அவர்களைச் சிக்கவைத்துவிடுகின்றன.

மட்டக்களப்பிலிருந்து முரளிதரனையும் (முன்னாள் கருணா) சகாக்களையும் கொழும்பிற்கு அழைத்து வந்தமையும் அடைக்கலங்கொடுத்துப் பாதுகாத்து பயன்படுத்திக்கொள்ளும் விடயமுமே இன்று இலங்கை அரசியலில் சுழற்சிப் புள்ளியாகிவிட்டது. சமாதான நடவடிக்கைகளின் முன்னெடுப்பின் முன்னே பூதாகரமான தடைக்கல்லாக இவ்விவகாரம் உருவாகி நிற்கிறது.

இவ்விடயத்தில் யார் யார் எவ்வாறான நிலைப்பாட்டில் இருக்கிறார்கள்? எவ்வாறு மற்றவருக்கு முதுகில் குத்துகிறார்கள்? என்பதல்ல இங்கே பிரச்சினை அது மிக வழமையான விவகாரம்தான். ஆனால் நாட்டின் இறைமை, பாதுகாப்பு, பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறைபாடு என்பன போன்றவிடயங்களை முன்வைத்து புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான காலத்தின் பின்னர் வானத்துக்கும் பூமிக்குமாக எகிறிக்குதித்த பலரும் இன்று வாய்க்குள் விரலைவைத்துச் சப்புக்கொட்டிக் கொண்டிருப்பதுதான் இன்றைய பிரச்சினை. இவர்கள் உண்மையானவர்களாக இருந்தால் இவர்களது மேற்படி 'பாதுகாப்பு' தொடர்பான அக்கறை உண்மையானதாக இருந்திருந்தால் பாதுகாப்பமைச்சரும் முப்படைகளின் தளபதியுமான சனாதிபதியின் மாளிகை முன்பாக இவர்கள் சன்னதமாடியிருக்க மாட்டார்களா? குற்றமிழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி நீதிமன்றத்தை நாடியிருக்க மாட்டார்களா? ஏன் எல்லோரும் அடக்கிவாசிக்கிறார்கள்? முரளிதரனும் சகாக்களும் தமது தரவைத்தளத்தை கைவிட்டு நாலாம் முச்சந்தியில் அலிசாஹிர் மௌலானாவுடன் சேர்ந்துகொண்டார்கள். தம்புள்ளையில் இந்த நபர்கள் பிரபல உணவகம் ஒன்றில் உணவருந்தியிருக்கிறார்கள். இவர்களை உணர்ந்துகொண்ட உணவக உரிமையாளர் வெளிக் கதவுகளை மூடியதாகப் பத்திரிகைகள் தெரிவித்தன. (கவனியுங்கள் உணவகத்தின் உரிமையாளரான சாதாரண நபர் ஒருவரே இவர்களை அடையாளங் கண்டுகொண்டார்)

தன்னுடன் வந்தவர்களைக் கொழும்பில் படையினரிடம் ஒப்படைத்ததாக அலிசாஹிர் மௌலானா தெரிவிக்கிறார். முரளிதரனுக்கு சில இராணுவ அதிகாரிகள் 'தமது தனிப்பட்ட உரிமையின் அடிப்படையில்' உதவியிருக்கிறார்கள், பாதுகாப்பளித்திருக்கிறார்கள் என ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப்பேச்சாளருமான மங்கள சமரவீர தெரிவிக்கிறார். ஆனால் இது அரசுக்கு எவ்விதத்திலும் தெரிந்திருக்கவில்லை என்பது அவரது நிலைப்பாடு. பாதுகாப்பமைச்சின் செயலாளர் அமைச்சரின் கூற்றுக்கு மாறான கருத்தைக் கொண்டிருப்பதோடு, அவ்வாறு பாதுகாப்பு வழங்கிய அதிகாரிகள் யார் எனக் கண்டு பிடிக்கப்பட்டால், அவர்கள் மீதான புகார் என்னவெனத் தெரிவிக்கப்பட்டால், அவர்கள் மீது விசாரணை நடத்தலாம் என்கிறார். இராணுவத்தளபதியோ இராணுவத்துக்கு இவ்விவகாரத்தில் எவ்விதத்தொடர்புமே கிடையாது எனக் கைவிரிக்கிறார். அரசாங்கத்தில் முக்கிய அமைச்சரான டக்ளஸ், தான் இன்னமும் முரளிதரனுடன் தொலைபேசித் தொடர்பை பேணிவருவதாக வெளிப்படையாகத்தெரிவிக்கிறார்.

கடந்த வாரத்தில் வெளியான மேற்படி தகவல்கள், அறிக்கைகளே கொழும்பைக் கலக்கிக்கொண்டிருக்கும் நடைமுறை அரசியல் விடயங்கள். ஏற்கனவே அலிசாஹிர் மௌலானாவின் பதவியை இது பழிவாங்கிவிட்டது. மௌலானாவின் அரசியல் எதிர்காலத்தையே அது பலியெடுக்குமோ தெரியவில்லை. ஆனால் மௌலானாவுடன் இந்த அரசியல் சுழல் அடங்கிவிடவில்லை. அது இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளையே பழிவாங்கிவிடுமோ? என்பதே அனைவரினதும் இன்றைய அச்சமாகும். ஆனால் அதுவல்ல எமது இப்பந்தியின் நோக்கின் மையம்.

ஒரு குரங்குப்பாஞ்சான் குளமுகாமை மையமாக வைத்து திருகோணமலையின் பாதுகாப்பே கேள்விக்குறியாகிவிட்டதாக பூச்சாண்டி காட்டியவர்கள், ஊர்வலங்கள் நடத்தியவர்கள், நாட்டின் எதிர்காலமே பாழாகிப் போய் விட்டதாக துள்ளியவர்கள், அதையே சாக்காக வைத்து அமைச்சுக்களை அன்றைய அரசாங்கத்திடம் பறித்துக்கொண்டவர்கள், எல்லாம் இன்று எங்கே போய்விட்டார்கள்?.

தற்கொலைப் படையாளிகளின் ஒரு அங்கி 'கண்டெடுக்கப்பட்ட மைக்கே' அல்லோல கல்லோலப் படுபவர்கள், தமது தலைநகருள் நிறைந்த போர் அனுபவமுள்ள 15 நபர்களைக் கொண்ட வாகனத் தொடரணி ஒன்று நுழைவதை எவ்வாறு அறியாதிருந்தார்கள்? முழு உலகத்துக்குமே முகந்தெரிந்த அவர்கள் கொழும்பில் ஏறக்குறைய இரண்டரை மாதங்களாக 'மறைந்துவாழ்வதை' பாதுகாப்புத் தரப்பினர் அறியாதிருப்பார்களாயின் சிறிலங்காவின் புலனாய்வு சேவைகள் எந்தளவுக்கு வினைத்திறனாகவுள்ளன? இதைப்பற்றி 'தேசத்தைப்பாதுகாப்பவர்கள்', 'தேசத்தின் மீது பற்றுக்கொண்டவர்கள்' எல்லோரும் பேசாதிருப்பது முறையானதா?

இவ்வாறான நபர்களுக்கு சில இராணுவ அதிகாரிகள் உதவியிருப்பது உண்மை என ஒரு மூத்த அமைச்சர் தெரிவித்திருக்கும் நிலையில்: அந்த குறித்த இராணுவ அதிகாரிகள் குறித்து விசாரணை நடத்தாமல் இருப்பது எவ்வகையில் இராணுவச் சட்டங்களுக்கு ஏற்புடையது? இவ்வாறான அதிகாரிகளைக் கண்டறிவது யார்? அத்தோடு இந்த அமைச்சரிடம் இராணுவம், பாதுகாப்பமைச்சு, பாதுகாப்புப் படைகளின் தளபதியான சனாதிபதி ஆகியோர் ஏன் இன்னமும் விளக்கம் கோரவில்லை?

இராணுவத்தளபதி இராணு அதிகாரிகள் எவருமே இவ் விவகாரத்தில் சம்பந்தப் பட்டிருக்கவில்லை எனத் தெரிவித்திருப்பதால் அமைச்சர் மங்கள சமரவீர இதுகுறித்து தனது நிலைப் பாட்டை தெளிவாக்க வேண்டாமா? அத்தோடு இராணுவத்தின் மீது அவதூறு தெரிவித்தமைக்காக இராணுவத்தளபதி, பாதுகாப் புத்தரப்பு ஆகியவை ஏன் நடடிக்கை எடுக்கவில்லை?

புலிகளுடன் முரண்பட்டு வெளியேறிய ஒருவர் கொழும்பில் கரந்துறைய அனுமதிக்கப்படுவது இயல்பாகவே கொழும்பை "நடவடிக்கைகளுக்கான களம்" ஆக்கிவிடக்கூடியதேயல்லவா? இதை அரசு அனுமதிப்பது குறித்து சிங்கள மக்கள் என்ன கருதுகிறார்கள்? அவர்கள் இதனை அனுமதிக்கிறார்களா? இவ் விடயத்தில் பத்திரிகையாளர்களின் நிலைப்பாடு என்ன?

தனக்கு இன்னமும் முரளிதரனுடன் தொலைபேசித் தொடர்புண்டு என்று தெரிவிக்கும் அமைச்சர் விசாரிக்கப்படத் தேவையற்றவரா? அவருக்கு வந்த தொலைபேசி அழைப்புக்களையோ, அல்லது அவர் அழைத்து உரையாடிய தொலைபேசி இலக்கத்தையோ பரிசீலிப்பதன் மூலம் முரளிதரனின் இருப்பிடத்தை அறிந்துகொள்ளமுடியாதா?

அலிசாஹிர் மௌலானாவின் பாதுகாப்பு அதிகாரிகளான பொலிசார், தாம் முரளிதரனையும் சகாக்களையும் கொழும்புக்கு அழைத்து வந்தது குறித்து தமது மேலதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கமாட்டார்களா? அது பற்றி பொலிஸ்மா அதிபர் என்ன நடவடிக்கை எடுத்தார்?


உண்மையில் இந்தக் கேள்விகளெல்லாமே அர்த்தமற்றவை என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது போல பூசணிக் காயை வெறுங் கோப்பையுள்ளே மறைக்க முனைபவர்கள். இவ்வாறுதான் செயற்படுவார்கள் இவர்களது உரையாடல்களும் நடவடிக்கைகளும் "யாருமே உடுக்காத ஆடையை உடுத்தியபடி" நிர்வாணமாக வீதியிலே ஊர்வலம் போன அரசனைத்தான் ஞாபகப்படுத்துகின்றன அல்லவா?

# முழுப்பூசணிக்காயும் கோப்பையும் அவை எழுப்புகின்ற கேள்விகளும்

பு.சத்தியமூர்த்தி




ஒரு குரங்குப்பாஞ்சான்குளமுகாமை மையமாக வைத்து திருகோணமலையின் பாதுகாப்பே கேள்விக்குறியாகிவிட்டதாக பூச்சாண்டி காட்டியவர்கள், ஊர்வலங்கள் நடத்தியவர்கள், நாட்டின் எதிர்காலமே பாழாகிப் போய்விட்டதாக துள்ளியவர்கள், அதையே சாக்காக வைத்து அமைச்சுக்களை அன்றைய அரசாங்கத்திடம் பறித்துக் கொண்டவர்கள், எல்லாம் இன்று எங்கே போய்விட்டார்கள்?.



## கரும்புலிகள் நாள் யூலை ~ 05



காற்றிலும் நீரிலும்
நீர்வரைந்த
ஊன்மப்புள்ளிகளால்
இங்கே வரையப்படும்
தமிழீழம்.



## மண்ணின் மைந்தர்களின் கதை

# அண்ணாவின் பிள்ளையாக அன்னை மண்ணின் மடியில்

உயிரைப் பிளியும் அந்த நிமிடங்கள் கண்முன்னே தோன்றித்தோன்றி கவலையை அதிகரிப்பதா கவே இருக்கிறது. எங்கே அந்த நிமிடம் திரும்பியும் வந்துவிடுமோ! என்றே எண்ணத்தோன்றுகிறது. நிச்சயமாக அந்த சில நிமிடங்களில் பார்த்த, அந்த கொடூர நிகழ்வும் கேட்ட துன்பகரமான குரல்களின் அடையாள ஒலியும் இனியும் கனவிலும் வரக்கூடாது என்பதே மன ஓட்டமாகவிருந்தாலும், தனது சாவின் ஊடே புதியதொரு சரித்திரம் எழுதிவிட்டுச் சென்ற அந்த வீரத்தின் நாயகியை என்னென்று மறக்கமுடியும். தனது சாவின் ஊடே சரித்திரம் எழுதிய அந்த சரித்திரமான வளை என்னவென்று மறப்பது என்பதற்கு விடைகான முடியாமல் இருக்கிறது.

ஐயோ! என்ர அம்மா நான் காயப்பட்டுட்டன்... தயாளினி அக்கோய்... தயாளினி அக்கோய்... ஓடி வாங்கோ... என்று அழைத்தபோதெல்லாம், தனது சக்தியை மிஞ்சிய உயிரோட் டமுடன் ஓடோடிவந்து தூக்கி! மடியில்கிடத்தி! எங்கனேயம்மா காயம், எவ்விடந்தில செல்லம் சொல்லடா! என ஆயிரம் தாய்மையின் அன்போடு கேட்டறிந்து, தாய்மையின் தாதியாகி மருந்திட்டு நோகாத வார்த்தை சொல்லி ஊசிபோட்டு தானாகத் தூக்கிச் சென்று போர் ஊர்தியில் ஏற்றிவிட்டு, போட்டுவா செல்லம் என கையசைத்து வழியனுப்பி வைத்த எங்கள் மேஜர் தயாளினி அக்காவிற்கா இந்த நிலை.

ஓயாத எறிகணை மழை போல் தூவும் போதும், ரவைகளும், குண்டுகளும் காற்றலை போல் வந்து தூக்கியபோதும் காப்பெடுத்து... காப்பெடுத்து... ஓடோடிவந்து, தனது உயிரையும் பாராது பலநூறு காயக்காரரை காப்பாற்றிவிட்டு, வீரச்சாவடைந்த உடல்களை உடனுக்குடன் சரிசெய்து பாதுகாப்பான இடத்தில் அடுக்கி போர் ஊர்தி வந்ததும் பிள்ளைகள் வாங்கோ, என் செல்லங்கள் ஓடி வாங்கோ...என்றும், அண்ணாக்கள் ஓடி வாங்கோ.... என்று ஓயாத குரல்கொடுத்து, திடமான கட்டளைவழங்கி வீரச்சாவடைந்த தோழர்கள் உடலை களத்திலிருந்து வெளியேற்றிய எங்கள் தயாளினி அக்காவிற்கா! இந்த நிலமை என எண்ணியபோதே தலை வெடித்து சிதறுவதாய் உணரமுடிந்தது.

நிச்சயமாகீ எதுவுமே நடந்திருக் காது என்ற பொய்மையான எண்ணத்துடன் நாமிருந்த வேளைதனிலே நிச்சயமாக எல்லாமே நடந்து முடிந்துவிட்டிருக்கவேண்டும், ஏனெனில் தயாளினி அக்கா நிலைகொண்டிருந்த காவலரண் பக்கமாக பாரியவெடிச்சத்தங்களும், வேட்டோசையுடன் எழுந்த புகை மண்டலமும் இத்தாவில் எங்குமே பரவத் தொடங்கி சற்று நேரம் ஒரு செத்தவீட்டின் கோலத்தை உணர்த்தியது. நிச்சயம் ஏதோ ஒரு இடர்வரவு எமக்காகக் காத்துக்கிடக்கிறது என எண்ணத் தோன்றியது.

இருநூறு வருட எதிரியின் ஆக்கிரமிப்புச் சின்னமாக... இலங்கை இனவாதிகளின் கொடூர சைத்தான்களின் அகம்பாவத்துடன், தமிழர் தாயகத்தில் அகன்று விரிந்து கிடந்த ஆனையிறவை மீட்பதற்கான யுத்தம் குடாரப்பு தரையிறக்கத்தின் ஊடே தொடங்கப்பட்ட நாளிலிருந்து சரியாக 04ஆம் நாள் சோதியாபடையணியின் மருத்துவப்போராளியாக இருந்து களமாடிக்கொண்டிருந்த வீரவேங்கை மேஜர் தயாளினி ஓட்டமும் நடையுமாக வியர்த்துக் களைத்து தோளிலே மருத்துவப்பையுடனும், மார்பிலே ரவைக்கூட்டு அங்கியுடனும் ஒரு கையில்தனது சுடுகருவியுடனும், மறுகையிலே நடை பேசியுடனும் சண்டைக்கான கட்டளையை தெளிவாக... மிகமிகத் தெளிவாக வழங்கிக்கொண்டிருந்தார். கண்டிவீதியை அண்மித்த பகுதிகளில் சண்டை உக்கிரமடைந்துகொண்டிருந்தது. இப்போது இத்தாவில் தாக்குதல் குறியீட்டு வியூக அமைப்பை சுற்றிலும் சிறிலங்காவின் இராணுவம் தொடர்ந்து முன்னேறியவண்ணமும் படைகலன்களுடன், ஏராளமான படையினரும் குவிக்கப்பட்ட வண்ணமே இருந்தது. சண்டை ஓய்வடைந்து வெற்றி கிடைத்த பின்புதான் இத்தாவில் பகுதியின் 03 பக்கங்களிலும் எம்மைச் சுற்றி 20,000 படையினர் இருந்ததாக அரச, அரசசார்பற்ற ஊடகங்கள் தெரிவித்தன. இதனை அடிப்படையாகக்கொண்டு இத்தாவில் சரித்திரச் சமர் எப்படியான இடர் நிறைந்த போராக இருக்கும் என்பதை வாசகர்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.



இத்தாவில் சண்டைக்கென சோதியா படையணியின் அணிகளுக்கு நடவடிக்கைப் பொறுப்பாளராக வந்த (கொம்பனி 1ம்,2ம் நிலை அணித் தலைவர்கள்) தவிர்க்கமுடியாத நிலை ஒன்றினால் களத்தைவிட்டு வெளியேறிய உடனேயே மேஜர் தயாளினி அவ்விடத்திற்கான நேரடிக் கட்டளை அதிகாரியாக மாறிவிடுகிறாள். கெரிலாப் போர்முறை தந்தையான மாவீரன் சேகுவேரா எடுத்த முடிவையே தானும் எடுக்கிறாள். தனது மருத்துவப்பையை பிறிதொருபோராளியிடம் கொடுத்துவிட்டு, ஏற்கனவே பிடித்திருந்த தனது சுடுகருவியை மேலும் பன்மடங்கு அழுத்தமாகப்பிடிக்கிறாள். சோதியா படையணியின் முதன்மையான பொறுப்பாளராகவும், முதிர்சசியுடன் கூடிய செயலாற்றல் அனுபவமுள்ள மருத்துவப்போராளியாகவும், பெரும்பாலான ஈழச்சமர்களில் பங்கேற்ற மேஜர் தயாளினிக்கான நேரம் வந்தாகிவிட்டதை உணர்ந்து புதிய உத்வேகம் கொண்டாள்.

மேஜர் தயாளினியின் உணர்வை, உழைப்பை, போரியல் அனுபவத்தை, செயற்திறனை எங்களால் பார்க்க இத்தாவில் சரித்திரச் சமரே மெய்மையான காட்சியாகியது. நாம் பார்த்த போதெல்லாம் தயாளினி சக போராளிகளுடன்

**க.மிரேச**

களப்பணிகளை செய்துகொண்டே இருந்தார். இத்தாவில் கள வாழ்க்கையின் இருபணிகளானது காலத்தின் தேவையாகவும், உயிர்ப்பின் விளிம்பாகவும் இருந்ததனால், இரவு பகலென பாராது, பசி,தாகம் என பாராது, சோர்வு, களைப்பு என சிந்திக்காது, இன்பங்களை கைவிட்டு இடர்நிறைந்த வாழ்க்கையை தேர்வுசெய்து அதிலேயே வாழ்ந்துகொண்டிருந்தாள். இத்தாவில் களத்தின் எவ்வேளையிலும் தயாளினியின் நெஞ்சிலே ரவை அங்கி படர்ந்திருக்க, அவள் எதிரியை நோக்கி சுட்டுக்கொண்டோ அல்லது நடைபேசியில் கட்டளையை உக்கிரமாக வழங்கிக் கொண்டோ, அல்லது மண்வெட்டி, கத்தி, கோடாளி, பிக்கான் என ஏதாவது ஒரு ஆயுதத்தை பிரயோகித்து, ஏதோ ஒரு வேலையை செய்துகொண்டோ இருப்பாள், பசியும், தாகமும் வாட்டினாலும் அதை பொருட்படுத்தாது உணவோ, தண்ணீரோ, பாணமோ கிடைத்தால் தான் அடேயப்பா என பருகிடும் சுபாவம் அவளிடம் இருந்தமையே இத்தாவில் சமரில் அவள சரித்திரம படைக்க ஏதுவாய் இருந்தது. மேஜர் தயாளினி பொறுப்பேற்றதிலிருந்து எதிரியின் ஓயாத சண்டைகளுக்கு முகங்கொடுத்த வண்ணமே இருந்தாள். மயிர்சிலிர்க்கும் அந்தக் கொடிய போரிலே தயாளினி ஒவ்வொரு வித்தியாசமான வியப்பான சண்டையை செய்த வண்ணமே இருந்தாள்.

தயாளினியக்கோய்... ஆமி கூட்டம் கூட்டமாய் வாறான்.... என்றதுமே அடி... விடாதே அடி.... என்ற கட்டளையும்,

சக தோழிகளிடம் எதிரியின் நிலையை அறிந்து எதுக்கு நேரே வந்திட்டான், சரியாக சொல்லுங்கோ, என்று கட்டளை வழங்கி, முடிவை கேட்டதும் ஏவு கருவி அணியுடன் சடுதியாகத் தொடர்பு கொண்டு, அதே இடத்தில் எதிரிக்கு சாவடி கொடுத்திடும் திறனாற்றல் அந்த மருத்துவப் புலிக்கு இயல்பாகவே இருந்தது.

கிட்டவந்திட்டான்... சுடு...சுடு... வேகமா சுடு... என்று சொல்லிச் சொல்லி ஆவேசத்துடன் எதிரியைச் சுட்டுத்தள்ளுவதும், அந்தா கும்பலாக வாறான் சுடுங்கடி... என்று சொல்லிவிட்டு தனது ரவை அங்கியிலுள்ள கைக்குண்டை எடுத்து மின்னல் வேகத்தில் எதிரியைநோக்கி கழற்றி எறிந்த அந்தக்குண்டு வெடிக்கின்ற நேரத்தில் தனது அணியிலுள்ள எல்லோரையும் சுடச் சொல்லி கட்டளையிட்டு தானும் எதிரியை நோக்கிச் சுட்டு, சமநேரத்தில் அந்த இடத்தில் காய மடைந்த போராளிக்கு, உடனே மருந்திட்டு சிகிச்சையளிக்கும் அளவுக்கு பதற்றமோ பயமோ இல்லாது செயற்படும் அதிசயமிகுந்த சக்தி தயாளினியிடம் இருப்பதை அவதானிக்க முடிந்தது. அதனை நிருபிப்பதாய் அமைந்ததே இத்தாவில் சண்டை.

09.04.2000. மாலை தளபதி பால்ராஜ் அடுத்தநாள் நடக்கப்போகின்ற சண்டையைப்பற்றி ஒரு கருத்துரையை அவரது கட்டளை மையத்தில் வழங்கினார். அதற்காக தளபதி துர்க்கா அவர்களுடன் மேஜர் தயாளினியும் வந்திருந்தார். கலந்துரையாடல் முடிந்து திரும்பிவரும்போது இரவு 9.30 மணிக்கு மேஜர் தயாளினியை கடைசியாகக் கண்டபோது நாளைய சண்டையில் நான் வீரச்சாவடைந்துவிடுவேன், நீங்கள் எல்லோரும் கட்டாயம் சண்டை முடிந்து எனது வீட்டிற்கு சென்றுவர வேண்டும் என்ற வேண்டுகோளுடன், தயாளினி மறைந்து போய்விட்டாள்.

10ம் திகதி காலை எல்லோரும் களநிலை விழிப்பில் இருக்கிறோம். எதிரி முன்னேறுவதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை, வழமையான போர் முழக்கங்கள் கேட்டுக்கொண்டே நேரம் நகர்ந்து கொண்டிருக்க,எதிரியின் பக்கமாக தூரத்தே இராணுவ கவசங்களின் பேரிரைச்சல் கேட்கத்தொடங்கியது. எதிரி முன்னேறுகிறான் என நாம் உணர்ந்து கொள்ளும் முன்பே, மேஜர் தயாளினியின் பக்கம் பாரிய வேட்டுச் சத்தங்களுடன் சண்டை தொடங்கிவிட்டது.

எதிரியின் அணிகள், யாழ்ப்பாணப் பக்கமாகவும், கிளாலிப்பக்கமாகவும் இருந்து உள்ளே நுழையும் சண்டையில் ஈடுபடத் தொடங்கவே எல்லாப் பக்கங்களிலும் சண்டை உக்கிர மடைந்தது. சண்டையின் முழுப்பக்கமும் சோதியா படையணிப் பக்கமாகவே இருந்தமையினால் மேஜர். தயாளினி சண்டையை வழிநடத்திக் கொண்டிருந்தார்.

தயாளினியின் குரல் நடைபேசியில் உறுக்கமாக, மிக தெளிவாக கட்டளையை வழங்கிக்கொண்டிருந்தார்.

பிள்ளையள் விடாதிங்கோ... விடாதிங்கோ...

ஒருவரும் பின்வாங்கவேண்டாம். தொடர்ந்து அடிபடுங்கோ...

இந்த இடத்தில நீங்கள் (அணித் தலைவர்கள்) சரியான முடிவு எடுக்கவேண்டும். இருந்த இடத்தில இருந்து ஒருவரும் பின்வராம சுடுங்கோ...

என்று தொடர்ந்து கட்டளையை வழங்கியவண்ணமே இருந்தார். அந்தப்பக்கமாகவே சண்டை தொடர்ந்தது. போராளிகள் விடாமுயற்சியுடன் சண்டை செய்து கொண்ருடிக்க, கனரக போர் ஊர்திகளின் தாக்குதல்கள் கடுமையானது. எதிரியின் தாக்குதல் கடுமையானது எதிரியின் கவசங்கள் எமது பாதுகாப்பு வேலியை கடந்து உள்ளே நுழைந்துவிட்டன... சண்டையின் நிலமையை உணர்ந்த எல்லாப் போராளிகளும். ஆவேசப் பாச்சலில் ஈடுபட்டனர்.

தயாளினி - தளபதி துர்க்காவிற்கு அறிவிக்கிறாள், அக்கா உள்ள வந்திட்டான் முடிந்தளவு தடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்ன கணத்திலேயே தயாளினியின் பக்கமாக 50 கலிபர் எதிரியை நோக்கிச் சட சடத்து ஓயும் போது பல கைக்குண்டுகளின் சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது அதன் பின்னாக. உந்துகணை ஒன்று வெடிக்கும் பாரிய சத்தம் கேட்ட சில விநாடிகளில் எதிரியின் கவசம் ஒன்று எரிந்துகொண்டே இத்தாவில் சந்தியை நோக்கி வேகமாக வந்து நின்றது. சிறிது நேரத்தில் அது வெடிக்க ஆரம்பித்தது. (அதுவே இன்று இத்தாவில் சந்தியில் நினைவுச்சின்னமாக நிற்கிறது)

தயாளினியின் உக்கிரமான எதிர்ப்பில் எதிரி பலபேர் செத்தபின்பும் எஞ்சியவன் முன்னேறிக் கெண்டிருக்க தயாளினியின் கரங்கள் ஓயாமல் சுட்டுக கொண்டேயிருந்தது. நடைபேசியில கட்டளை ஒலித்துக்கொண்டேயிருந்தது. மீண்டும் தயாளினி இருந்த இடத்தில் சண்டை உக்கிர மடைந்து, ஓய்ந்த போது, தயாளினியின் குரல் கேட்கவில்லை. மாறாக மணிமேகலையின் குரல் ஒலித்தது.

அண்ணா... தயாளினிஅக்கா.... என்று இழுத்தவள் நானும் காயப்பட்டுட்டன். எங்களை சுத்தி எதிரி நிற்கிறான் என்று சொன்னபோதே நடைபேசியில் வேட்டோசை கேட்டது. மணிமேகலையும் எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டாள்.

மேஜர் தயாளினிக்கு கலியாணம் பேசி முற்றாகி இருந்தது. எனவே நாம் சண்டைக்கு வரவேண்டாம் என்று சொல்ல,எனக்கு திருமணம் முக்கியமல்ல உயிரோட இருந்தால் எப்பவும் செய்யலாம். நாட்டின் விடுதலைதான் முதல் தேவை, எனவே இந்தச்சண்டையை நல்லாச் செய்து அண்ணாவிற்கு வெற்றியை ஈட்டித்தர வேண்டும் என்பாள்.

உண்மையில் தயாளினி தன்னைப் பற்றி என்றுமே சிந்திக்கவில்லை. மருத்துவம் செய்யும் போதும், சண்டை செய்யும்போதும் எல்லாம் இயக்கத்திற்காகவே ஓய்வில்லாமல் செய்து இறுதிமூச்சையும் ஈழவிடுதலைக் காகவே கொடுத்தாள். தயாளினி இத்தாவில் சண்டையில் அடிக்கடி ஒரு வசனம் சொல்லுவாள் சண்டைக்கு சென்று திரும்பினால் அம்மாவின் பிள்ளை, வீரச்சாவடைந்தால் நான் அண்ணாவின் பிள்ளை மேஜர் தயாளினி சொன்னது போலவே எந்த இலட்சியத்திற்காக தான் வந்தாளோ அதேபோல் தான் தனது இலட்சியப் பயணத்தில் வெற்றிகண்டு வீரச்சா வடைந்து எங்கள் அண்ணாவின் பிள்ளையாக தமிழீழ அன்னையின் மடியில் துயில்கிறாள்.



### கரும்புலிகள் நாள் யூலை - 05



*கல்லறையில் பெயர் இருக்காது*
*சொல்லியும் எவரும்*
*அழுவதில்லை*
*எம்மவன் என முடிவதில்லை*
*தொலைவிலிருந்து அழமட்டும்*
*முடிகிறது.*



தம்பலகாமம் எங்கும் நில வளமும், வயல் வெளிகளும் பரந்து கிடக்கின்ற புல்வெளிகளும், மண்ணும் கூட கண்களுக்குக் குளிர்மை தரும். இவ்விவசாயக் கிராமத்தில் ஏர்கிழித்த பச்சைவயல்வெளிகள். அவைகள் நெற்கதிர்களாகும் காலத்தில் பழுப்பு மஞ்சளான வயல்வெளிகளாக மாறும்.

இம்மாறிய இயற்கைச் சூழலில் பச்சைக்கிளிகள் கூட்டம், கூட்டமாக வயல்வெளிகளில்விழும் போது சிறுவர்கள், பெரியவர்கள் என கிளிக்காவல் செய்வார்கள்.

இவ்வாறான இன்னும் பல கிராமிய வனப்புக்களையும், சரித்திர ஏடுகளில் பதிவாகியுள்ள புராதன வரலாறுகளைக் கொண்டது இக் கிராமம்.

இச்சிறப்புமிக்க கிராமத்தில் சந்திரன் அண்ணன் தன் துணைவியார் ராஜேஸ்வரி, ஐந்து பிள்ளைகள், தங்கை பொன்னாள் ஆகியோருடன் பெரும் மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்.

அவர் தேக்குமரத் தேகத்தோடு தன் மாட்டு வண்டிலில் நெல் மூடைகளை அரிசி ஆலைக்குக் கொண்டு செல்வதும் ஆலையில் குற்றிய அரிசி மூடைகளுடன் வீடு வந்துசேரும் கிராமியத் தொழிலாளியாக இயங்கினார்.

அவர்தன் அன்றாட நிறைவான குடும்ப வாழ்க்கைக்காக உழைக்கும் போது, சுமை சுமந்த களைப்பினால் அவருக்கு உண்டாகின்ற மன உலைச்சலை துணைவியார், பிள்ளைகளின் அன்பு ததும்பும் கண்கள் இல்லாமற் செய்து விடும்.

இவ் வசந்தமான இயற்கைச் சூழலில் சந்திரண்ணன் களிப்போடு வாழ்ந்துவரும்போது, இன விரிசல்களால் தமிழர்கள் நிலை குலைந்து பலமிழந்தவர்களாக வாழ்ந்தார்கள்.

இதனால் தர்மம் தளர்ந்துவிட்ட நிலையில் அநீதியை எதிர்த்து புலிப்போராளிகள் போராட்டத்தினை முன்னெடுத்தார்கள்.

தமிழ் இனத்தின் விடிவைக் கருத்தில் கொண்டு போராட்டப் பணிகளை விரிவுபடுத்திவரும் புலிப்போராளிகளான குட்டிமணி, கஜேந்திரன், சுதர்சன், தீபன் ஆகியோர் 1985 களில் சந்திரண்ணனுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

இங்கு மாற்றுக் கருத்துடைய குழுக்களின் பணிகள் தீவிரமான காலமாக இருந்தபோதிலும் அண்ணனின் குடும்பத்தாரின் ஏகபோக ஆதரவு புலிப்போராளிகளுக்கே இருந்தது.

அண்ணனின் வீடு மறைமுகச் செயற்பாட்டிற்கான பாதுகாப்பான இடமாக இருந்து பின்பு நாட்கள் போகப் போகப் பகிரங்கமான ஓர் தளமாகவே மாறத்தொடங்கியது.

அக்காலத்தில் துப்பாக்கித் தோட்டாச்சாவுகள் ஊர் எங்கும் பரவி இருந்தது. எப்போதுமே ஊர்மக்கள் சாவின் முகத்தில் விழித்துக்கொண்டிருந்தார்கள்.

இத்தகைய ஆபத்தான கள நிலை இருந்தும் அவர்தன் துணைவியார், பிள்ளைகளின் நலன்கள் மீதான அக்கறைக்குமேலாகப் போராளிகளுக்கான பணிகள் மீதே நிரம்பப் பிரியமாக இருந்தார். இரவு பகல் பாராது அண்ணன் குடும்பத்தார் போராளிகளுக்காக பாடுபட்டார்கள்.

அண்ணனின் வீடு அரசியல் செயலகமாகவே இயங்கியது. அச்செயலகத்திற்குப் பெயர்ப்பலகை இல்லை. பதிலாக சந்திரன் வீடு என மக்கள் மனங்களில் பதிவாகியது.

மேலும் அண்ணன் வீடு போராளிகளுக்கான சமையற்கூடம், களஞ்சியம், வழங்கல், தங்குமிடம் என சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது.

மூதூரின் முன்னணிப் போராளிகளான கஜேந்திரன், நந்தன், சங்கர், சஞ்சய், ராஜேஸ் ஆகியோருடன் வரும் அனைத்துப்போராளிகளுக்கும் உணவு அண்ணரின் வீட்டில் தான்.

அண்ணரின் துணைவியார், தங்கை பொன்னாள், செல்லாச்சி அம்மா குடும்பம் அனைவரும் கூட்டுப்பொறுப்புணர்ச்சியு டன் சமையல் வேலைகளை மேற்கொள்வார்கள். நாதன் அதற்கான பொருட்களைக் கொள்வனவு செய்பவராக இயங்கலானார்.


இங்கு வருகிறவர்கள், போகிறவர்கள் அனைவருக்கும் தேனீர் கொடுத்தும், சாப்பாடு கொடுத்தும் அவரது வீட்டார் களைத்துப்போய் விடுவார்கள். சில சமயங்களில் பொறுமையின் எல்லைக்கே தள்ளப்பட்டாலும் மனநிறைவோடு செய்தார்கள். ஆதலால் அண்ணன் குடும்பத்தினர் மீது எப்போதும் போராளிகளுக்கு ஒரு பரிவு இருந்தது.

அண்ணன் தன் ஊரில் கொள்கைப் பற்றுள்ளவர்கள், உதவி செய்வதில் பின் நிற்காதவர்கள் எனப் புதிய முகங்களைப் போராளிகளுக்கு இனம் காட்டியதுடன், புதியபோராளிகள் ஒரு சிலரையும் இணைத்தும் கொடுத்தார். இது ஒருபுறம் இருக்க.

வீட்டாரும் தப்பிக்கொள்வார்கள். சிங்களப் படையினர் செய்யும் சித்திரவதைக்கொடுமைகள் கதை, கதையாக வெளியே வரத்தொடங்கின.

ஆனாலும் அண்ணனுக்குத் தமிழ் மக்களின் நலன் கண்முன் நிற்கும் போது தனிப்பட்ட நலன்கள் அனைத்தும் அவர் கண்ணுக்கோ, அறிவுக்கோ புலப்படவில்லை.

அண்ணன் போராளிகளின் முக்கிய செய்திகளைப் பரிமாற மூதூர் தளபதிகளிடம் செல்வதும், பின்னர் தளபதிகளின் முக்கியசெய்திகளைப் பரிமாறத்தம்பலகாமப்



# தாயகத்திற்காகவே உழைத்த தேக்கமரத்தேகம்

இ.கபிலன்

மறுபுறம் கடவானை, 98 கொலனி, கித்தூள் ஊற்று ஆகிய மூவிடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித்தாக்குதலுக்கான வெடிமருந்துக் கேன்களை அண்ணன் தன் மாட்டுவண்டியின் மூலம் பரிமாறிப் பங்காற்றினார். எத்தனை விதமான தடைகள், எத்தனை விதமான நெருக்குவாரங்கள், கடினங்களைச் சந்தித்தவாறே அப்பங்களிப்பைச்செய்தார்.

இந்தநகர்வு இராப்பொழுதில் செல்லவேண்டி இருந்தால் பார்தை மாறாது செல்வதிலிருந்து சேறும் தண்ணீரும் நிறைந்தசதுப்பு நிலத்தால் வண்டிலைப் புதையாது செலுத்துவதுவரை மிகச் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டி இருந்தது. எதிலும் தயங்காது, பின் வாங்காது எந்த வேலையையும் முடிக்கக் கூடிய ஆர்வம் மிக்கவர் இப்பணிகளின் போது அண்ணனின் உடல் களைப்பும், கண்களில் தூக்கமுமாய் இருக்கும். அதனால் வயல் குடில்களில் படுக்கையில் விழுந்து உறங்கிய பின் வீடுவந்துசேர்வார்.

அண்ணனிடம் போராளிகளால் ஒப்படைக்கப்படும் ஆயுதங்கள், வெடிப்பொருட்களைப் பாதுகாப்பான இடத்தில் பக்குவமாக மறைத்து வைத்து தேவை ஏற்படும் போது எடுத்துக்கொடுப்பார்.

அண்ணனுக்கு முஸ்லிம் மக்களுடன் பரவலான தொடர்பும், உறவும் இருந்ததனால் சிங்களப் படைமுகாம்களில் மேலதிக ஆளணி குவிப்புத்தொடர்பான தகவல்களை முன்கூட்டியே அறிந்து போராளிகளுக்குத் தெரியப்படுத்திவிடுவார்.

சிங்களப்படையாட்கள் ஊரைச் சல்லடைபோட்டுச் சலிக்கும் போதெலலாம் அண்ணனும் அண்ணனின் போராளிகளிடம் வருவதும் அவரது பணிகளில் ஒன்றாக இருந்தது. இப்பயணம் ஆறுகள், கங்கைகள் கடந்த நீண்ட நடைப்பயணமாகும். சிங்களப் படையினரின் பதுங்கித்தாக்குதலுக்குட் படக்கூடிய மிக ஆபத்தான வழிப்பயணமாகும்.

அண்ணனின் செயற்பாடுகளால் ஈர்க்கப்பட்ட மூத்த தளபதிகளான கணேஸ், புலேந்தி அம்மான் ஆகியோர் அண்ணனின் வீட்டுக்குச் சென்று குடும்பத்தார் அனைவரையும் சந்தித்து உற்சாகமூட்டினார்கள். அத்தளபதிகள் தமது வீட்டுக்கு வந்து சென்றது அனைவருக்கும் மகிழ்ச்சியே கொடுத்தது.

காலங்கள் நகர்ந்தன, புதிய பொறுப்பு நிலையில் உள்ள சரோன், அலோசியஸ், சந்தர் ஆகியபோராளிகள் வந்து தம் இயக்கப்பணிகளை 1986களில் மேற்கொள்ளத்தொடங்கினார்கள். அப்போராளிகளும் அண்ணனின் ஆதரவை அனைத்து வழிகளிலும் பெற்று தமது பணிகளைச் செய்து வந்தனர்.

அன்புள்ளம் கொண்டவர்களாக ஊர்மக்கள் இருந்ததனால் ஊரில் உள்ள ஒவ்வொருவரின் வீடும் போராளிகளது வீடுபோல் மாறியது. ஒரு கருத்தின் கீழ், ஒரு குடையின் கீழ் ஊர்மக்கள் ஒன்று திரளத் தொடங்கினார்கள். போராளிகளின் பசியைஅறிந்து தங்கள் பசியை மறந்து உணவு கொடுத்தார்கள்.

இத்தகையதொரு மக்கள் ஆதரவுத்தளம் உருவாக ஆரம்ப உந்து சக்தியாக அண்ணனும் ஒருவராக விளங்கினார்.

இம்மக்களது துன்பத்தை ஆழக்கிளறிய இடப்பெயர்வு 1986 இறுதியில் ஏற்பட்டதனால் அண்ணனும் தன் குடும்பத்தோடு மாதிரிக் கிராமத்தில் குடில் அமைத்து வாழ ஆரம்பித்தார். அவரின் வாழ்க்கையின் அடித்தளம் தகர்ந்திருந்தபோதிலும் போராளிகளுக்கான கடமையை உயிர்ப்பான சிந்தனை வீச்சோடு செய்யத்தவறவேயில்லை.

ஒரு நாள் கிண்ணியாவிலிருந்து சிங்கள இராணுவம் பொது சன உடையில் ஆயுதங்களை மறைத்தபடி இரு மாட்டுவண்டில்களில் வந்து மணியரசன்குளப் பாதையில் பதுங்கி இருக்கும் தகவலை அறிந்த அண்ணன் இரு புலிப்போராளிகளுக்குத் தெரியப் படுத்தியதனால் அவர்கள் இருவரும் காப்பாற்றப்பட்டார்கள். ஆனால் அத்தகவலை அறியாது வேறு பக்கத்தினால் வந்த ஈரோஸ் அப்துல்லா உட்பட இருவர் தாக் குதலுக்குள்ளாகிச் சாவடைந்தார்கள்.

இப்படியாக அவரது பணிகளுக்கு அப்பால் போராளிகளின் தங்குமிடம் சென்று தேவைகள் ஏதும் தன்னால் நிறைவேற்றவேண்டி உள்ளதா என்பதனைக் கூட அறிந்து அத் தேவைகளை நிறைவேற்றுவதிலும் கவனம்செலுத்தினார்.

இக்காலச் சுழற்சியில் தமிழர் களை பாதுகாக்க வென்று இந்தியப் படை வந்தது. ஒரு சில மாதங்கள் தமிழர்களுக்காகவே செயலாற்றுவதுபோல் இயங்கினார்கள். பின்னாளில் செய்த அக்கிரமங்கள், அதர்மங்கள் அதிகமதிகம் எங்கும் பலப்பல கைதுகள், சித்திரவதைகள், படுகொலைகள் எனத் தொடர்ந்தன.

இத்தகைய சூழலில் அண்ணன் இந்தியப் படையினரால் கைதாகி திருமலைநகர் சிறையில் ஒரு வருடம் கைதியாக வாழ்ந்தார். சிறைச்சாலை என்பது மகிழ்ச்சி நடமாடும் இடமல்ல. ஆதலால் அவர் கவலையால் பீடிக்கப்பட்டு மனம் வெதும்பியபடியே ஒவ்வொரு நாளையும் கழித்தார்.

அவர் தன் துணைவியார், பிள்ளைகளைப் பிரிந்து தனிமையில் வாழ்ந்ததனால் அவர் உள்ளத்தில் பெரும் பளுவைச் சுமப்பதுபோல் அழுத்தவே செய்தது. துணைவியாளும் தன் கணவனைச் சிறையில் பார்த்த சமயம் கண்களில் எழுந்த நீரை அடக்கிக்கொண்டார். துளிர்த்த ஓரிரண்டு பொட்டுக்களைத் துடைத்துக்கொண்டு கணவனின் கவலையைப் போக்க ஆறுதல் வார்த்தைகளை உதிர்த்துவிட்டு ஊர்வந்து சேர்ந்தார். இரு வருடங்கள் கழிந்த பின் தர்மத்தின் பலம் வெற்றிபெற அதர்மம் வீழ்ச்சி அடைந்தது. அண்ணனும் விடுதலையாகி தன் குடும்பத்தோடு இணைந்து கொண்டார். இவ்வளவு சுமைகளைச் சுமந்தும் போராளிகளுக்குச் செய்யும் பணிகளிலேயே அவரின் மனம் திருப்திஅடைந்தது.

தமிழரின் சுதந்திரத்திற்கான விடுதலைப்போர் இரண்டாவது கட்டப் போரை எதிர்கொண்டது. இக்காலப் பகுதியில் ஒருசில மாதங்கள் போராளிகளின் கட்டுப்பாட்டிற்குள் ஊர் இருந்தது. பிற்பாடு சிங்களப்படையால் ஊர் ஆக்கிரமிக்கப்பட்டதும் சிங்களஇராணுவ மயமாகியது.

ஊர்மக்கள் இழப்பதற்கு ஏதுமற்றும், தப்புவதற்கு வழியுமற்றும், சிங்கள இராணுவத்தினர் மத்தியில் சிக்கிப் பயப்பீதியுடன் கோயிலடி அகதிமுகாம் வாழ்க்கையினுள் வாழ்ந்தார்கள். அம்மக்களுக்குள் அண்ணன் குடும்பத்தாரும் கலந்தே இருந்தார்கள். இவ்வாறான சூழலில் சிவபாலன், மாணிக்கராசா எனும் இவ்விருசகோதரர்கள் உட்படப்பலர் சிங்களப் படையால் படுகொலைசெய்யப்பட்டார்கள். இதனால் மக்கள் மன இறுக்க நிலைக்குள்ளாகி மன உரசல்களுடன் வாழ்ந்தார்கள். இங்கு பொது நலவாதியான தில்லைநாதன் ஐயாவின் மக்கள்சேவை அனைவருக்கும் ஓரளவு ஆறுதலளித்தது. நிம்மதியையும் கொடுத்தது.

ஒரு நாள் அண்ணன் உயிராபத்தான எல்லையைக்கடந்து செல்ல முயற்சிசெய்தபோது சிங்களப் படையினரிடம் சிக்கிக்கொண்டார்.

அன்றுமாலை மெல்லமெல்ல நெருங்கியபோது தன்கணவன் இருட்டாகியும் வரவில்லை என அறிந்த துணைவியார், பிள்ளைகளின் முகத்தில் சற்று வருத்தச் சாயல் படர்ந்து கண்களிலிருந்து நீர் கலங்கி வழிந்தது.

கணவன் இன்று வருவார் நாளை வருவார் என நம்பிக்கையுடன் எதிர்பார்த்து இருந்த துணைவியாருக்கு தன் கணவன் சிங்களப்படையால் மர்மமாகக் கொல்லப்பட்டது உறுதியானதும் அவர் பைத்தியம் பிடித்தவரைப்போல் அமர்ந்திருந்தார். ஏதும், யாரும் அவரின் கண்ணில் தெரிந்ததாகத் தோன்றவில்லை. கண்ணீரைப் பொல,பொலவென உதிர்த்தா பிள்ளைகளும் அழுது புலம்பினார்கள்.

அண்ணன் தான் பிறந்த இனத்தின் உயர்வுக்காக சுயநலம் துறந்த இதயத்தோடு பொதுநலவாதியாக வாழ்ந்தார். குடும்பத்தில் வறுமையுற்ற போதிலும், ஆபத்தான சூழ்நிலை காரண மாகவும் போராட்டப் பணியை நிறுத்தாமல் தொடர்ந்து செய்த பெருமையுடைய வராகத் திகழ்கின்றார். அவரின்சாவு சரித்திரத்தை உருவாக்கியுள்ளதனால் சந்திரண்ணனை நினைவுகூர்வதில் தமிழீழம் பெருமை அடைகிறது.





# இளைய நாதம்

## சிந்தனைத் துளிகள் சில

01) அறிந்துகொள்: அல்லது அறிந்தோர்க்கு செவிசாய்த்து தெரிந்துகொள்!

02) ஆழ்ந்த அன்பு திடீரென மலர்வதில்லை: அதே போல்: மலர்ந்த அன்பு ஒருபோதும் அழிவதில்லை!

03) முன் எச்சரிக்கை: பின் விளைவுகளை பிரதி பலிக்கும்!

04) குறைந்தளவு பணம் நம்மைக் காப்பாற்றும் நிறைந்தளவு பணத்தை நாம் காப்பாற்ற வேண்டும்!

**அ.சோமேஸ்ராஜா**

## சொற்சிலம்பம் - 42

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| த | லி | ம் | ன | இ | ர் | பு |
| க | ம | ப | ல | ல | ள் | லி |
| கை | ன் | தா | த் | சு | வ் | ர் |
| ர | ற | ஆ | வி | கு | ப | ர |
| ப | ல் | ப் | த் | டு | வ | வ |
| பு | க் | பு | கூ | ஸ் | ட் | டு |
| சௌ | ம் | கோ | லி | க | ப | த |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 40 இன் விடைகள்

01. இல்லம்,
02. மனை.

01. கிணறு.
02. குளம்.
03. ஆறு.

### சொற்சிலம்பம் - 40 இன் பரிசுக்குரியவர்

சு.பிரியங்கா, தரம் -05,
மு/சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்,
புதுக்குடியிருப்பு.

### சொற்சிலம்பம் - 40 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. தி. ஜெயரூபி, யா/மீசாலை வீரசிங்கம், மகா.வித்தியாலயம்.
02. த.உதயபவன், 2ம் ஒழுங்கை, கோவில் புதுக்குளம், வவுனியா.
03. ப.சோதிகா, தரம்-03A, மு/விசுவமடு.ம.வி., விசுவமடு.
04. நா.முரளிகரன், இல.59,கல்விளான், துணுக்காய்.
05. உதயகுமார்.பதுஷா, தரம் -02B கிளி/மகா வித்தியாலயம்,
06. கோ.போசகாந்த், தரம்-04A, மட்டுவில் மேற்கு, பூநகரி.

01. பாலை எவற்றில் இருந்து பெறுகின்றோம்?
01) ................................
02) ................................

*சொற்சிலம்பம் - 42*
*ஈழநாதம்.*
*யாழ் சாலை.*
*கிளிநொச்சி.*

02. பூக்களின் மறுபெயர்கள்
01) ................................
02) ................................

பெயர் :- ................................

முகவரி :- ................................

................................

# எங்கள் கரடி

எங்களிலை நல்ல கறுப்பு - உடலில் அதிகம் உரோமம் கொண்டோரை கரடிஎன்றும் கூறுவார்கள். இங்கு எமது காட்டு விலங்கான கரடியைப்பார்க்கப்போகிறோம். எமது வரண்டகாடுகளில் உள்ள பயங்கரமான விலங்கு கரடி. உலகளவில் கரடிகள் பலவகை இனங்களில் உள்ளன. எமது கரடிகள் 'ஸ்போத்' என்றவகை இனத்தையுடையவை. உடம்பு முழுவதும் சடையாக கறுப்பு உரோமங்களைக் கொண்ட கரடியின் வாய்ப்பகுதி வெண்மையானதாகும். கரடியின் பலம் அதன் கால்நகங்களில்தான் உள்ளது. பெரியகூரியதாக கரடியின் நகம் இருக்கும். இந்த நகத்தினைக்கொண்ட கால்களை கைகளாக பாவித்து எழுந்து நிமிர்ந்து நின்று கரடிதாக்கும். மனிதர்கள கரடித் தாக்குதலில் இறந்தும் இருக்கிறார்கள். ஆண்கரடி 200கிலோ நிறையும் - பெண்கரடி 100கிலோ நிறையும் கொண்டது.

கரடியின் தங்குமிடம் இருண்டபகுதிகளாகவே இருக்கும். கரடிக்கு மோப்ப சக்தியும் - கேட்டல் சக்தியும் துல்லியமானது. ஆனால் அதன்பார்வை மங்கலாகவே இருக்கும். கரடியின் அவிமான உணவு நல்ல இனிப்பு, எம் காடுகளில் பாலைப்பழம், வீரைப் பழம் என்பன கரடியின் விருப்பமான சாப்பாடு. இதனால் பாலலமரங்கள் பழுக்கும் காலத்தில் எம்காடுகளில் கரடியின் நடமாட்டம் அதிகமாக இருக்கும். கரடிக்குமரம் ஏறும் திறமை இருப்பதால் மரம் ஏறி பழங்களைப் பறித்துச் சாப்பிடும். அத்தோடு தேன் காலத்தில் மரங்களில் ஏறி - தேன் வகைகளை பிரித்து தேனை பிழிந்து குடிக்கும். மரப்பொந்துகளிலும் இது தேன் எடுக்கும்.



வன்னிக்காடுகளில் தேன் எடுப்போர் கரடியின்பின்னால்சென்று தேன் வதைகளை காணுவர் என்றும் ஆண்கரடி - திரும்பிப்பார்க்காது பெண் கரடி என்றநினைப்பில் வதைகளை கொடுக்கும் என்றும் - அதைத்தேன் எடுப்போர் வாங்கிச் சேகரிப்பர் எனவும் புளுகுக்கதைகள் இருக்கின்றன. ஆனால் இது உண்மை இல்லை. மோப்ப சக்தியும் - கேட்டலும் துல்லியமான கரடிக்கு இந்தவிளையாட்டு சாத்தியமானதா? நம்காட்டுக்கரடி குளங்கள், ஆறுகளில் மீன்களையும் பிடித்துண்ணும். அத்துடன் கறையானும் கரடியின் உணவுதான். கறையான் புற்றைகிழந்து தன் வாயை வைத்து ஒரு உறிஞ்சு உறிஞ்சினால் கறையான்கள் உள் சென்றுவிடும். அத்துடன் ஈசல்களும் கரடியின் உணவுதான் கரடிகள் ஆண் - பெண் என சோடிகளாகவே வாழும்.

## கரும்புலிகள் நாள் யூலை ~ 05




யாககுண்டத்தில்
ஆகுதியாகச்
சொரிந்தீர் உம்மையே
அவிர் பாகமாய்க்
கிடைத்ததெமக்குச்
சுதந்திரக் காற்று.



கோ.கோபால ரஞ்சினி, தரம் -8
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி

# முயலாரின் பரிசு

பகுதி -03



# உள்ளூர் கைத்தொழில்களில் கவனம் திரும்ப வேண்டும்



சமூக பொருளாதார அபிவிருத்தி, கிராமிய பொருளாதார அபிவிருத்தி என்ற அடிப்படையில் அபிவிருத்தியை முன்னெடுக்கும் அல்லது முன்னெடுக்க முயற்சிக்கும் நிறுவனங்களையும் அதன் செயற்பாடுகளின் பொருத்தப்பாடுகளையும் ஆராய்வது இன்றைய சூழலுக்கு பொருத்தமானதும் அவசியமானதுமாகின்றது.

1990க்கு பின்பும் 96களுக்கு முன்பும் தமிழீழ சமூக பொருளாதார அபிவிருத்தியின் ஒரு பரிமாணம் வளர்ச்சிபெற்றிருந்தது அல்லது வளர்ச்சிக்கான அத்திவாரம் பலப்படுத்தப்பட்டு வந்தது. இதனை அடுத்து பல்வேறு இராணுவ நடவடிக்கைகளினூடாக ஏற்பட்ட இடப்பெயர்வு இந்த சமூக பொருளாதார அபிவிருத்தி கட்டுமாணத்தை முற்றாக அழித்து விட்டது என்பதுதான் உண்மை.

உள்ளூர் உற்பத்திகள் பல இந்த காலப்பகுதியில் பலம் பெற்று வந்தன. அத்துடன் உள்ளூர் உற்பத்திகளுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் புதிய உத்வேகம் அளிக்கப்பட்டுவந்தது. ஆனால் இன்று இதனுடைய கட்டுமாணம் முற்றாக சிதைந்து உள்ளூர் உற்பத்திமட்டம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இது சமூக பொருளாதார ஆய்வாளர்களின் ஆதங்கம்.

இந்த நிலை மேலும் நீடிக்குமேயானால் தமிழீழ சமூக பொருளாதார அபிவிருத்தியின் எதிர்காலம் என்னவாகும் என்பது தான் இது தொடர்பில் எழுப்பப்படுகின்ற கேள்வி.

1990களுக்குப் பின் ஏற்படுத்தப்பட்ட கிராமிய பொருளாதார கட்டமைப்பின் ஊடாக உள்ளூர் உற்பத்திகள் பல ஊக்குவிக்கப்பட்டன. உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு சில நிறுவனங்களும் உருவாக்கப்பட்டன. இதற்கென ஆரம்பிக்கப்பட்ட தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம் இதற்கு ஒரு உதாரணம். இந்த நிறுவனம் உள்ளூர்உற்பத்தியாளர்களின் விபரங்களை திரட்டி சமகாலத்தில் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான வழிவகைகளையும் ஆலோசனைகளையும் அவ்வப்போது வழங்கி வந்தது.

அந்தக் காலப்பகுதியில் உள்ளூர் உற்பத்திகளின் மேம்பாட்டைப் பொறுத்தளவில் கிராம மட்ட மக்கள் உள்ளூர் உற்பத்திகளினூடாக ஊக்குவிக்கப்பட்டார்கள். சிறு கைத்தொழில், தும்புத்தொழில், நெசவு, பாயடித்தல் போன்றன அவற்றுள் சிலவாகும். இன்று இவைகளின் தொழிற்பாடுகள் கேள்விக்குறியாகியுள்ள நிலையில் அதன் உற்பத்திகளும் உற்பத்தியாளர்களும் மழுங்கி விட்டார்கள். அல்லது மழுங்கடிக்கப்பட்டார்கள் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

வன்னியை பொறுத்தளவில் இதன் பாதிப்புகள் வெகுவாக உற்பத்தியாளர்களை பாதித்துள்ளது. 1990 - 1996 வரையான காலப்பகுதியில் உள்ள உள்ளூர் உற்பத்திகளின் வளர்ச்சிகளை திரும்பிப்பார்ப்போமாயின்,

தும்புத்தொழில் ஊக்குவிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பல கிராமிய மட்ட மக்கள் நன்மையடைகின்றனர்.

விசுவமடுப் பகுதியில் சவற்கார உற்பத்தி நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு "அமுதன்" எனும் பெயரில் சவற்காரம் உற்பத்தி செய்யப்பட்டது. அது இன்று இல்லை.

"சுரபி" எனும் பெயரில் மென்பானம் உற்பத்தி செய்யப்பட்டது அது முகவரி இன்றி முடிந்து போனது.

உள்ளூரில் பால் உற்பத்தி பொருட்கள் தயாரிக்கப்பட்டன கிளிநொச்சி துணுக்காய்ப் பகுதிகளில் இந்த தயாரிப்பு நடைபெற்றது அதுவும் பின்னர் செயலற்றுப்போனது.

இவ்வாறு சமூக பொருளாதாரத்திற்கென நிறுவப்பட்ட கட்டமைப்புக்கள் பல செயழிழந்துபோயின இவ்வாறான திட்டங்களுக்கூடாக வேலைவாய்ப்பு பெற்றவர்களது கதியும் அதோ கதியாய் போனது.

ஆனால் இப்பொழுது தும்பு உற்பத்திப் பொருட்கள், பால் உற்பத்திகள், உள்ளிட்ட அனைத்து உற்பத்திகளும் தென்னிலங்கையிலிருந்து தாராளமாக இறக்குமதியாகின்றன. இதன்பின் இந்த உற்பத்தியாளர்களின் மன ஆதங்கத்தை இந்த பத்தியின் மூலம் மட்டும் வெளிப்படுத்தமுடியாதுள்ளது.

தென்னிலங்கையிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு ஈடாக இந்தக் கைத்தொழிலாளர்களின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படவில்லை.

ஆனால் பொருளாதார தடை நீக்கத்திற்குப் பின்பு உள்ளூர் கைத்தொழில் செயற்பாடுகள் நவீனத்துவம் பெறுவதற்குக் குறிப்பிட்ட சில நிறுவனங்கள் அடித்தளம் அமைத்திருக்க வேண்டும். இவை அதனை செய்யத்தவறியது ஏன்?

இப்பொழுது உள்ளூர் கைத்தொழில் செயற்பாடுகள் அனைத்தும் அடிமட்ட நிலைக்கு சென்றிருக்கின்றது. இதனை மீள ஆரம்பிப்பதற்கு குறிப்பிட்ட நிறுவனங்கள் எத்தகைய மீள் திட்டங்களை வைத்திருக்கின்றன.

இப்பொழுது தும்புத்தடி விளக்குமாறு தொடக்கம் உள்ளூரில் உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்திகளுக்குக் கூட தென்னிலங்கை வரவுகளை எதிர்பார்த்து இருக்க வேண்டிய நிலைக்கு சமூகம் தள்ளப்பட்டிருக்கிறது.

பால் உற்பத்தியை பொறுத்தளவில் பால்பொருள் உற்பத்தி நிறுவனம் ஒன்றை வடதாயகத்தில்நிறுவுவதே சாலப்பொருத்தமான விடயமாக தென்படுகின்றபோதிலும் பால் கொள்வனவு செய்யப்பட்டு அது தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்வதற்குத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான கொள்வனவு மையம் ஒன்று மாங்குளத்தில் அமைத்து வருவதாகவும் தகவல்,

எனவே உள்ளூரிலுள்ள அடிப்படை வளங்கள் தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டு இவை மீளவும் உற்பத்திப் பொருட்களாக எமது பிரதேசத்திற்கே அனுப்பப்படப் போகிறது.

இது எமது பிரதேசத்தில் ஒரு பாரிய திட்டமாக முன்னெடுக்கப்படுமாயின் பண்ணையாளர்கள் உட்பட மூலவளங்களின் உற்பத்தியாளர்களும் பயனடைவர். அது மட்டுமன்றி பலருக்கு வேலைவாய்ப்பும் ஏற்பட்டதாக அமையும்.

அடிப்படையில் ஆடம்பரம் என்ற போர்வையிலும் பொருளாதார முடக்கம் என்பதனாலும் வன்னியிலுள்ள மனித வலுவும் கூட வேறு பிரதேசங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இந்த சூழலில் பலருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டங்கள் நடைமுறைப் படுத்துவது அவசியமாகிறது. எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் அதிக அக்கறை எடுக்கவேண்டும்.

சமூகத்திற்கு மாசடையும் உற்பத்தி என பரப்புரை செய்து கொண்டிருக்கும் போதே, "சொப்பின் பாக்" தயாரிப்பகம் ஒன்றை நிறுவுவதற்கு கூட ஒரு நிறுவனம் முழுமூச்சுடன் செயற்பட்டது. இவை எல்லாம் சமூக நலனுடன் ஒப்பிடும்போது அவ்வளவு ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை. எனவே அடிமட்ட பொருளாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும், ஏந்து நீர்ப்பாசனம் செயலிழந்துள்ளபோதிலும் இன்னும் பட்டையில் நீரிறைத்து செய்கை பண்ணும் விவசாயிகளின் பக்கம் பார்வை திரும்ப வேண்டும்.

ஆகவே ஆடம்பரப் போக்குகள் இருந்தாலும் கூட அடிமட்டத்திற்கு சமூக நிறுவனங்களின் பார்வை திரும்பவேண்டும்திரும்புமா?

தேவி

---

# ஏ9-ஏரம்பு

சு. ஞாலவன்



*"தொட்டனைத்தூறும் மணற்கேணி -மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு" என்று வள்ளுவப் புலவர் வாய்மொழி அருளியிருக்கிறார். இப்படிப்பட்ட நம் சிறந்த இலக்கியங்களிலிருந்து தருணத்திற்கேற்றவாறு ஒரு அடியை இழுத்து விடுவது தானா "கற்றனைத்தூறிய" அந்த அறிவு? அறிவு என்பதனால் நாம் எதனைப் புரிந்து கொள்கிறோம்? அறிவூட்டுதல் நடைபெறும் நிகழ்வுகள் யாவை? என்றெல்லாம் பலவாறான நியாயமான கேள்விகள் நம் முன்னே எழக்கூடும்! எழ வேண்டும்! ஏனென்றால் அறிஞர் ஒருவரின் வாக்கிற்கு ஒப்ப 'நாம் எப்படி இருந்தோம் என்பதல்ல எப்படி இருப்போம் என்பதே நம் பலம்' என்பது மறுக்கமுடியாத உண்மை. "நாம் எப்படி இருப்போம்" என்பது, "நாம் எப்படி இருக்கிறோம்". என்ற அடித்தளத்தில் தங்கியுள்ளது. ஆக நிகழ்கால நடப்பிலே நாம் நம் இருத்தலைக் குறித்து பலவாறான கேள்விகளையும் கேட்டுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகிறோம்.*

*பாரதியாரின் தந்தை பெயர் தாய் பெயர் படித்த பாடசாலை இறந்த-பிறந்த திகதிகளை மனனம் செய்து கேட்ட மாத்திரத்தே விரல் நுனியில் வைத்து விடை சொல்வதுதான் "அறிவூட்டல் என்பதன் கீழ் நாம் எதிர்பார்க்கும் தகைமை. இதைத்தாண்டி அந்த யுகக்கவிஞன் மூட்டிய தீயினையும் அவன் சந்தித்த தடைகளையும் இறுதியில் 13பேர் மட்டுமே கலந்துகொண்ட அந்த மகாகவியின் மரணச்சடங்கினையும் கொஞ்சம் உள்வாங்கிப் பார்ப்பது அன்றாட அறிவியலிற்கு அப்பாற்பட்ட அவரவர் சம்பந்தப்பட்ட பொழுது போக்குகளில் ஒன்றாகவே பார்க்கப்படுவது வேதனைக்குரியது.*

*நண்பர் ஒருவர் வயதுபோன தனது தாயாருடன் தமிழ் நாட்டிற்கு சென்றிருந்த வேளை, நல்ல நூல்களை தேடித் தெரிந்தெடுத்து வாசிக்கும் வழக்கமுடைய அவர் கண்ணில் தெரிந்த நூல் நிலையங்கள் அனைத்திலும் ஏறி இறங்கி பெரிய புத்தகக் கட்டுகளுடன் திரும்பியிருக்கிறார். தாயிற்கு தன் வெளிநாட்டு மகனின் செய்கை. வியப்பாயிருந்துள்ளது. "நீதானே உங்க பள்ளிக்கூடம் எல்லாம் போய், சோதனையள் எல்லாம் பாஸ் பண்ணிப் போட்டாய் பிறகேன் வீணா இப்ப உதெல்லாம்?" என்று தன் சந்தேகத்தை வெளிப்படுத்தி இருக்கிறார். கேட்ட மாத்திரத்தே அறியாமையும் அப்பாவித்தனமும் நிறைந்த ஒரு தாயின் வெளிப்பாடென்று நாம் சிரித்துக் கொண்டாலும், சமுதாயத்தின் பல மடங்குகளிலும் படித்தவர்கள் என்று தம்மைப் பற்றி பெருமை பேசுபவர்களாலும் இந்த நடைமுறை பின்பற்றப் பட்டு வருகிறது.பரீட்சையில் சித்தியடைவதே படிப்பின் இலக்கு.அந்த இலக்கிற்கு துணைபோவதே படிப்பு என்பதில் உறுதியாக உள்ளனர். சராசரியாக நாம் ஒவ்வொருவரும் வாசிக்கும் பக்கங்களின் எண்ணிக்கையே மேலை நாடுகளை விடவும் இந்தியாவைவிடவும் பல மடங்கு குறைவாக உள்ளது. பாடப் புத்தகங்களோடு பெரும்பாலும் நம் ஈடுபாடு அடங்கிவிடுகிறது.அறிவு பெறுவதும், நமது அறியாமையை உணர்தலும் சமாந்தரமாக நிகழ்பவை.*

*இருள் என்பதன் எதிர்ப்பதம் ஒளி என்று சொல்லப் படுகிறது.ஆனாலும். ஒளியற்ற ஒரு நிலையே இருளாக உள்ளது. அதாவது ஒளியில் இருளும் கலந்துள்ளது. அந்தக் கலவையில் இருந்து ஒளியைப் பிரித்து எடுத்துவிட்டால் 'இருட்டு'க்கிடைத்து விடும் நடைமுறையில் நாம் கருதும் எந்த ஒளியோ அல்லது இருளோ நூறுவீதம் அத்தன்மைகளைக் கொண்டிருப்பதில்லை. இருளில் ஒளி கலந்தும், ஒளியில் இருள்கலந்திருந்தாலும் அந்தந்த அளவுகளுக்கேற்ப தன் தன்மையினை வெளிப்படுத்தி நிற்கிறது. இதைப் போன்றதே அறிவும் மடமையும் முழுப்புத்திசாலிகளோ முழு மோடர்களோ கிடையாது. அறிவை 'ஒளிக்கு' ஒப்பிடுவார்கள். தொடர்ச்சியான தேடுதல் மூலம் அந்த அறிவொளியோடு கலந்திருக்கும் இருளை வெற்றிகொள்ளவேண்டும். முழுமையாக எட்டப்பட முடியாது. மரணம் வரை இடைவிடாது தொடரும் ஒரு நிகழ்வாய் முயற்சியாய் இருத்தல் வேண்டும். பாட்டன் தந்த பரம்பரைச் சொத்தான பழைய விளக்கை அப்படியே வைத்து பயன்பெறலாமென நம்பியிருத்தல் போன்றதே அறிவுத்தேடலில் திருப்தி கொள்வது மிகவும் வேகமான விஞ்ஞான உலகத்திலே வாழுகிறோம். ஒளியூட்டுவதற்கு மட்டுமன்றி இருக்கும் ஒளியை இல்லாது ஒழிக்கும் கருமை மின் குமிழ்களும் உண்டு. ஆமாம் நாம் முகம் கொடுக்கவேண்டிவரும் புதுப்புது இருள்களிடையே ஒளியேற்ற அறிவார்ந்த தேடல் அவசியம். படித்தலும் பட்டம் பெற்று பரவசமெய்தி அப்படியே கிடப்பதும் தான் அறிவென்று இராமல் புதிய புதிய சவால்களை எதிர்கொள்ளக்கூடிய கல்வியை பாடசாலைக்கு வெளியிலும் பெற்றுக் கொள்வதை வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.*


*"கல்விக்குத் தாயாய் கலைமகளைப் போற்றிப் புகழ்ந்தேற்றி வழிபடும் மரபுடையோர்" நாமென்று பெருமை பேசிக்கொள்கிறோம். ஆனாலும் சடங்குகளின் நடைமுறைகளில் காட்டும் தீவிரத்தை அங்கு மேன்மைப் படுத்தப்பட்ட நோக்கில் காட்டத் தவறுகிறோம் என்பது புலப்படுகிறது.*

(18 ஆம் பக்கம் பார்க்க)

**கரும்புலிகள் நாள் யூலை - 05**



**வேருக்கு மட்டும் புரியும் விழுதுகள்**
**விடைகொடுத்த வேருக்கு கலக்கம்**
**சாவின் மடியில் காட்டிய தீரம்**
**வெளியே சொல்லமுடியா சோகம்**







மஞ்சள், வெள்ளை நிறங்களில் எண்ணிலடங்கா வண்ணத்துப் பூச்சிகள், நீண்ட பறப்பின் தளைப்பில் மூங்கிலாற்றுக்கரையில் குளிர்ந்த மணற் பரப்பில் மருதை மர நிழலில் சிறகாற சற்று ஓய்வெடுத்திருந்தன.

கலையரசியின் வருகை கூட அவற்றைக் கலைக்கவில்லை. அவள் இடையில் குந்தியிருந்த குடத்தை இறக்கி குளிர்நீரை வாரியவள் - ஆற்றங்கரையில் அதே மருதமரநிழலில் ஒய்யாரமாய் ஒருக்களித்திருந்து வண்ணத்துப் பூச்சிகளின் வண்ணங்களை இலயித்தாள்.

சில மாதங்களின் முன் இதே ஆற்றங்கரையில்தான் யானை. குதிரைவாள்,வேல், வில் என பரிவாரங்களுடன் தாகம் தீர்க்க இறங்கிய சேனையின் 'கொந்தகன்' அவளது வலையிற் சிக்கினான்: சிக்கியவன் அடங்காப்பற்று வன்னிமையின் மன்னன் 'வன்னியன்'

வன்னி மான்மியத்தின் மன்னன் அவளது கண்ணாளனானபோது தண்ணீருக்கு மட்டுமல்ல தன்னவனுக்காகவும் ஆற்றங்கரைக்கு வரத் தொடங்கியிருந்தாள். வரும் பொழுதுகளில் குடத்தில் பால் கொண்டு மன்னன் பசி தீர்த்து சாயும் பொழுதில் தண்ணீருடன் தன் குடில் திரும்புவாள் கலையரசி.

இன்றும் அவள் மன்னன் வரவுக்காய் வண்ணத்துப் பூச்சிகளுடன் சிறகு கட்டி எல்லையில்லா பிரபஞ்ச வெளியில் வண்ண வண்ண கனவுகளுடன் அதிக தூரம் பறந்து சங்கமித்தாள்.

மூங்கிலாற்றின் ஓரம் வளைந்திருந்த மூங்கில்களை உரசிய படியே படுவேகமாய் பாய்ந்து செல்லும் மன்னனின் குதிரையில் பின்னிருக்கையில் அவள் ஒய்யாரமாய்...

"கலையரசி"

"ம்"

"இந்த நானிலத்திற்கும் நீ இளவரசி" மென்மையாய் அவள் புன்னகைத்தாள்.

"இந்த நானிலத்தை நீலக்கண்ணனுக்கு புகைக்கண்ணனுக்கு , வெள்ளையனுக்காவது கொடுப்பதாவது. இந்த மண்ணும் வளமும் எங்களதே"

"ஓகோ... நான் பின்னாலிருக்க மன்னனுக்கு வீரமா வருகிறது" காதல் கிறக்கத்திலிருந்த கலையரசி அவன் தோள்களைச் செல்லமாய்க் கடித்தாள்- தன் 'கொசு'வத்திலிருந்து துளசி, நன்னாரி, கறுவா, பாக்கு, கராம்பு என்று எடுத்து தன் உள்ளங்கையில் பிசைந்து - அவன் உதடுகளினுள் திணித்து உதட்டை விரல்களால் அழுத்தினாள்.

"கலையரசி"

"ம்"

"முன்னால் வந்து இரேன்"

"ம் கூ பயம்"

"அடங்காப் பற்றின் இளவரசிக்கு என்ன பயம்?"

"அப்படி ஒன்றும் எதிரிக்கும் பயமில்லை உங்களுக்குத் தான்"

கொவ்வம்பழத்தைச் சுவைத்த கிளி ஒன்று அவளது சிந்தை கலைத்துப்பறந்தது. அணிமித்துக் கேட்ட குதிரைகளின் குளம்பொலி போர் விரர்கள் விரைவாய் நெருங்குவதை அவளுக்கு உணர்த்திற்று. காட்டு மரங்கள் அதிர மந்திகள் கிளைதர்வ படை வீரர்கள் புடைசூழ யானையின் கம்பீரம், வீரம் சாது போன்ற உருவாய் குதிரையிலிருந்து குதித்தவன் படை வீரர்களின் கொந்தகன் (Commander) வன்னியன்.

எதிர்பார்த்தது எதிர்பாராதது வர கலையரசி திக்குண்டு போனால் - கம்பீரம் புன்னகையுடன் கலையரசியின் முன் அவன் வந்தான் - அவள் எழுந்து கொண்டாள்.

"நான் உன்னை எதிர் பார்த்தேன் - நீ என்னை எதிர்பார்த்தாயா "கலையரசி" "இல்லையே! நான் வண்ணத்துப் பூச்சிகளின் அழகில் தானே கிறங்கியிருந்தேன்" "உன் அழகான பொய்களில் உண்மை தெரிகிறது கலையரசி ஆனால், இன்று இந்த குளிர் நீரோடையோ வண்ணத்துப் பூச்சிகளோ, காதல் கிளிகளோ காதல் உணர்வைத் தரப்போவதில்லை. என்னிடமிருப்பதெல்லாம் அந்த வெள்ளையனின் சிரசை..."

"சீ... உன்னைக் கடிந்து யாது பயன் - என் தாயகம் இன்று நீயுல்ல... உன் குடத்திலிருக்கும் தண்ணீர்தான் வேண்டும்." கூறியவன் அவள் தண்ணீர்க் குடத்தை அலாக்காய்த் தூக்கி சட சடவென மண்டினான். போர் வீரர்கள் ஒவ்வொருத்தராய் ஆற்றில் இறங்கி ஏறினர்.

கலையரசி: வெள்ளையன் கரிக்காமமூலையைக் கடந்து கற்சிலைமடுவரை பரவியிருக்கிறான். எங்கள் கொல்லைப் புறத்தில் நிற்கும் எதிரிகளின் பீரங்கிக் குண்டுகளின் அதிர்வை நீ அறிவாய் - இந்நிலையில்... அந்தக்குடிலில் நீயும் உன் ஆத்தாளும் துணையின்றி தனியே இருத்தல் உசிதமல்ல! உன் தாயை அழைத்து 'பனங்காமம்' செல்வாய்! உன் உதிரத்தில் வளரும் என் மைந்தனை பக்குவமாய் வளர்த்தெடுத்து இந்த மண்ணின் மன்னனாக்கு. தமிழ் வீரத்தாயின் கடமையை நீ சரிவரப் புரிவாய். இந்தா! இந்தகூரிய வாளை நீ எப்போதுமே உடன் வைத்துக்கொள். தனிவழியே செல்கையில் தீயோர் தலைப்படுவர் அவர்கள் தலைகளை சீவி எறிந்துவிடு. பிறக்கப் போகுமென்மைந்தனிடம் இந்த வாளைக் கையளித்து விடு.

"மன்னவா! பிறக்கப் போகும் உங்கள் குழந்தைக்கு நீங்கள் தான் தந்தையென சாட்சி பகர்வது...!?"

**சி. மாதுளா**

"கலையரசி உன் எதிர் பார்க்கை எனக்கு விளங்குகின்றது. என் கழுத்திலிருக்கும் புலிப்பல்லு மாலையை உனக்கு அணிவிக்கிறேன் - நான் தான் உனது கணவன் என்பதற்கும் உன் மைந்தன், எல் பிள்ளை என்பதற்கும் இந்த மாலை சாட்சி. சக போர் வீரர்கள் சாட்சி - என்றுமே பின்னோக்கிப் பாயாத இந்த மூங்கிலாறு சாட்சி. ஏன் நாங்கள் புணர்கையில் பார்த்ததிலிருந்த ஒரே ஜீவனான அந்த மர அணில் சாட்சி."

கலையரசியின் கண்களில் அணையுடைத்து கண்ணீர் பொலு பொலுவென வழிந்தோட அவளை இறுகத் தழுவினான் வன்னியன். மூங்கில் மர இலையூடாகச் சூரியன் பார்த்துக் கொண்டிருந்தான் ஒன்றிப் போயிருந்த கலையரசியை அவனே தான் விடுவித்தான்.

"சென்று வருகிறேன் கலையரசி... விடை பகர்வாய் கலையரசி... இன்று மண்ணில் நடக்கப்போகின்ற போரில் முடிவு வெற்றி இல்லையேல் மடிவு."

"சென்று வாருங்கள் என்னவரே. உங்கள் மைந்தனை, என்னை, மண்ணை மறவாது போரிடுங்கள் - வெற்றி எங்களதே - என்றுமே நான் கைகூப்பும் எம்பெருமான் நாகபெருமான் கைவிடான் - சென்று வெற்றியுடன் மீண்டு வாருங்கள்."

வீரர்கள் குதிரைகளில் ஏறினர் - வன்னியன்! நாகவியூகத்தில் பாதை காட்டிட 'வீர வன்னியர்' பாசறையை நோக்கி விரைந்தனர். அவர்கள் 'புள்ளி' யாய் மறையும் வரை இமை மூடாது ஏக்கத்துடன் பார்த்திருந்தாள் கலையரசி.

வழி எங்கனமும் மக்கள் குழுமமாக வாழ்ந்து செழிப்புற்ற நிலங்கள் வாழ்விழந்து சூனியப் பிரதேசமாய்க் கிடந்தன. கால் நடைகள் மிரட்சியுடன் பாய்ந்தன.

"இந்த மண் எங்கள் சொந்தமண்... இந்தமண் யாருக்கும் அடங்கா மீண்டும் செழிப்புறும். பலம் பெறும் விடுதலை... விடுதலை. "தன்னை மறந்து அவன் உரக்கக் குரலெழுப்ப சக வீரர்களும் "விடுதலை விடுதலை" என வானலாவ குரலெழுப்பியவாறே 'வீர வன்னியர் பாசறை'க்குள் உட்புக அங்கு முன் கூட்டியே கூடியிருந்த கரிக்கட்டு, தென்னைமரவடி, மேற்பற்று, கருநாவற்பற்று வன்னிச் சிற்றரசுகளின் படை வீரர்களும் சேர்ந்து விடுதலை விடுதலை, வன்னியன் வாழ்க... வன்னிமண் வாழ்க" என வானலாவ குரலெழுப்பினர்.

கண்டிய மன்னன் விக்கிரம ராஜ சிங்கனின் முத்திரை இடப்பட்ட பீரங்கியையும் கரிக்காமமூலை டச்சுக் கோட்டையில்கைப் பற்றப்பட்டிருந்த பீரங்கிகளையும் சுற்றி குதிரையில் வலம் வந்த படியே வன்னியன் கர்ஜித்தான்.

"வீரர்களே, வெள்ளையர்கள் வன்னி மான்மியத்தின் இதயம் வரை ஊடுருவி விட்டனர். இத்தனைக்கும் காரண கர்த்தா கரிக்காமமூலை சிற்றரசன் காக்கை வன்னியன், கூடவிருந்து குழி பறித்து விட்டான் - வெள்ளையனுக்கு தோள் கொடுக்கும் அவனை வரலாறு நிந்திக்கும், பழிக்கும் அவன் போன்றோருக்கு எங்கள் வரலாற்றில் இடமேயில்லை. அவனது ஒற்றர்கள் எங்கள் படைகளுக்குள் புகுந்து ஒற்றாடுகின்றனர். நாம் மிகுந்த கூர்மையுடன் இருத்தல் வேண்டும் - இனி வீரம் மட்டுமே வெற்றியை பெற்றுத்தரப் போவதில்லை. நாங்கள் இந்த பீரங்கிகளையும் இயக்கக் கற்க வேண்டும் - எங்கள் நெஞ்சுரத்திலிருந்து ஊற்றெடுக்கும் வீரமும் அறிவும் ஒன்று சேர்ந்தால் யாருமே எம்மை அடிமை கொள்ள முடியாது. என்பதையே மண்ணின் நடப்புகள் கொடி காட்டுகின்றன. எங்கள் ஒற்றுமை குலையாது வெள்ளையனை கடல்கடந்து துரத்துமட்டும் போராடுவோம் வாரீர்...

வியர்க்க விறு விறுக்க ஓடிவந்த காஞ்சுகன் (சேவகன்) அரசே! காக்கை வன்னியன் கொத்தளத்திலிருந்து அடைக்களம் புகுந்த 'குலமகான்' வந்த இடத்திற்கே மீண்டும் ஓடிவிட்டான்.

அந்தச் செய்தி பறைசாற்றப்படுமுன் வெள்ளைய தளபதி கப்டன் வென்றி பேக்கின் படையணிகள் பீரங்கிக் குண்டுகளை பொழிந்தவாறே 'வீரவன்னியர் பாசறைக்குள் புயல் வேகத்தில் உட்புகுந்தனர்.

வெள்ளையரின் பீரங்கிக் குண்டுகளின் முன் யானைகளும் குதிரைகளும், வாள்களும் வேல்களும் மண்டியிட்டுப் போயின - வெள்ளைய வீரர்கள் உரக்கக் கூச்சலிட்டவாறே பாசறையை துவம்சம் செய்தனர். "ஆண்களைச் சுடுங்கடா! ஆண்களைச் சுடுங்கடா..! என்ற குரல்கள் எங்கும் ஒலித்தன - எங்கெனும் ஈனக் குரல்கள் பிணங்கள்.

"சூரியன் மறையா சாம்ராஜ்ஜியத்தின் மைந்தர்கள் நாங்கள்" வெள்ளையர் வெற்றியைக் கொண்டாடினர்.

விழுப்புண்ணும் வீழ்ந்து கிடந்த வன்னியப் படை வீரரிடம் வெள்ளையத் தளபதி கேட்டான்.


'வீர வன்னியரின் வீரம் எங்கே"

அவ் வீரனின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்தது வீரம் மட்டும் போதாது 'இது'வும் வேணுமென தன் தலையை தொட்டுக் காட்டினான் வெள்ளைய கப்டன்.

"காயங்களுடன் வன்னியன் தப்பிவிட்டான் - மருத்துவ வசதிகளற்ற வன்னியர்களால் அவனைக் காப்பாற்ற முடியாது. இன்னும் சில நாட்களில் அடர்ந்த காட்டில் ஓர் மூலையில் அவனது இறப்பு தவிர்க்க முடியாதது."

காக்கை வன்னியனே உன்னிலும் எமக்கு கண் இருக்கும் - உன் இனத்தவனையே காட்டிக் கொடுத்த நீ எமக்கு இரண்டகம் செய்ய எத்தனை நாளிகைகள் தேவை உனக்கு. எமக்குத் திறை செலுத்தி 'பயிருக்குப் பாயும் தண்ணீரில் புல் வளருவது போல்' உன் வாழ்வையும் பார்த்துக்கொள் எங்கள் மீது என்றுமே கை வைக்க துணிந்து விடாதே. எங்கள் பலம் நீ அறிவாய்" குதிரையில் இருந்த படியே அதிகாரம் தொனிக்க காக்கை வன்னியனை எச்சரித்தான் கப்படன் வென்றிப்பேக்.

நாகபிரான் வழிபாட்டிலீடுபட்டிருந்த கலையரசியின் மனதில் துர்க்ககுறிகள் தோன்றின - அருகே கேட்ட பீரங்கி வெடி அதிர்வில் வானரங்கள் மரம் தாவ சில குதிரைகள் குருதி வழிந்தோட அவளது'குடிலை' வந்தடைந்திருந்தன. அதில் ஒன்று - 'செங்காளை' அது வன்னியனின் குதிரை. அவளது உயிர் குலை நடுங்கியது. காதலன் சென்ற வழியே விழிவைத்துப் பார்த்திருந்தாள்.



(18ஆம் பக்கம் பாக்க)

**கரும்புலிகள் நாள் யூலை - 05**



'காயத்தைத் திரி' யாக்கிக் கடுஞ்செயல் 'மந்திரம்' ஓதிய கண்மணிகள் உயிர்ப்பில் மலர்கிறதெம் காலம்.

8x8 அடி நீள அகலமுடைய மாபெரும் அறைகளில் எங்களுடைய எதிர்காலச் சிற்பிகள் ராஜாங்கம் நடத்திய கதைகள் எங்களிடம் ஆயிரம் உண்டு.

புலம்பெயர்ந்து போன 'அகதிப்புதல்வர்கள்' 8x8அடி அறை ஒன்றில் ஆகக்குறைந்தது நான்கு பேர் என்ற கணக்கில்தான் இருந்தார்கள். இப்படி நான்கு பேருடன் வசதியாகவும் ஆறுதலாகவும் இருந்தவர்கள் மிகவும் குறைவு. மற்றப்படி களை நேரடியாகப்பார்க்க வேண்டுமென்றால் வவுனியா நகரில் பல இடங்களிலும் காணமுடியும். சில அறைகள் கொஞ்சம் கூடுதல் அகல நீளமுடையவை. ஆனால் பெரிய விஸ்தாரமானவை அல்ல. ஒவ்வொரு அறையிலும் நான்கு பேருக்கு மேல்தான் இருக்கிறார்கள் - அதில் தான் படுக்கை அதில்தான் படிப்பு: அதில்தான் வரவேற்பு: அதில்தான் ஓய்வு: அதில்தான் அவர்களுடைய வாழ்க்கையே.

இப்படி வசதிக்குறைவாக இருக்கும் நிலையிலும் வாடகைக் காசு சாப்பாட்டுக்காசு என்பவற்றுக்கு எந்தக் கருணையும் இல்லை. அவை றால் பெருகியிருக்கும் சனத் தொகைக்கு ஏற்றமாதிரியான அடிப்படைவசதிகள் அங்கில்லை என்பது தான்.

அதிலும் படிக்கும் மாணவர்களுக்கான வசதிகள் சிறிதும் இல்லை. இதுதான் இப்போது வவுனியா வளாக மாணவர்களைப் போராடத் தூண்டியிருக்கின்றது.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக வவுனியா வளாகம் இயங்குகின்றது. வவுனியா வளாகத்துக்கு தனியாக காணி ஒதுக்கப்பட்ட போதும் இதுவரையிலும் அந்தக் காணியில் வளாகம் இயங்குவதற்கான எந்த வேலையும் தொடங்கப்படவில்லை.

என்ன? என்பதுதான் இன்று பலருக்குமுள்ள கேள்வி.

நிதிஒதுக்கீடில்லை, முயற்சிக்கிறோம் என்று சொல்லப்படும் காரணங்களுக்கப்பால் யதார்த்தத்தில் ஏற்படும் பாதிப்புக்கள் பயங்கரமானவை.

இடநெருக்கடியால் மாணவர்கள் அவலப்படுவது ஒருபுறம். இடமிருந்தும் அதனைப் பயன்படுத்தாமல் பெருந்தொகைப்பணத்தை வாடகையாகத் தனியாருக்கு வழங்கும் அவலம், மறுபுறம். வளக்குறைவான பகுதியில் கற்கமுடியாத சிரமம் சேவையில் ஈடுபடுவோர்- பாடும் மிக கஷ்ரமாகத்தான் உள்ளது.

கல்வியற் கல்லூரியில் படிக்கும் போது அங்கே தங்குவதற்கான வசதிகள் உண்டு. அந்தக் கட்டடங்களின் அமைப்பே சிறைச்சாலை போன்ற மூடியடைக்கப்பட்ட இறுக்கத்தைக் கொண்டது. ஆனாலும் ஓரளவுக்கு இந்த விடயத்தில் கரிசனையுண்டு.

கல்வியற் கல்லூரியில் இருந்து வெளியேறுவோர் வவுனியா மாவட்டத்திலேயே படிப்பிக்கிறார்கள். கல்வியற்கல்லூரியின் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு வலயத்துள் இந்த மாணவ ஆசிரியர்கள் இயங்க வேண்டியிருப்பதால் வவுனியா நகரத்திலேயே தங்கவேண்டி ஏற்படுகின்றது. இதுவும் கடும் நெருக்கடிக் குள்ளாவதுதான்.

இந்தத் தரப்பினரும் 8x8 அல்லது 10x10 அடி அறைகளுக்குள்தான் நெருக்கடித்து ஒருவாறு நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

இவையெல்லாவற்றையும்விட மகாகொடுமையானது நடைபாதைக் குடும்பங்களின் நிலை. நகரத்தில் ஏறக்குறைய ஐம்பது குடும்பங்கள் வரையில் நடைபாதையோரங்களில் விரிந்த வானத்தின் கீழே படுத்துறங்குகின்றன, குடும்பம் நடத்துகின்றன.

மழைவந்தால் கடை விறாந்தைகளிலும் மற்றும்படி வீதியோரங்களிலுமாக வாழ்க்கையைப் போக்கும் இந்தக் குடும்பங்களிலுள்ள சிறுவர்களைப் பார்த்தீகளானால் அதிர்ந்து போய் விடுவீர்கள்.

எதிர்காலம் பற்றிய எந்தத் தீர்மானமுமில்லாமல் வாழும் இந்தக் குடும்பங்களை வைத்துக்கொண்டு தான் வவுனியா நகரசபையும் இயங்குகிறது. அங்குள்ள மக்கள் நற்பணி மன்றங்களும் புத்திஜீவிகளும் வாழ்கின்றார்கள்.

இப்படி அந்த நகரின் அவலங்கள் நீளமாக இருக்கிறது.கடந்த பத்தாண்டுகளில் படையினர் மற்றும் மாற்றுக் குழுக்களின் பிடியில் இருந்ததன் விளைபலன்தான் இவையா எனக் கேட்கிறார்கள் பலரும்.



# பத்தாண்டுகளின் அவலம் வவுனியாவில் வெளிப்படுகிறதா?

பொதுவாக நான்கு பேருக்கு மேல்தான் 8x8 அடிகளில் இருந்தார்கள்.

இந்த நிலைமை புலம்பெயர் நாடுகளில் ஈழத்தமிழர்களுக்கு குறைவாகவே இருக்கிறது என்று சொல்கிறார்கள். எண்பதுகளில்தான் அங்கே இடநெருக்கடி, வீடில்லாப் பிரச்சினை என்றெல்லாம் சூழ்ந்திருக்க பெருந்துன்பப்பட்டார்கள் அகதித்தமிழர்கள். ஆனால், தொண்ணூறுகளில் அங்கேயே பெரும்பாலானவர்கள் வீடுவாங்கி, இங்கிருந்து குடும்பங்களை அழைத்து வசதியாகி விட்டார்கள். இப்போது வெளிநாடு போகிறவர்களுக்கு முன்புமாதிரியான அலைச்சலும் அவலமும் இல்லை. உறவினர்கள், தெரிந்தவர்கள் என்று யாராவது வந்து அழைத்துப் போவார்கள், இடம் எடுத்துக்கொடுப்பார்கள். அல்லது தங்களுடன் சில காலமாவது தங்கவைப்பார்கள். தொழில் தேடிக் கொடுப்பார்கள். பொலிசுக்கோ வேறு கந்தோர்களுக்கோ கூட்டிப் போவார்கள். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுவார்கள். நெளிவு சுழிவுகளைச் சொல்லிக் கொடுப்பார்கள். இப்படி எவ்வளவோ உதவிகள் எல்லாம் மிகவும் மாறித்தான் விட்டது. இதையெல்லாம் நன்றாக அறிந்து கொள்ள இரண்டு வழிகள் உண்டு.

01. புலம்பெயர் நாடுகளிலுள்ள எங்களுடைய சொந்தக்காரர்கள் அல்லது நண்பர்கள், தெரிந்தவர்களிடம் விளக்கமாகக் கேட்டறிதல்.

02. எண்பதுகளிலிருந்து வெளிவருகின்ற புலம்பெயர்வாழ்வின் எழுத்துகளைப் படித்தல்.

அகதிவாழ்வில் பட்ட துன்பங்களின் - கவலைகளின் உக்கிரத்தை அவற்றில் யாரும் அறியலாம். இதயம் கரைந்தொழுகுமளவுக்கு அவர்கள் தங்களின் கதைகளைச் சொல்வார்கள்...

8x8 அடி அறைகளில் இன்னும் வாடிவதங்கும் இளைஞர் யும் மகா உச்சத்தில் தான்.

வவுனியா ஏற்கனவே வளர்ச்சியடைந்த நகரம் அல்ல. யுத்தகாலத்தில் வன்னி மற்றும்வட பகுதி மீதான பொருளாதாரத் தடை, பயணத்தடைகளின் போது இடைத்தங்கல் மையமாக இருந்த பெருத்த நகரம் தான் இப்போதைய வவுனியா. உண்மையான அர்த்தத்தில் இயல்பான வளர்ச்சியில் நகரமாக வில்லை அது. விபத்தாக நிகழ்ந்த வீக்கமாகவே அது இருக்கிறது.

தொண்றுகளின் ஆரம்பத்

**வெளிவாசல்பாலன்**

தில் வவுனியாவை விட்டு வெளியேறியவர்கள் இரண்டாயிரமாம் ஆண்டு வவுனியாவுக்குப்போனபோது அவர்களால் வவுனியாவை நம்ப முடியாமல் போய்விட்டது. அவ்வளவுக்கு எல்லாவற்றிலும் பெரிய மாற்றங்கள். கிராமங்களாகவும் காடுகளாகவும் இருந்த பகுதிகள் சன நெருக்கம் கூடிய இடங்களாக மாறி விட்டன. வயல்நிலங்களில் கூட வீடுகளும் கடைகளும் முளைத்திருந்தன.

இவற்றோடு கல்வியற் கல்லூரி பல்க்லைக்கழக வளாகம், மற்றும் வவுனியா வடக்கிலிருந்த பிற அலுவலகங்கள், நிறுவனங்கள் எல்லாம் வவுனியாவில் கூடியிருந்தன. (வவுனியா வடக்குப் பகுதியை படையினர் பிடித்து அழித்த போது இந்த அலுவலகங்களும் நிறுவனங்களும் வவுனியா நகருக்கே வந்து விட்டன. இன்னும் பல அங்கேதான் இயங்குகின்றன) தவிர யாழ்ப்பாணத்திலிருந்தும் வன்னியிலிருந்தும் போய் வவுனியாவில் குடியேறியோரின் தொகையும் கணிசமானளவு கூடியிருக்கிறது. பொருளாதாரத் தடையின் அழுத்தம்,பிற தொழில் முயற்சிகளுக்காக போனோர் இதில் கூடுதல் அடக்கம்.

ஆக வவுனியா சன நெருக்கடி மிகுந்த நகரமாகிவிட்டது. இப்போது பிரச்சினை என்ன வென்

பம்பைமடுவில் ஐநூறு ஏக்கர் விஸ்தீரணமான காணியை வைத்துக் கொண்டு வவுனியா நகரில் துண்டு துண்டாக மூன்று இடங்களில் இரவல் காணியில் பெருந்தொகைப்பணத்தை வாடகையாகக் கொடுத்தே வளாகம் இயங்குகிறது.

வளாகத்திற்குரிய காணியில் கட்டடங்களை அமைக்கும் போதுதான் பல்கலைக் கழகமொன்றுக்கான அமைப் போடும் வசதிகளோடும் அடிப்படைகளோடும் அவையிருக்கும். அவ்வாறிருக்கும் போதுதான் கற்றலுக்கு வசதி. வளப்பிரயோகமும் முழுமையடையும் இப்போதுள்ள இரவல் இடத்திலுள்ளகட்டடத்தில் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி "ஒருவாறு சமாளித்தே" வளாகம் இயங்குகின்றது. இந்தக் கட்டடங்கள் வேறு தேவைகளுக்காக நிர்மாணிக்கப்பட்டவை.

இது ஒரு புறமிருக்க மறு புறத்தில் மாணவர்கள் தங்குவதற்கான விடுதிகளும் சரியாக இல்லை. இடவசதியின்மை இதில் பிரதான காரணம். பம்பை மடுவில் பெருமளவு நிலத்தை வைத்துக்கொண்டு அதனைக் கட்டியெழுப்பாமல் நகருள் கிடந்து நெருக்குவாரப்படவேண்டிய அவசியம் இன்னொரு புறம்.

தங்குவதற்குப் போதிய வசதிகள் இல்லாததால் மாணவர்கள் நள்ளிரவு வரையில் வீதிகளில் தான் திரிகிறார்கள்.

அறைகளில் நிரம்பி வழிவதைத் தவிர்ப்பதற்காக அவர்கள் இப்படியாக வேண்டியிருக்கிறது.

போதிய காற்றோட்டமில்லை வெக்கையும் நீர்ப்பற்றாக்குறையும் நெருக்கும் கோடையில் ஒரு சிறிய அறையில் எப்படித்தான் படுத்தெழும்ப முடியும்? அங்கிருந்து எவ்வாறு படிக்க இயலும்?

இதில் இன்னும் பாதிக்கப்படுவது பெண்மாணவர்கள் தான். ஆண்களாவது இரவிரவாக திரிந்துவிட்டு களைப்படைய வந்து தூங்குவார்கள். பெண் பிள்ளைகள் எங்கே போகமுடியும்?

இதேபோல கல்வியற் கல்லூரியில் படித்த முன்னாள் மாணவர்கள்- இப்போது ஆசிரியப்பயிற்சிச்

> **வவுனியா ஏற்கனவே வளர்ச்சியடைந்த நகரம் அல்ல. யுத்தகாலத்தில் வன்னி மற்றும்வட பகுதி மீதான பொருளாதாரத் தடை. பயணத்தடைகளின் போது இடைத்தங்கல் மையமாக இருந்த பெருத்தநகரம் தான் இப்போதைய வவுனியா. உண்மையான அர்த்தத்தில் இயல்பான வளர்ச்சியில் நகரமாக வில்லை அது. விபத்தாக நிகழ்ந்த வீக்கமாகவே அது இருக்கிறது.**

**கரும்புலிகள் நாள் யூலை - 05**



**கல்லறைகளுக்குள் - நாம்**
**உங்களை எப்போதும்**
**தேடுவதேயில்லை...**
**எங்கள்**
**விழிகளுக்குள் இருப்பதால்.**



# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

சென்ற மாதம் சூழல்பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தின் சூழல்பாதுகாப்புப் பகுதி பல்வேறு பொது அமைப்புக்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் துணையுடன் இதனை மேற்கொண்டது.

வேலைத்திட்டங்களில் முக்கியமானவையாக பின்வருவன மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு வகையான சிரமதானப் பணிகள், மரமீள் நடுகை, கடல்நீர் அணைகட்டல், மண் அரிப்புத் தடுப்புவேலைகள், கல், மண், நீர், உவர்தடுப்பு போன்றவற்றை இனங்காணப்படுதலும் நிவர்த்தி செய்தலும் சூழல்பாதிப்புற்ற இடங்களை ஆய்வுக்கு உட்படுத்தல் மரக்கன்றுகளை உற்பத்திசெய்தல், கண்டல் தாவரங்களை உற்பத்திசெய்தலும், பராமரித்தலும், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்துதல்- பயிற்சிகள் வழங்குதல் என்பன அவற்றில் முக்கியமானவையாக இருந்தன. இவற்றுடன் பார்த்தீனியம் செடிகளை அழித்தல் என்பதும் கவனத்திற்குரிய செயற்பாடாக இருந்தது.

மரநடுகையிலே நினைவு நாட்களுக்கு மரம் நடுதல், சூழல்பாதுகாப்புக்காக மரம் நாட்டுதல், வீதியோரமர நடுகை, உவர்த்தடுப்பு மரநடுகை காற்றுத்தடுப்பு மரநடுகை போன்ற முக்கியமாகச் செய்யப்பட்டன.

பார்த்தீனியம் செடிகளை அழித்தல் பரவலாக பல இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் பல இடங்களிலும் இச் செடியை அழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்போது விழிப்புணர்வு மாதம் நிறைவு பெற்றுவிட்டது. ஆனால் சூழல் பாதுகாப்புத் தொடர்பான அக்கறையும் செயற்பாடும் நிறைவு பெற்று விடுமா?

சிரமதானங்களை, மரநடுகைகளை ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளமுடியாது தான் என்றாலும் எங்கள் எல்லோருக்கும் சூழல் தொடர்பான அக்கறை இருக்கவேண்டும்.

எமது ஒவ்வொரு செயலையும் சூழலைப் பாதிக்காது செய்து பழக்கவேண்டும். இதன்மூலம் எங்கள் மண்ணை எங்கள் சூழலை நாங்கள் பாதுகாக்க முனையவேண்டும் முனைவோமாக?

(சி-9609)

## நியாப் திட்டத்தின் கீழ்

# குறுக்குக் கடல் உவர்நீர் தடுப்பு அணை...

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புளியங்கூடல் கிராமம் விவசாயச் செய்கை மேற்கொள்ளும் கிராமமாக இருந்து வருகிறது. இருந்தாலும் வளம் மிகுந்த நிலத்தில் உவர் நீர் புகுந்து நிலச் செழுமையினை சீரழிக்கும் அவலநிலையும் உள்ளது. இங்கே காணப்படுகின்ற குறுக்குக்கடல் கரம் பொன், நாரந்தனை, சுருவில், ஆகிய கிராமங்களில் ஏறக்குறைய 400 - 500 ஏக்கர் விவசாய நிலத்தை சீரழித்து வருகிறது. மாரி காலத்தில் கடல் பெருக்கு காரணமாக உவர்நீர்: விவசாயநிலத்துள் புகுவதால் அங்கே பயிர் செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது. ஆனால் கோடை காலங்களில் மக்கள் குடி நீருக்கே கஷ்ரப்படுகின்றனர்.

ஆனி, ஆடி, மாதங்களில் கடல் நீர் வற்றி விடுவதால் அக்காலங்களில் வீசுகின்ற காற்றினால் மண்ணரிமானம் ஏற்பட்டு, காற்றுடன் அள்ளப்பட்டு உவர் மண் விவசாய நிலத்தில் படியவைக்கிறது. இதனால், உவர் மண் தரைமேல் படிந்துவிடுகிறது. விவசாய நிலத்தில் மட்டுமல்ல வாழை, தென்னை, வீட்டுக் கூரைகள் மேட்டு நிலப் பயிர்கள் என்றெல்லாம் உவர் மண் படிவதால் சுற்றுச்சூழல் மாசடைகின்றது. இதனால் மக்களின் பொருளாதார வாழ்வில் பெரும்பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

30 ஆண்டு காலமாக இம் மண் பரவலைத் தடுப்பதற்கு எடுத்த முயற்சிகள் எவையும் பலனளிக்காது போகவே மக்களும் இம் முயற்சியில் ஈடுபடாத காரணத்தால் விவசாய முயற்சிகளைக் கைவிட்டனர்.

2001ஆம் ஆண்டு யாழ். கச்சேரியால் மேற்கொள்ளப்பட்ட நியாப திட்ட வேலைப்பகுப்பாய்வில் புளியங்கூடல் குறுக்குக்கடல் தடுப்பணை வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு 2002 இல் நியாப் திட்டம் இவ் வேலையை ஆரம்பிக்கத் தொடங்கியது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரின் முயற்சியும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மக்களிடம் தொடர்ச்சியாக வெளிப்படுத்திய விழிப்புணர்வு அரசாங்க அதிபரின் செயற்பாடும் ஒன்றுகூடி இவ்வேலையை ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. இதனால் 2002ஆம் ஆண்டு சித்திரைமாதம் குறுக்குக்கடல் உவர் நீர்த்தடுப்பு அணை ஆரம்பிக்கப்பட்டது. புளியங்கூடல் கமக்கார அமைப்பு இத் திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது அதன் பின்னணியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அணைக்கட்டு அமைப்பதற்கான உள்ளீடுகள் பெறுவதற்கான உதவிகளை வழங்குவதில் அதிமுக்கிய பங்கைக் கொண்டிருக்கிறது.

புளியங்கூடல் குறுக்குக் கடல் உவர் நீர்த்தடுப்பு அணைத் திட்டத்திற்கு நியாப் திட்டத்தின் கீழ் ரூபா 51,60,00,0ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் சிவில் வேலைகளுக்கான 44,96,510 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டமை முக்கியமான அம்சமாகும்.

அணைக்கட்டு வேலைகள் 90வீதம் பூர்த்தியடைந்து விட்டது. இத்திட்டத்தில் அணைக்கட்டு அதில் வெள்ளநீர் கழிவு இடம் பெறுகையில் தொழில் நுட்ப அமைப்புக்கள் இடம் பெற்றுள்ளன. இது மட்டுமல்ல பாரிய உவர்நீர்த்தடுப்பு அணைக்கும் புறம்பாக 500 ஏக்கர் நிலத்தில் நன்னீர் ஏரியும் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் தங்களது விவசாய நிலங்கள் நன்னிலமாக மாறலாம் என மக்கள் நம்புகின்றனர்.

இருந்தாலும் கிணறுகளில் உள்ள உவர்நீர் நன்னீராக மாற்ற மடைவதை காணக்கூடியதாக இருக்கிறது. இதே நேரத்தில் கிணறுகளின் நீர்மட்டமும் உயர்ந்து காணப்படுகின்றது. நீர்வற்றும் காலப்பகுதியிலும் நீர்வற்றாது கிணறுகளில் நீர் இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். மரக்கறிச் செய்கை, வாழைச செய்கை என 1200ஏக்கரில் காலபோக நெற்செய்கை 900ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 50 ஏக்கர் நிலம் மேச்சல் தரவையாக உருமாற்றம் பெற்றுள்ளது. மேலும் வாழை, தென்னை, மரக்கறிப் பயிர்களைப் பயிரிட்டால்காலம் காலமாக காற்றினால் அள்ளப்பட்டு வருகின்ற உவர் மண் நிலத்தில் படிய விடாது செடிகளின் இலைகள் தடுத்துக் கொள்கின்றன. பெரிய அளவிலான உவர் மண் படிய விடாது தடுத்துக் கொள்ளும் மூடுபயிர்கள் பயிரிடுவதாலும் தடுத்துக் கொள்ளலாம். பசுந்தாள் பசளை, கூட்டெரு, உமி போன்றவற்றை நிலத்துக்கு இடுவதாலும் தடுத்துக் கொள்ளலாம்.

இப்பகுதியில் வசிக்கும் மக்களுள் 7512 பயனாளிகள் நிரந்தர வருமானம் பெறும் வகையில் சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப்பாரிய அணைக்கட்டு கட்டப்பட்டதால் புளியங்கூடல், சுருவில், நாரந்தனை, கரம்பொன் வாழ் மக்கள் பயனடைந்துள்ளனர்.

**சிவகமலா**

## நாங்கள்.....

(16ஆம் பக்கத்தொடர்ச்சி)

*வன்னியனைச் சுமந்த படை வீரர்கள் அவளது ஆலமரக் குடிலை வந்தடைந்தனர். தன் மன்னனின் செய்தியறிய விரைந்து சென்றாள் கலையரசி. 'மார்பில் குருதி வழிந்தோட குற்றுயிராய் வந்தவன் தன் மன்னவனேதான்' அவள் கண்டு கொண்டாள். அவனைத் தன் மடியிலே தாங்கிக் கொண்டாள்.*

*"கலையரசி! நீ, இன்னும் போகவில்லையா!"*

*"உங்களைத் தனியே விட்டுத் தனியாகவா"*

*"இல்லை, நீ ஈருயிர்காரி என் மகனை சுமந்து செல்கிறாய் - உன் வயிற்றில் வளரும் அவனைக் காப்பாற்று" வாள் போன்று வெட்டிச் சாய்க்கும் அவன் கண்கள்: சோர்ந்து போக அவன் இன்னும் சொன்னான்" "கலையரசி: என் மகனிடம் கொடுக்கச் சொல்லி தந்தேனே வாள் அதனை போகும் வழியில் ஆற்றில் எறிந்துவிடு. வாளையும் தாண்டி இன்னுமதிகம் கற்க வேண்டியிருக்கும். அது மட்டுமல்ல என் வீழ்ச்சியின் காரணங்களை அவனுக்கு எடுத்துச் சொல்... ஒற்றுமை இன்மையை நீக்கச் சொல்" 'தமிழன்' என்ற சொல்லுக்குள் ஒத்திசைவாய் இயங்கச் சொல் ஒற்றாடல் பாவமல்ல துலக்கிச் சொல் எங்கள் மண்ணின் காப்பரன் கடலில்தான் இருக்கவேண்டும் மறவாது சொல்." இன்னும் எதை எதையோ முனகியபடியே அவள் மடியில் அவன் உயிர் பிரிந்தது.*

*அவள் நடந்தாள் தனியே காட்டின் வழியே நீண்ட தூரம் கருகிய நினைவுகள் பசுமையாக நடந்தாள். வயிற்றுச் சுமையும், வயிற்றுப் பசியும் தெரியாது நடந்தாள். வானரங்கள் சீண்டச் சீண்ட சீற்றமின்றி நடந்தாள். மண்ணின் மடியில் இளவரசியால் குதிரை மேல் ஏறிப் பாய வேண்டியவள் முட்கள் 'குதி'யைக் கிழிக்க கிழிக்க நடந்தாள்.*

*கனகராயன் ஆற்றின் தண்ணீரைக் கண்டதும் தான் தன் களைப்பை உணர்ந்தாள். ஆற்றின் மடியில் இறங்கியவள் தாகம் தீர தண்ணீரை அருந்தி, கால்களை தண்ணீரில் அலசியபடியே மருதமர வேரில் களைப்பாற அமர்ந்தாள். தண்ணீர் அவள் கால்களை குளிர்விக்க வெம்மை பட்டிருந்த உடல் சில்லென குளிர்ந்தது. உடலில் ஏதோ மாற்றம் - அடி வயிறு குமைய வியர்வை உடலை நனைத்தது. இதயம் ஒரு கணம் விக்கித்து நிற்க பெரு மூச் சொன்று அவளை ஆசுவாசப் படுத்தியது தலை சாய்த்து அவள் தன் பெண்மையைப் பார்த்தாள். குருதிக்கட்டிகளாய் கருவறை வழியே கசிந்தது. அவள் மகன் கலைந்து விட்டான்.*

*கனகராயன் ஆற்றின் பச்சைநிற தண்ணீரில் அவள் குருதியும் கலக்க கறுப்பாகிய ஆறு இன்னும் வேகமெடுத்தது.*

*"என் மன்னவனின் நினைவுடன் வாழ்வதற்காக வளர்ந்த ஒரே ஜீவனும் உருப்பெற முடியாது உருக்குலைந்துபோக என் வாழ்வில் இனியேது ஒளி, கலங்கிய என் வாழ்வை கால நீட்சியில் எடுத்தியம்ப நீயே சாட்சியாகு" ஆற்றாமையால் கனகராயன் ஆற்றைப் பார்த்து இயம்பி விட்டு மன்னவனின் வாளை முத்தமிட்டு தன் மகனுடன் ஆற்றில் கலந்தாள்.*

பிற்குறிப்பு -

*ஜெயசிக்குறு (வெற்றி நிச்சயம்) சிங்களப் படையணியின் போர் நடவடிக்கை மீதான எதிர்ச்சமரில் காய்ந்துபோன கனகராயன் ஆற்றில் மணற்பரப்பில் ஓய்வுப் பொழுதில் 'கிச்சு மாச்சு தம்பளம்' விளையாடியபோது என் சக நண்பன் புலிவீரன் கூறினான்: "இந்த ஆற்றுக்குள் கலையரசியின் வாள் புதையுண்டு கிடக்கிறது தேடி எடு" என்று நான் நம்பவில்லை எனினும் தேடினேன் தேடிக்கொண்டேயிருக்கிறேன்.*

## மேற்கின் அணுகு...

(08ஆம் பக்கத்தொடர்ச்சி)

இத்தகைய கொள்கைகளை முன் நிறுத்துகின்றதா என சந்தேகப்பட வைக்கின்றது. இலங்கை விடயத்தில் தலையிடாக் கொள்கையைத்தான் புதிய அரசாங்கம் பின்பற்றப் போகின்றதா என்பது தெளிவற்ற ஒன்றாக உள்ளது. பரஸ்பரம் ஒத்துழைப்பு, தோழமை, தலையிடாமை என கொள்கையை இலங்கை விடயத்தில் புதிய அரசாங்கம் கடைப்பிடிக்குமாயின் அதனால் பிராந்திய ஒருமைப்பாடும், பாதுகாப்பும் சாத்தியப்பாடான ஒன்றாக மாறும்.

எனவே முழு உலகத்திலும் எழுந்திருக்கின்ற புதிய நெருக்கடியாக இஸ்லாமிய நாகரிகம் அழிவுக்குள்ளாகும் துயரம் நேரடியாக ஆரம்பமாகிவிட்டது. இஸ்லாமியரை துண்டாடும் மேற்குலக நாகரிகத்தின் அணுகுமுறை ஒவ்வொரு நாட்டுக்குள்ளும் குரானை வலுவற்றதாக மாற்றிவருகிறது. மேற்கு நாகரிக மனிதர்களை பாதுகாப்பதற்காக மேற்காசிய அரசியல் தலைமைகள் சகோதரப் படுகொலையை முடுக்கிவிட்டுள்ளன. இது முழு உலகத்திலும் ஆபத்தான அணுகுமுறையாகவே மாறி வருகின்றது. தீவிரவாதத்திற்கு இராணுவ வழிமுறைதான் தீர்வென மேற்குலக நாகரிகம் நம்புவதை அப்படியே அமுலாக்கும் மேற்காசிய தலைவர்கள் மேற்காசியாவை மட்டுமல்ல உலகத்தின் கணிசமான பகுதியை அழிவுக்கு இட்டுச் செல்லப் போகின்றார்கள்.

மேற்கின் அணுகுமுறை சனநாயகத்தையோ, மனிதஉரிமையையோ, அமைதியோ, அல்ல மேற்காசியாவை ஆளுவதும் அதன் பொருளாதார வளங்களை சுரண்டுவதும் அடிமைப்படுத்துவதுமேயாகும். இதற்கேற்பவே மேற்கு இராணுவத்தையும், அரசியல் பொருளாதாரக் கொள்கைகளையும் உருவாக்கிவருகிறது. இதனை முறியடிக்க ஆசிய நாட்டவருக்கு பலமிருந்தும் செல்லுபடியற்றதாக அவைகளின் அரசியல் சித்தாந்தம் அமைந்துள்ளன. குறிப்பாக சீனாவும், இந்தியாவும் பலமான அரசுகளாக காணப்பட்டபோதும் அந்த நாடுகளின் அரசியல் தலைமைகளும், அதன் சித்தாந்தங்களும் போலியானவையாக வலுவற்றவையாக அமைந்துள்ளன. இதனைப் பயன்படுத்தி மேற்கு இஸ்லாத்தை அடியோடு அழித்துவிடமுயலுகிறது.

## ஏ~9 ஏரம்பு

(15ஆம் பக்கத்தொடர்ச்சி)

*மானிடத்தோடு ஒன்றாய்க்கூடி ஒழுக்காற்றில் நின்றொழுகி பொதுவான நன்மைக்காய் மானிட விடுதலையெனும் இலக்கை எட்டுதலே அறிவின் தலையாய குறிக்கோள். இதற்காய் தெரிதலில் ஈடுபட்டு தேட வேண்டும். இருளை கணந்தோறும் சிறிதாயினும் விலக்கி ஒளி தெளிய வேண்டும். தெளிந்ததைப் பிறர்க்குணர்த்திப் அவர் தெளிந்ததை நமக்குணர்த்தி அன்றாடம் நகரவேண்டும். அந்தவகையிலே அகம் ஊடும் ஊடகங்கள் யாவும் தரம் தேர்ந்து தலை நிமிர்த்தவேண்டும்.*

*இந்த இடத்தில் ஒரு செய்தி பொருத்தமானது. நிமிடத்திற்கு பத்தாயிரம் சொற்களை படிக்கக் கூடிய வல்லமை பற்றிய ஆங்கில நூல் சொல்லும் செய்தியிது. எந்தவிதமான மந்திரமும் அல்ல; தந்திரமும் அல்ல! பழைய கிரேக்கர்களால் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு (மினோய்மற்றிக்) Mneumatie என்று அறியப்பட்டிருந்த இந்த ஆற்றல் தகுந்த பயிற்சிகளினால் எட்டப் படக்கூடியது. பத்தாயிரம் சொற்கள் முடிந்தவரை நம்மால் காணமுடியாவிட்டாலும் வாசிப்பு வேகம் பல்வேறு காரணிகள் பற்றி ஆளுக்காள் மாறுபடுகின்றது என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்வோம். வாசிப்பவரின் பயிற்சி சொல்லாட்சி மனஒழுங்கு நூலிலுள்ள விடயத்தின் கனதி தாய்மொழி வாசிப்பதன் காரணம் வெளிச்சம் சூழல் என பல்வேறு காரணிகளும் சாதகமாக அமையும்போது இவை வாய்ப்பாக அமையப்பெறாத சந்தர்ப்பத்துடன் ஒப்பிடுகையில் வேறுபாடு வெளிப்படும். காரணிகளை நமக்குச் சாதகமாக்குவதன் மூலமும் தொடர்ச்சியான பயிற்சியினாலும் பல நன்மைகளை எட்டலாமெனவும் இந்த நூல் உறுதி கூறுகின்றது. தான் சார்ந்த சமூகத்தையும் முழு மானிடத்தையும் உயிராய் நேசித்து சேவையாற்றிய மகான் விவேகானந்தரும் இவ் ஆற்றல் கைவரப் பெற்றவர் என்பது அவர் வாழ்க்கை வரலாறினூடாகத் தெரியவருகிறது. மீண்டும் நூலாசிரியர் சொல்வதைப் போல இது மாயாஜாலம் அல்ல! தொடர்ச்சியான பயிற்சி மூலம் எட்டக்கூடிய ஒரு ஆற்றலே!ஆமாம் நம் வள்ளுவரும் அதைத்தான் குறுகத்தறித்த குறளாக்கியிருக்கிறார். "தொட்டனைத் தூறும் மணற்கேணி-மாந்தற்கு கற்றனைத்தூறும் அறிவு".*

## கரும்புலிகள் நாள் யூலை ~ 05



**தடையாய் நின்றவர்**
**கதை முடித்தவர்**
**கட்டியழ உடலோ**
**இல்லை**
**சொந்தமாக்க இன்னுமோ**
**விடியவில்லை**



கவிதைகள்

# இருளை கலைத்த கரிய முகில்கள்

(1)

கருமை பற்றிய
படிமம் மிகவும்
பெறுமதியானது.
கரிய முகில்களின் பெறுமதி
அளவிட முடியுமா?
முடியுமாயின் முயல்க...
உன் ஆயுளின் எல்லைக்கும்
அப்பாலெங்கோ
எல்லையற்றுப் பரந்திருக்கும்
அதனது தளத்தை
அளந்தறிந்து கொள்ள
முடியாது.
கரிய முகில்களின்
பெறுதியில் தான்
உலகு உண்கிறது
உலகு இயங்குகிறது.
கரிய முகில்களின் பெறுதியில்தான்
உலகு உலகாயிருக்கிறது.

(2)

இருட்டு கறுப்பா? வெளுப்பா?
சிவப்பா? மஞ்சளா?
இருட்டு என்பது யாது?
இருட்டும் கறுப்பும்
ஒன்றல்ல என்பதை
முதலில் முன்மொழிய வேண்டும்.

பகலில் இருட்டு,
பாடப்புத்தகத்தில் இருட்டு,
பதவியில், உறவில், பாதையில்,
புரிதலில், புரியாததில்...
என்றவாறான நீள்தலில்
உணரப்படாதன என்பதன்றி
உணர்த்தப்படாதனவும் இருட்டில்
அடக்க முடியும்.
இதனை விடவும்
மறைக்கப்பட்டன
இருட்டென்பது
கூடுதல் பொருத்தமுடையது.

(3)

இருள் படிந்திருந்தது
எமது மண்ணில்
வண்ணங்களால் சோடிக்கப்பட்டிருந்தது
அழகான என்னதன் அடைமொழியில்
சுதந்திரம் என்பதே
இது வென்றவாறாக
போதிக்கப்பட்டதில்
உலகு மங்கியது.
கவிந்த இருளைக்
கரிய முகில்கள் மோதிக்
கழுவிக் கலைத்தன.

வண்ணங்களால்
சோடிக்கப்பட்டிருந்த வாழ்வின்
அவலங்களின் குறியீடுகள்
மண்டையோடுகளாய்,
சுருட்கம்பிகளாய்,
மண் அணைகளாய், வெடி வயல்களாய்,
இன்னுமின்னும் பலவாய்
இருந்தவையாவும்
துடைபட்டன.

கருமுகில்களின் மேனிப் பொழிவில்
இருள் கழுவுண்டு கரைந்து போனது.
உண்மை உதித்தது.
துயர் கலைத்தது.

எல்லாமும்,
இருளைக்கலைத்த
கரிய முகில்களினால்
இருந்தன இருந்தபடி
உள்ளன உள்ளபடி
துலங்கத் தொடங்கிற்று.

கை.சரவணன்

# யூலை - 5

நெருப்பே நீ நீதி கூறு
உன்னை ஆடைதரித்து
நடந்த வேங்கை-
இவன், இவள் தொடர்ந்த யாகம் கூறு.

எனக்காய்- உனக்காய்- எமக்காய்
நெருப்பால் நின்று எரிந்த
நிலையைக்கூறு.
பகலாய் இரவாய் - பருவம்
தொலைத்த - இவர்கள் தருமம் கூறு.

மண்ணின் மீதும்- மக்கள் மீதும்
நெஞ்சில் கொண்ட பற்றால்
மரணம் அதை மோதி அணைத்திட
சிவக்கும் தணலாய் சிரித்துச் சென்ற தீரம் கூறு.

நடக்கும் என்பது முன்னமே
அறிந்த ஞானி இவர்கள்
ஞானம் கிடைத்ததாலேயே - மண்ணில்
பிறக்கும் போதே - குறிக்கப்பட்ட
புனித வாழ்வின் கதையைக் கூறு

கடலின் மீது ஒரு புயலாய்
கலம் தகர்த்த இவர்கள் கதையைக் கூறு
தரையில் ஊர்ந்து வந்த டாங்கிகள்
மீது உயிரே உடைக்கும் குண்டுகளாய்
மாறிய நிலையைக் கூறு.

இவை எல்லாம் இம் மண்ணில் எதற்காய்?
மேன்மையான மானிடத்தின் உரிமைக்காய்
சமத்துவத்திற்காய், சமதர்மத்திற்காய்
இம் மண்ணின் விடுதலைக்காய்
மரணம் மீதே பயணித்த-
மாமனிதர்கள் இவர்கள்.

உன்னதமான விலைமதிக்கமுடியாத
தமிழினத்தின் - தீரமிகு
தலைவரின் கரத்தினால்
ஊட்டி வளர்க்கப்பட்ட
தியாகச் சீலர்கள் இவர்கள்.

இவர்களின் அழியாத தியாகத்தால்
எம்தேசமே இன்று விழித்து- நிமிர்ந்து
தன் தூய்மையான, மகத்துவம் நிறைந்த
சுதந்திரப்பயணத்தை தொடர்கிறது.

அந்தப் புகழுக்குரிய புனிதர்களின்
உன்னதமான திருநாளே
யூலை ஐந்து என்னும் -பெருநாள்


ம.யாழ் ஆன்சிலின்

# நினைவில் கொள்க

சிறிதளவில் என்றாலும்
எல்லோரும் கொடுத்தார்கள்
எல்லாவற்றையுமே
சிலர் கொடுத்தார்கள்
உண்மையான விடுதலைவரை
சிலரே கூட வாருவார்கள்
சிலரோ
வித்தாகிப் போனார்கள்
எப்போதாவது நீங்கள்
என்னை நினைவு கொண்டால்
நீங்கள் பெற்றுவிட்ட உரிமைகளையும்
நினைவு கொள்ளுங்கள்
எல்லாவற்றையும்
சிலர் கொடுத்தார்கள்
என்பதையும் தான்.

பில்லி றேஸைறஸ்

தமிழில்:- வின்சென்ற் புளோறன்ஸ்



# இலக்கியப்பகிர்வு

“தமிழ் மொழிக்கான ஒரு கௌரவமான இடத்தை அடைந்துகொள்வதற்கு எங்கள் வாழ்வு தமிழ் வாழ்வாக அமைவதற்கும் அரும்பாடுபடும் தமிழ்ச்சங்கத்தின் முயற்சிகளின் வெளிபபாட்டின் ஒரு பகுதியே இந்த நூல் வெளியீடு”

சத்தமின்றி முடிக்கப்பட்ட ஒரு பெரும் பணி இப்போது எங்கள் நினைவுகளில் இருந்து விலகத்தொடங்கிவிட்டது. கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட “மாணவர் வாழ்வில் திருக்குறள்” எனும் நூல் எம்மிடையே பரவலாக்கம்பெற வில்லை என்பது எமது வாழ்வியல் குறைபாட்டின் ஒரு குறியீடேயாகும்:

தமிழன், தமிழ்மொழி எனும் அடையாளத்தினால் ஒடுக்கப்பட்ட நாம் தமிழர், தமிழ் மொழி எனும் அடையாளங்களுடனே போராட்டத்தில் இறங்கினோம். அளப்பரும் ஈகம் எங்கள் அடையாளங்களை உலகின் முன்னே நிறுத்தி




## மாணவர் வாழ்வில் திருக்குறள்

புலிக்கொடியாய் எங்கள் தமிழ்த்தேசியம் உலகின் கண்முன்னே உயர்ந்து பறக்கிறது. இப்பெரும் தியாகங்களின் பின்னும் எங்கள் வாழ்வு தமிழ் வாழ்வாய் அமைந்திருக்கிறதா? எனும் கேள்விக்குரிய விடை எமது சமூகத்தின் ஆரோக்கியமான போக்கை சுட்டிநிற்கவில்லை.

இந்த நூல் கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தால் வருடம் தோறும் நடத்தப்படும் தமிழ் இலக்கியத் தேர்வை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டது. திருக்குறளின் மிகமுக்கியமான 108 குறள்களுக்கு அப்பாற்பட்டு மாணிக்கக் குறள்கள் முச்சீர் மணிகள், நாற்சீர் மணிகள் குறட்கருத்துக்களை அரன் செய்யும், ஆத்தி சூடியும் கொற்றை வேந்தனும், வினா விடையும் குறள் பற்றிய குறிப்புகளும் என இதன் பரப்பு விரிவடைகிறது.

தமிழ் மொழிக்கான ஒரு கௌரவமான இடத்தை அடைந்துகொள்வதற்கு எங்கள் வாழ்வு தமிழ் வாழ்வாக அமைவதற்கும் அரும்பாடு படும் தமிழ்ச் சங்கத்தின் முயற்சிகளின் வெளிப்பாட்டின் ஒரு பகுதியே இந்த நூல் வெளியீடு இன்று உலகெங்கும் பரந்து விரிந்து தனது ஆழ வேர்களை மூன்றாம் உலக நாடுகளின் சந்தைகளில் பெற்றுக்கொள்ளவும், வளங்களை மலிவாக சுரண்டிக்கொள்ளவும் வலை விரித்துள்ள முன்னேறிய மேற்குலகின் தாராள திறந்த பொருளாதாரக் கட்டமைப்பின் செல்வாக்கால் ஆங்கில மயமாக்கல் மொழிப் பிரதேசத்திலும், பண்பாட்டு மயமாக்கலிலும் இன்று மேல் ஓங்கியுள்ளது. எங்கள் தமிழ் வாழ்வியல் அடையாளங்களை காலனியாதிக்க சிந்தனைகளுக்கு உட்பட்டிருந்த காலத்தில் இருந்ததைப் போலவே இப்போதும் மலினமாகப் பார்க்கும் எங்கள் மனப் பாங்கும் மாற்றம் பெறவேண்டியதை தமிழ்ச் சங்கம் சுட்டிநிற்கிறது. எங்கள் அடிமை விலங் குகளை ஆபரணங்களாய் கொண்டாடும் எங்கள் மனப்பாங்கின் வெளிப்பாடும் ஆங்கிலத்தில் கையெழுப்பம் இடும் எங்கள் செய்கை சுட்டிநிற்கிறது எனும் தமிழ்ச் சங்கத்தின் கோரிக்கை சுதந்திரத்திற்கான ஒரு வேண்டுகையாகவே கொள்ள வேண்டியுள்ளது. நம் குழந்தைகளுக்கு இடப்படும் பெயர்கள் நம்மிடையே பரிமாறப்படும் தகவல் அட்டவணைகள் எல்லாவற்றிலும் தமிழ் அவசியமாகிறது.

மொழி என்பது பரிவர்த்தனைக்குரிய வெறும் ஊடகம் மட்டுமல்ல மொழி என்பது வரலாறு, நாகரிகம், இலக்கியம், அரசியல், என எல்லாவற்றின் ஊடேயும் விரவி எமது உடலை இயக்கும் ஒரு சக்தியாகிறது. இந்த சக்தியே மனித உடல்களின் இணைப்பின் மூலம் தேசத்தையும், தேசத்தின் எல்லைகளை அதன் நில உரு அமைப்பை மனித மனங்களில் ஏற்படுத்தி தேசமாய் உருவாகிறது. இவ்வாறு மொழி மூலமாய் மனித மனங்களில் உருவாகிய தேசப்பற்று உணர்வே ஏனைய மொழிகளின் திணிப்பை தனது நாட்டின் மீது நிகழ்த்தப்படும் ஆக்கிரமிப்பாய் உணரும். இதனையே பாரதிதாசன் எங்கள் வாழ்வும் “எங்கள் வளமும் மங்கா தமிழ் என்று சங்கே முழங்கு” என்று பாடினார். நில உருவாக்கல் இயந்திரமே மொழியாகத்தான் அமைகிறது. இன்றைய சிறிலங்கா அரசினால் உரு வாக்கப்படும் பாடத்திட்டங்கள் கூட எங்கள் மொழியின் வீச்சை முழுமையாக எமது இளையதலைமுறையினரை முழுமையாக அடையவிடாமல் தடுக்கும்வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. எமக்கு இப்போது வேண்டியதெல்லாம் எமது மொழியை மேம்படுத்தும் எமது வாழ்வை மேம்படுத்தும் பாடத்திட்டங்கள், பரீட்சைகள், தூய அறிவியல் மற்றும் சமூக அறிவியல் துறைகளில் ஏற்படும் புத்தொழில் மிகு மாற்றங்களை இணைக்கும் பல்கலைக் கழகங்கள், அறிவியல் கழகங்கள் என்பவையே கிளிநொச்சி மாவட்டத்தின் தமிழ்ச் சங்கமும் அதன் பணிகளும் பரீட்சைகளும் இந்த இலக்கில் பங்களிப்பை வழங்கும் செயல்முறைகளில் ஒன்று என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது.

அ.அன்பழகன்

**கரும்புலிகள் நாள் யூலை - 05**



காற்றும் கடலும் நிலமும்
உம்மை அறியும்
நாமும் அறிவோம்.
ஆனாலும் வாய்கள் திறவா
மனங்களே கசியும்
விழிகளும் தான்.




# குறியிருதல் போட்டி தடைகளைத் தாண்ட முடியுமா?



சிறிலங்காவைச் சேர்ந்த ஜானக விக்கிரம சுரேந்திர அகில உலக குறியிடுதல் (துப்பாக்கிசுடும்) போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். சிறிலங்காவின் குடித்தொகையில் அதுவும் சாதாரண மக்களிடையே பெரும் கவனத்தைப் பெற்றுக் கொள்ளாது போனாலும் ஊடகங்களில் குறிப்பாக ஆங்கில அச்சு ஊடகங்களில் அதுவும் சண்டேரைம்ஸ், டெய்லி மெரர் ஆகியவற்றின் விளையாட்டுப் பகுதிகளில் முக்கிய இடத்தைப்பெற்றுள்ளது. இதற்குக் காரணம் சண்டேரைம்ஸ், டெய்லிமெரர் என்பனவே இவருக்கான நிதி ஆதரவினை (SpoNser) வழங்கியிருந்தது.

உலகின் பல நாடுகளின் கவனத்தைப் பெற்றுள்ள இந்தப் போட்டி உலக விளையாட்டுத் தொகுதியில் குறியிடுதல் (Marksmanship) எனும் போட்டியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்போட்டி தனியான உலகப் போட்டியாகவும், ஒலிம்பிக் போட்டியில், ஆசிய

முடியாமல்போவதற்குச் சிறிலங்காவின் பாதுகாப்புச் சார்ந்த புறச்சூழ் நிலையும் இதற்கான உபகரணங்களின் உயர்விலையும், துப்பாக்கி ரவைகள் பெற்றுக்கொள்ளலில் உள்ள நடைமுறைச் சிக்கல்களும் இந்தப் போட்டியின் விருத்திக்குத் தடையாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகக் குறியிடுதல் போட்டியில் இலங்கையர் ஒருவர் வெண்கலப் பதக்கம் பெற்றுக் கொண்டது பற்றிய உரையாடலின் போது நண்பர் ஒருவர் 'ஸ்கோப் லென்ஸ் இல்லாமலே நானூறு மீற்றர் தூரத்தில் இருந்து. குறிதவறாமல்புல் (BULL) அடிக்ககூடியவர்கள் எங்களிடம் இருக்கின்றார் கள். உங்களால் இவர்களை ஆசியப் போட்டிகளுக்கும், உலகப் போட்டிகளுக்கும் அனுப்ப முடியுமா?' என்றார். தமிழன், அதுவும் வடகிழக்கு தமிழர் தாயகத்தில் வாழுகின்ற தமிழனுக்கு இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு சிறிலங்கா தேசிய சுடு குழல் துப்பாக்கிச் சங்கத்தூடாகப்(Sri Lanka National RiFile Association) பெற்றுக் கொள்ளல் சாத்தியமா எனும் கேள்வி நெரு டலாய் எழுகிறது.

Shooting is a difficult sport to become in Volved in because it barely keeps Within the parameters of the law. ஒரு சிறிய உபகரணத்தைக்கொண்டு செல்லுதல் கூட உங்களை சிறைச்சாலைகளில் விடும் ரவைகள், ரைபிள்கள் பெறுவதற்கான அனுமதி,

துப்பாக்கி சுடும் கழகங்களை அமைப்பதற்கும், பயிற்சி வழங்குவதற்கும் முயற்சிப்பதாக திரு. ஜானக விக்கிரம சுரேந்திர தெரிவிக்கிறார்.

ஆசிய நாடுகளிடையே 'குறியிடுதலில்' சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள இந்தியாவில் சாதாரணமாக இளைஞர்கள் இலகுவாக ஈர்க்கப்படக் கூடியவகையிலும், பங்குபற்றும் வகையிலும் ஒழுங்கமைப்புக்கள் உள்ளன. அங்கு பொதுமக்களின் பாவனைக்கான சுடுபயிற்சித்திடல்கள் அமைக்கப்பட்டு, மலிவான விலையில் துப்பாக்கி ரவைகள் கிடைப்பதற்கான ஏற்பாடு உள்ளது. துப்பாக்கிகளும், கழகங்களாலேயே வழங்கப்படுகிறது. இதனாலேயே அங்கு துப் பாக்கி

இந்தப் போட்டியின் வளர்ச்சிக்கு வழிவிடும் என்கிறார். ஜானக விக்கிரம சுரேந்திர, ஆனால் எங்களுக்கு தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் பட்டியலில் குறியிடுதல் போட்டிக்கான உபகரணங்கள் உள்ளதும், சிறிலங்கப் படையின் எங்களுடைய சாதாரண அரசியல் உரிமைகள், இயல்பான வாழ்வுக்கான வேண்டுகைகள், அரசியல் நடவடிக்கைகள், என்பவற்றில் கூட இப்போது தலையிடத்தொடங்கி விட்ட புதிய சூழ்நிலையில் இந்தப்போட்டிக்கான சர்வதேச அரங்

விளையாட்டுப் போட்டியில் ஆடப்படும் போட்டியாகவும் அமைந்துள்ளது. இந்தப்போட்டி சிறிலங்காவில் படையினரிடையேயும், மேட்டுக் குடி மக்களிடையேயும் செல்வாக்குப் பெற்றுள்ள போட்டியாக அமைந்துள்ள போதும், சாதாரண மக்களிடையே 'செல்வாக்குச் செலுத்த

சூட்டுப்பயிற்சிக்களம் இல்லாமை, நவீன உபகரணங்கள் வாங்க முடியாமை போன்றவையோடு இளைஞர்களுக்கு ஆர்வம் ஏற்படுத்த முடியாமை போன்றவையும் பிரச்சினையாகவே உள்ளது. ஆயினும் சிறிலங்காவில் ஆறுபாடசாலைகளைத்தெரிவுசெய்து மாணவர்

சுடுதல் விளையாட்டு, சற்று மேம்பாடடைந்துள்ளது. பல பாடசாலைகள், கல்லூரிகள் துப்பாக்கி சுடுதல் போட்டிகளைத்தமது விளையாட்டுப் போட்டியின் ஒரு அங்கமாகக் கொண்டிருக்கிறது.

மனப்பாங்கில் ஏற்படும் மாற்றங்களே

கினுள் நாம் நுழைவதற்கு அனு மதிப்பார்களா என்பதற்கான விடைகள் எங்கள் எல்லோருக்கும் நன்கு தெரியும். □

**திசையன்**

## இலக்கியப் போட்டி-2004 முடிவுகள்

**கப்டன் வானதியின் 13 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கப்டன் வானதி வெளியீட்டகம் நடாத்திய கவிதை, சிறுகதை, கட்டுரை, மற்றும் ஓவியப் போட்டிகளில் பரிசு பெற்றவர்கள்.**

### கவிதைப் போட்டி

**முதலாம் இடம்:-** 'பிந்திய புரிதல்கள்'
செல்வி.காயத்திரி இராஜேஸ்வரன்
கோண்டாவில்-இருபாலை வீதி,
கோப்பாய்.

**இரண்டாம் இடம்:-** "அம்மாவின் வழியில்..."
புதிய பாரதி (முருகையா விமலாம்பிகை)
ஸ்ரீ வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.

**மூன்றாம் இடம்:-** 'காலம் மாறிப்போச்சு'
செல்வி.ப.மாலா
இல.105,ஹயன் போட் , A
தெப்கிந்த, நாவலப்பிட்டிய.

### சிறுகதைப்போட்டி

**முதலாம் இடம்:-** 'மௌனத்திரை விலக...'
திருமதி.அ.மேகவண்ணன்
மே/பா.S.இராசலிங்கம்
07ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

**இரண்டாம் இடம்:-** 'பூ ஒன்று புயலானது...'
P.உமா
ஆத்திமோட்டை,மன்னார்.

**மூன்றாம் இடம்:-** 'உன்னத முத்து...'
வே.வாசுகி
CB:சொய்சாபுர,மொரட்டுவ.

### கட்டுரைப்போட்டி

**முதலாம் இடம்:-** 'பெண்களும் சமுதாயமும்'
ஜெயந்தினி ஜெயரூபன்
இல.01, கரப்பன் காடு,
வவுனியா.

**இரண்டாம் இடம்:-** 'போர்ச் சூழலில் தமிழீழ பெண்களின் வாழ்வும் பொழுது போக்கும்'
அ.காந்தா
2ம் லெப். மாலதி படையணி

**மூன்றாம் இடம்:-** 'எங்கே செல்கிறது எமது சமுதாயம்'
பா.ஷாரங்கா
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.

### ஓவியப்போட்டி

**முதலாம் இடம்:-** செல்வி.இராசநாயகம் ராஜகுமாரி
2004 கலைப்பிரிவு A
மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம், முல்லைத்தீவு.

**இரண்டாம் இடம்:-** வசந்தி சிவசுப்பிரமணியம்
இல.723,சிவிச்சென்ரர், வட்டக்கச்சி.

**மூன்றாம் இடம்:-** சிவகுமார் ஜெனகா
இல.25, 2ம் குறுக்குத்தெரு, கூழாங்குளம், வவுனியா.

**பரிசு பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் 11.07.2004 அன்று மாலை 3.00 மணிக்கு கிளிநொச்சி கலா மண்டபத்தில் நடைபெறும்.**

**கப்டன் வானதி வெளியீட்டகம்.**
**தமிழீழம்.**

(சி.4621)



## காணவில்லை

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த கந்தையா செல்வராசா என்பவரைக் காணவில்லை. இவரைப்பற்றி தகவல் தெரிந்தவர் உடனே தெரிவிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்
மனைவி-செ.கமலம்
இல.ஜெயந்திநகர்,
கிளிநொச்சி

(4622)

நாடு பூராகவும் ஈழநாதத்தைப் பெறலாம்

2004

## ஈழநாதம் பத்திரிகை சந்தா விபரம்

| காலம் | வெள்ளிநாதம் | தினசரி | வெள்ளிநாதமும் தினசரியும் |
|---|---|---|---|
| 1/4 ஆண்டுக்கு | 300/= | 750/= | 975/= |
| 1/2 ஆண்டுக்கு | 550/= | 1400/= | 1850/= |
| ஆண்டுக்கு | 1000/= | 2650/= | 3600/= |

**தபால் மூலம் உங்களிற்கு பத்திரிகைகள் அனுப்பி வைக்கப்படும்**

**சந்தாதாரர்கள் தொடர்புகொள்ள வேண்டியமுகவரி**


பொதுமுகாமையாளர்,(ஈழநாதம்)
யாழ்.சாலை,கிளிநொச்சி.




ஒரு குடும்பம் என்று எடுத்துக் கொண்டால் அங்கு உள்ள பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ்தில் பெண்கள் அதிகமாயிருக்கிறார்கள். ஆண்களும் இருக்கின்றனர் தான் பெரும்பாலும் பெண்களே அப்பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். குடும்பத்தில் நடைபெறும் என்ன விடயமாக இருந்தாலும் பெண்ணை மட்டும் விடாமல் ஆண்களும் பங்கெடுத்துக்கொண்டால் அவளின் சுமையும் குறையும். இல்லாள் என்பவள் இல்லத்தை ஆள்பவள் அவள் சுகமாக இருந்தால் தான் அங்குள்ள அங்கத்தவர்கள் சுகதேகிகளாக வாழமுடியும். இதை ஒவ்வொருவரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

வீட்டில் தம் மனைவிமாருக்கு கணவன்மார் பணம் கொடுப்பதோடு மட்டும் தம் கடமை முடிகின்றது என்று ஒரு நாளும் எண்ணவே கூடாது. அவளின் உடல் நலத்திலும் அக்கறை காட்ட வேண்டும். நாள் தோறும் தன் கணவன் பிள்ளைகள் என்று பாடுபடும் இல்லாளை ஐந்து நிமிடமாவது பிள்ளைகளும் கணவன் மாரும் சிந்திக்கவேண்டும்.

கஷ்ரமான இரு குடும்பத்தை எடுத்துக்கொண்டால் அங்கு



## ஆண்களும் பங்கெடுத்தால் நலமே...

சாப்பாட்டுக்கே தட்டுப்பாடாய் இருக்கும் அப்படி இருக்கும் போது மனைவி என்ன செய்வாள் இருப்பதையெல்லாம் தன் கணவன் பிள்ளைகள் என்று கொடுத்து விட்டு ஏதோ மிச்சங்களை தான் சமாளித்துக்கொள்வாள்.

தன் குடும்பத்துக்காக உழைப்பவருக்கு இந்தளவு போசனை உணவு காணுமா. அப்படிச் சாப்பிட்டு எப்படி அவனால் தன் கடமைகளைச் செய்யமுடியும். கணவன்மார் இதை மிகவும் கருத்தில் எடுக்கவேண்டும். சாப்பிடும் போது சில கணவன்மார் மனைவியை சாப்பிட்டாளா என்று கேட்பதே அரிது. எப்போது கணவன் வருவார் கொடுத்துச் சாப்பிடுவோம் என்று இருக்கும் அப்பெண்ணுக்கு இப்படி பாராமுகமாக ஆண் நடந்தால் எப்படி வேதனைப்படுவாள். இதனால்தான் இன்று பல பெண்கள் இளமையில் முதுமையை அடைகின்றனர். வீட்டில் இப்படியான குணமுள்ள பிள்ளைகள் கணவன்மார் திருந்தினால் இல்லாள் நீண்ட நாட்கள் பிரகாசமாய் இருந்து அங்குள்ள அங்கத்தவர்களையும் மிகவும் ஒளிரவைத்து சிறப்பாக்க முடியும்.

சு.சிவாஜினி

## பாகற்காய் இறைச்சிக் குழம்பு




| | |
|---|---|
| இறைச்சி | 250 கிராம் |
| பாகற்காய் | தேவையான அளவு |
| மஞ்சள் தூள் | 20 கிராம் |
| தேங்காய் | சிறிதளவு |
| ஏலக்காய் | 6 |
| கராம்பு | 6 |
| பூண்டு | பாதி (1/2) |
| உப்பு | தேவையான அளவு |
| தனியா | 15 கிராம் |
| நறுக்கிய வெங்காயம் | அரை கைப் பிடி அளவு |
| மிளகாய் | 12 |
| இஞ்சி | 1 துண்டு |
| இலவங்கப்பட்டை | 1 துண்டு |
| எண்ணெய் | 100 மி.லி |
| புளி | சிறிதளவு |

பாகற்காயைச் சிறு சிறு துண்டுகளாக அரியவும். பிறகு ஒரு சட்டியில் போதிய அளவு நீர் ஊற்றிக் கொதிக்க வைத்து அரிந்து வைத்த பாகற்காய்களை அதில் எடுத்துப் போடவும். சிறிது நேரத்திற்கெல்லாம் சட்டியை இறக்கி, தண்ணீரை வடித்துவிடவும். கொதி நீர் வடிந்ததும் குளிர்ந்த நீரை அதேசட்டியில் ஊற்றி, பாகற்காய்களை அதில் நன்றாகக் கழுவியெடுத்துக் கொள்ளவும் கழுவியதை ஒரு பாத்திரத்தில் போட்டு வைத்துக் கொள்ளவும்.

இறைச்சியை தேவையான அளவில் துண்டுகளாக நறுக்கி கழுவியெடுத்து. ஒரு பாத்திரத்தில் போடவும். மஞ்சள் தூள், உப்பு, நறுக்கிய வெங்காயம் ஆகியவற்றை அதில் போட்டு 200 மி.லி. தண்ணீரையும் ஊற்றி, இறைச்சியை வேகவைக்கவும். மிளகாய், தனியா ஆகியவற்றை வெறுமனே வறுத்தெடுத்துத் தேங்காய், ஏலக்காய், கராம்பு, இஞ்சி, இலவங்கப்பட்டை ஆகியவற்றையும் அவற்றுடன் சேர்த்து அம்மியில்வைத்து நன்கு அரைக்கவும், அரைத்த மசாலாவுடன் நசுக்கி எடுத்த பாதிப் பூண்டையும் எடுத்து ஒன்றாகச் சேர்த்துக்கலக்கவும். பிறகு கறிச் சட்டியில் உள்ள இறைச்சியானது வெந்து, தண்ணீர் சுண்டியதும் 100மி.லி. எண்ணெயை ஊற்றி,முன்பு வெள்ளைப்பூண்டோடு தயாராகக் கலக்கி வைத்த மசாலாவை எடுத்துக் கறியில் போட்டு, அத்துடன் நில்லாமல் கழுவிவைத்த பாகற்காய்களையும் அதில் சேர்த்து மொத்தமாக ஒரு முறை நன்றாகக் கிளறிக் கறிச் சட்டியை மூடிவிடவும்

பத்து நிமிடநேரம் கழித்து மேலும் ஒரு 200.மி.லி. அளவு தண்ணீரை ஊற்றி வேகவைக்கவும். பாகற்காயானது வெந்ததும் சிறிதளவு தண்ணீரில் புளியைக் கரைத்து வடிகட்டிக் கறிக்குழம்பில் ஊற்றி நன்றாகக் கொதிக்க வைத்துப் பிறகு இறக்கி விடவும்.

பாகற்காயானது குழம்பில் நன்றாக ஊறிய பின்பே குழம்பைச் சோற்றுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். குழம்பு ருசிக்கும்.

## சமையலுக்கு உகந்த முட்டையைத் தெரிவு செய்தல்

முட்டையைத் தேர்ந்தெடுப்பது எப்படி? அதைச் சமையலுக்குப் பயன்படுத்தும் விதம் எப்படி? என்பதைக் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம்.

சமையலுக்குப் புது முட்டைகளைத்தான் பயன்படுத்த வேண்டும்.

சரி. புது முட்டையா பழைய முட்டையா என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது?

முட்டையின் ஓடு பளபளப்பாய் இருந்தால் - உஷார்! அது பழைய முட்டை! இதற்குக் கொஞ்சம் அனுபவம் வேண்டும்.

ஃபூ ல் ப்ரூஃப் (Fool Proof) உத்தி இன்னொன்று இருக்கிறது. குழிவான பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக் கொள்ளுங்கள். சோதிக்க வேண்டிய முட்டையை அதனுள் மெல்லப் படுக்கவிடுங்கள். கையை எடுத்து பின்னும் அது படுத்திருந்தால் நல்ல முட்டை. எழுந்து உட்கார்ந்திருந்தாலோ. மிதந்தாலோ டேஞ்சர் -அது பழுதடைந்துபோனது.

வெளிச்சத்தில் பார்க்கும் முறை ஒன்று இருக்கிறது. முட்டை பொருந்தும் அளவுக்கு விட்டம் (ஓட்டை) வைத்த ஒரு பெட்டி உள்ளே பல்ப் எரியவேண்டும். பெட்டியின் ஓட்டையை முட்டையால் அடைத்துப் பார்த்தால் உள்ளிருந்த திரவத்தை ஊடுருவி வெளிச்சம் தெரியும். திரவத்தில் ஏதேனும் கரும்புள்ளிகள் தெரிந்தால் - அது புழுதடைந்துபோன முட்டை.

### கரும்புலிகள் நாள் யூலை - 05



*சிலந்தியின் பின்னலாய் இறுக்கும் இழைகளுள்ளும் நாங்கள் உயிர்ப்பது உம் பலத்தில். எம் பிள்ளைகளே!*

## பரஸ்பரம் புரிந்துணர்வு வேண்டும்

இவ்வுலகில் பெண்ணாகப் பிறந்தது பெருமை. தரக்கூடிய தாயிருந்த போதிலும் ஏனோ இன்னும் ஆணாதிக்கத்தின் கீழ் வாழ்கின்றனர். சமுதாயத்திலே சில தவறுகளால் ஆணாதிக்கத்துக்கு இசைவானதாக இருக்கிறது. சட்டபூர்வமான வசதிகளையும், உரிமைகளையும் பெறுவதற்கு பெண்களும் உரிமையுடையவர்கள். அனைத்தும் சமமாகவே மேற்கொள்ளப்படவேண்டியது மிக முக்கியமானது. ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான கணவன் மனைவி என்னும் சட்டரீதியான உறவுகளில் சற்று தாழ்வுப் பிரதிபலிப்புக்களை நீக்குதல்அவசியமாக இருந்தாலும் கூட இவைகளும் சில காலம் மட்டுமே நீடிக்கக் கூடியவைகள்.

இன்று பெண்கள் சமுதாயம் பல்வேறான வழிமுறைகளில் முன்னேற்றம் காண நினைத்தாலும் தடைகள் அவர்களை தொடர்ந்து கொண்டிருப்பதை உணரலாம். பெண்கள் தியாகத்தின் வடிவினர். பொது வாழ்வில் இவர்கள் ஈடுபடுவதன் மூலம் அவ்வாழ்க்கை புனிதப்படுகின்றது. பெண்கள் இன்று பலதுறைகளில் பிரபல்யம் பெற்று விளங்கினாலும் கூட இறுதிவரையில் அத்துறைகளில் முழுமையாக அவர்களால் பிரகாசிக்க கடுமையாக போராட வேண்டியவர்களாகவே உள்ளனர். உரிமைகளிருந்தும் அனுபவிக்க முடியாதவர்களாயிருப்பதற்கு காரணம் ஆண் பெண் இருவருக்கிடையிலான விட்டுக்கொடுக்காத புரிந்துணர்வற்ற தன்மையே காரணம். பெண்கள்கூட தங்கள் அறியாமையாலேயே ஆடவர்களை அடக்கிவைக்க முற்படுகின்றனர்.

இதனால் ஒருவரை ஒருவர் வெல்ல முடிவதில்லை இதனை சமுதாயத்தில் மிகக் கடுமையான பிரச்சினையென எடுத்துக் கொள்ளலாம் இது போன்ற சிக்கலைத் தீர்ப்பதே எல்லோரினது கடமையுமாகும்

றஜித்

வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு இப்பகுதிக்கு நீங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:

**வீடு,**
**வெள்ளிநாதம்,**
**ஈழநாதம்,**
**யாழ்சாலை,**
**கிளிநொச்சி.**

## இப்படிச் செய்யலாம்...

முகம் பார்க்கும் கண்ணாடி தெளிவாக இருக்க வேண்டும். நல்லதாக இருக்க வேண்டும். மட்டமான முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்த்து வந்தால் கண்கள் கெட்டுப் போகும். பிறகு, இந்தக் கண்களைச் சரி செய்ய வழி இல்லை.

* * *

தங்கத்தினால் அல்லது வெள்ளியினால் ஆன நகைகளைக் கொஞ்சம் சூடான தண்ணீரில் சோப்புப் போட்டுக் கழுவினால், நகைகள் பளபளப்பாக இருக்கும். நகைகளில் உள்ள அழுக்குப் போக, மிருதுவான பிரஷ்ஷை உபயோகிக்க வேண்டும்.

* * *

வீட்டில் தயாரிக்கும் டீயில் சில துளிகள் வெனிலா எஸ்ஸென்ஸைச் சேர்த்துக் கொள்ளுங்கள். டீ மணத்தோடு இருக்கும் சுவையாக இருக்கும்.

* * *

வீடுகளில் வாரத்திற்கு ஒருமுறை சாம்பிராணிப் புகை போட வேண்டும். கொசுக்கள், நோய்க் கிருமிகள் அழியும்.

* * *

நைலோன் துணியைத் தைக்கும்போது ஊசி லேசில் இறங்காது. ஊசியை அடிக்கடி சோப்பில் குத்தி எடுத்து நைலோனைத் தைத்தால் சுலபமாக ஊசி இறங்கும்.




குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர். நீங்கள் செய்ய வேண்டியது கீழ்காணும்கூப்பனை நிரப்பி தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பவேண்டும். அனுப்பி வைக்கப்படும் கூப்பன்களில் குலுக்கள் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது. உங்கள் கூப்பன்களை வெள்ளிநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

குமரகுரு பரிசுத்திட்டம்-03

பெயர்:..................................................

முகவரி:................................................

..................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 01

### பகுதி -03

ஆசிரியைகளை முழுமையான குழப்பத்தில் டிப்ஸ் மூழ்கடித்திருந்தான். பாடசாலையின் உளவியலாளர் டிப்ஸை அவதானித்திருக்கிறார். பலமுறை அவனை பரிசோதிக்க முயன்றிருக்கிறார். ஆனால் பரிசோதிக்கப்படுவதற்கு டிப்ஸ் ஆயத்தமாக இருக்கவில்லை. பாடசாலையின் குழந்தை மருத்துவர் அவனை பல முறை அவன் விடயத்தில் உதவமுயன்று பின்னர் ஏமாற்றத்தோடு முயற்சியைக் கைவிட்டிருந்தார். வெண்ணிற மேல் கோட்டு அணிந்த மருத்துவரை பற்றி மிகவும் விழிப்போடு இருந்த டிப்ஸ் அவரை தனக்கு கிட்டவாக அணுகிவரக் கூட அனுமதிக்கவில்லை. எவராவது தன்னை அளவுக்குமீறி அணுகி வரமுயன்றால் பின்னால் நகர்ந்து போய் சுவரோடு முதுகை வைத்துக் கொண்டு வரமுயல்பவரை

அழுத்தங்களின் காரணமாகவே முன்பள்ளிக் குழுவில் அவன் அனுமதிக்கப்பட்டிருந்தான்.

டிப்ஸுக்கு உளவியல் நிபுணர்களின் உதவி தேவை என்று ஆசிரியைகள் பலமுறை கூறியிருந்தார்கள். அப்போதெல்லாம் "அவனுக்கு இன்னும் கொஞ்சம் காலம் கொடுத்தால் சரியாகிவிடும்" என்று மீண்டும் மீண்டும் அவன் தாயார் கூறுவார். இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்திருந்தன. டிஸ்ஸில் சிறிது முன்னேற்றம் இருந்தாலும் அது போதாது என்று ஆசிரியைகள் கருதினார்கள். இப்படியே இழுபட விட்டுக் கொண்டிருப்பது டிப்ஸ்ஸைப் பொறுத்தவரை நியாயமானது அல்ல என்று அவர்கள் எண்ணினார்கள். அவன் தன் கூட்டுக்குள் இருந்து வெளியே வருவான் என்று நம்பிக்கையோடு எதிர்பார்க்க மட்டுமே அவர்களால் முடிந்திருந்தது. அவனைப் பற்றி ஆலோசிக்காத நாட்களே இல்லையெனலாம். அப்படி ஆராயும் ஒவ்வொரு சமயத்திலும் அந்தப் பிள்ளை அவர்களை மேலும் குழப்பமடையச் செய்பவனாகவும் சவால் விடுபவனாகவுமே இருந்தான். அவனுக்கு ஐந்தே வயதுதான் ஆகியிருந்தது. அவனைச் சூழ இருப்பவற்றைப்பற்றி அவன் புரிந்து கொண்டிருப்பதும் அவற்றை தனக்குள்ளேயே பூட்டி வைத்துக் கொண்டிருப்பதும் உண்மையிலேயே சாத்திய மானதா? அவன் ஆழ்ந்து போகும் பொத்தகங்களில் உள்ளவற்றை அவன் வாசிப்பதாகவே தோன்றுகிறது. தன் எண்ணங்களை வாயால் சொல்ல முடியாதவனால் எப்படி வாசிக்க முடிகிறது.? இது பெரும் முரண்பாடானதாக இருக்கிறதே என்று தமக்குத்தாமே சொல்லிக்கொள்வார்கள். இப்படி ஒரு புதிரான பிள்ளை உளவளம் குன்றியதாக இருக்க முடியுமா?

தானே உருவாக்கி விட்ட ஒரு உலகில்




## முடுபனிக்குள் ஒரு தேடல்

மொழியாக்கம் :- வி.பி.யோசப்

பிராண்டுவதற்கும் தாக்குவதற்கும் ஆயத்தமாக கைகளை மேலே தூக்கி வைத்துக் கொள்வான்.

"அவன் ஒரு புதிரான பையன் அறிவு வளர்ச்சி குன்றியிருக்கிறதா? உளவியல் பாதிப்பா? மூளை சேதப்பட்டிருக்கிறதா? யாருக்குத் தெரியும்! இப்படி ஏன் நடந்து கொள்கிறான் என்பதைக் கண்டு பிடிக்க அவனுக்குக் கிட்டப்போக வேண்டுமே" என்பார் அந்த மருத்துவர்.



அது உள வளர்ச்சி குன்றியவர்களுக்கான பாடசாலையல்ல. உணர்வு ரீதியாகப் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்குரியதுமில்லை. மூன்று வயதிலிருந்து ஏழு வயது வரையான பிள்ளைகளுக்கான மிகப்பிரத்தியேகமான தனியார் பாடசாலையாக அது இருந்தது. ஈஸ்ட் சைட்டின் மேற்பகுதியில் அழகானமாளிகை யொன்றில் அது அமைந்திருந்தது. மிகப்புத்திசாலிகளான உயர் சமூகப் பிள்ளைகளின் பெற்றோருக்கு பிடிக்கக் கூடிய மரபுகள் அங்கே பேணப்பட்டன.

டிப்ஸின் தாயார் தலைமையாசிரியையிடம் அவனை ஏற்றுக் கொள்ளும்படி பிடிவாதமாக வலியுறுத்தியே அவனை அங்கு சேர்த்திருந்தார். அவனைப் பாடசாலையில் அனுமதிப்பதற்கென்று பாடசாலையின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் ஊடாகச் செல்வாக்கைப் பிரயோகித்திருந்தார். டிப்ஸ்ஸினுடைய பரிய தாயார் அந்தப் பாடசாலைக்குப் பெருவு நிதியுதவிகளை வழங்கி வந்தார். இந்த

அவன் வாழ்கிறானா? அவனுடைய நடத்தை உளவளம் குன்றிய ஒரு பிள்ளையினுடையதாக தோன்றவில்லை. தன்னை மட்டும் நேசிப்பவனாக அவன் இருக்கிறானா? யாதார்த்தத்துடன் தொடர்பே இல்லாமல் வாழ்கிறானா? அநேக சந்தர்ப்பங்களிலே அவனுடைய உலகம் ரணங்களை ஏற்படுத்தும் யதார்த்தமாக... துயர்கள் தந்த வேதனைகளால் ஆனதாக... இருந்திருக்கலாம் என்றே தோன்றியது.

டிப்ஸ்ஸின் தந்தையார் நன்கு அறியப்பட்ட ஒரு விஞ்ஞானி. மிகுந்த அறிவாளி என்று எல்லோரும் கூறினாலும் பாடசாலையில் உள்ள எவரும் அவரைச் சந்தித்திருக்கவில்லை. டிப்ஸுக்கு ஒரு தங்கை இருக்கிறாள். டொறத்தி "மிகவும் புத்திசாலி" என்றும் "முழுநிறைவான குழந்தை" என்றும டிப்ஸ்ஸின் தாயார் கூறிவந்தார். அவள் இந்தப் பாடசாலைக்குவருவதில்லை. ஒருமுறை சென்ட்ரல் பாக்கில் வைத்து டொறத்தியையும் அவளது தாயாரையும் ஹெடா சந்தித்திருந்தாள். அவர்களோடு டிப்ஸ் வந்திருக்கவில்லை. "முழுநிறைவான டொறத்தி" என்று தாயார் பீற்றிக் கொள்பவள் ஒரு "வெம்பல் காய்" என்று தான் நினைப்பதாக கெடா மற்றைய ஆசிரியர்களுக்கு பின்னர் கூறினாள் கெடாவுக்கு டிப்ஸின் மேல் அனுதாபம் கலந்த அக்கறை இருந்தது டொறத்தியைப் பற்றிய தனது மதிப்பீடு பக்கச் சார்பானதாக இருந்திருக்கலாம் என்பதை அவள் ஏற்றுக் கொண்டிருந்தாள். அவள் டிப்ஸ் பற்றி நம்பிக்கைகொண்டிருந்தாள். என்றைக்காவது ஒருநாளைக்கு பயத்தாலும் கோபத்தாலும் ஆன தன் சிறைக்குள் இருந்து டிப்ஸ் எப்படியாவது வெளியே வருவான் என்று அவள் நம்பினாள்.

(தொடரும்....)

## தொடர் - 25

"ஓரளவு அமைதிதான், ஆனால் அது எவ்வளவு காலம் நிலைக்கும் என்பது தான்...." என்னும் போதே அவர் குறுக்கிட்டார்:

"அதுநிரந்தரமாக நிலைக்க வேண்டும்; அது தான் எல்லோருடைய விருப்பமும்!" குரல், மனதார ஒலித்தது.

"நீங்கள் தப்பாக நினைத்துக் கொள்ளவில்லை யென்றால் ஒன்று கேட்கலாமா?" - மெல்லக் கேட்டேன்.

"வடிவாகக் கேளுங்கள்!"

"உங்கள் மத்திய அரசு கூட அப்படி விரும்புகிறதென்று கொள்ளலாமா?"

புன்னகை மாறாமலே இரண்டு கணம் உற்றுப்பார்த்துவிட்டு ஆதுரந்தொனிக்கும் ஒரு குரலில் மெல்லச் சொன்னார்:

"மக்களையும் அரசையும் குழப்பிக் கொள்ளாதீர்கள்.... நீங்கள் இந்த இருபதாண்டு காலமும் பட்ட கஷ்டங்களை எம்மில் பலர் நன்கறிவார்கள். உங்கள் துயரங்களுக்கு ஒரு நல்ல முடிவு வர வேண்டும் என்பது தான் அப்படிப்பட்டவர்களின் விருப்பம். இதை நீங்கள் நம்பலாம்......"

ஜெயகர் தந்த அதே மன உணர்வைத் தந்த வேறிருவரை மஸாய் மாறாவிலேயே அடுத்த நாள் சந்திக்க நேர்ந்தது. அறைக்குத் திரும்பிய போது பதினொன்றுக்கும் மேலே. படுத்ததுதான் தெரியும்.

அடுத்த நாட்காலை, எட்டு மணிக்கே புறப்பட்டாயிற்று.



(கென்யப் பயணக்கட்டுரை)

# காட்டு வெளியிடை

"நீங்கள் இலங்கையில் எந்தப் பகுதி?"

"வடக்கே யாழ்ப்பாணம். கேள்விப் பட்டிருக்கிறீர்களா?"

"ஓ!... அப்போ தமிழர்கள் தானே?"

"ஓம்!"

இலங்கைத் தமிழர்களிருவரை எதிர் பாராமல் சந்தித்ததில் ஃபெரோசுக்கு மெத்த மகிழ்ச்சி என்று தெரிந்தது.

அயூப்பைப் பொறுத்தளவில், இலங்கை விவகாரங்கள் அவ்வளவு அவர் காதில் விழுந்திருந்ததாய்ப் படவில்லை. ஒரு நாள், ஏதோ கதையில், "நீங்களிருவரும் பேசுவது ஒரு பாஷை அந்த லேடி பேசுவது வேறு யாஷை இல்லையா?" என்று என்னைக் கேட்டார். "எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?" என்று பதிலுக்குக் கேட்ட போது. ஆளுக்கு வலு சந்தோஷம். அவ்வளவோடு சரி. அதைக் குறை கூற முடியாது.

ஆனால், அப்படித்தானிருக்க வேண்டிய இந்த ஃபெரோஸ், எங்களோடு எந்த சம்பந்தா சம்பந்தமுமில்லாத ஒரு இளைஞன், கிரிக்கெட்டைப் பற்றியோ சினிமாவைப் பற்றியோ கவலைப் படுவதை விடுத்து மடத்தனமாக எங்களைப் பற்றி எங்கள் பிரச்சினைகள் பற்றியெல்லாம் ஆர் வம் கொண்டிருக்கிறான். அது மட்டுமன்றி சில பல விஷயங்களைத் தெரிந்தும் வைத்திருக்கிறான்! முக்கியமாக புலிப் போராளிகள் கழுத்தில் சயனைட்குப்பிகட்டியிருக்கிற விஷயம் அவனை எக்கச்சக்கமாக ஈர்த்திருப்பது புரிந்தது. இந்தியாவிலிருந்து எவர் வந்தாலும் ஒரு பரவசத்துடன் எங்கள்



சாந்தன்

காட்டில் ஒரு 'றவுண்ட்' அடித்துத் திரும்பி வந்து மீண்டும் பத்துப் பத்தரைக்கு அருகிலுள்ள மஸாய் கிராமமொன்றைப் போய்ப் பார்ப்பதாக ஏற்பாடு.

நானும் செல்வாவும் தயாராகி, விமுக்தி வரக் காத்திருந்த போது கிடைத்த பத்து நிமிட இடை வெளியில் அயூப் ஒரு இளைஞனை அறிமு கப்படுத்தினார்.

"இவர் ஃபெரோஸ். எங்கள் நிறுவனத்தில் தான் வேலை செய் கிறார்"

ஃபெரோசும் ஒரு ஓட்டுநர் - வழிகாட்டி முந்தநாள் ஒரு ஜெர்மன் குழுவுடன் "மாறா- சோப்பா" வுக்கு வந்தார். இன்று, இப்போது திரும்ப வேண்டும். ஃபெரோஸ கூட அயூப் போல வட இந்திய சாயலிற் தான் இருந்தார். ஆள் நல்ல உயரம் நெற்றியில் விழுகிற தலை முடி. ரீ ஷேட்டுக்கு மேலே, ஒரு வெள்ளிச் சங்கிலி.

சனம் அவர்களை அணுகுமே, அப்படியான ஒரு பரவசம், எங் களுடன் பேசுவதில் ஃபெரோசுக்கு கிடைத்த தென்பது வடிவாகத் தெரிந்தது!

விமுக்தி வந்து சேர்ந்ததும், அந்த இளை ஞனிடம் விடைபெற்று வானில் ஏறினோம். அவ்வளவு விரைவில் பிரிய நேர்ந்த கவலை அவனுக்கு. வான் நகரும் போது, ஜன்னலருகில் வந்து கையசைத்துக் கூறினான்.

"போய் வாருங்கள், புலிகளே!"

இயந்திர இரைச்சலில் விமுக்திக்குக் கேட்டிருக்குமோ, தெரியாது.

அந்தக் காலை வேளையின் காட்டுவிழயம் இளங்காற்றும், இளவெய்யிலுமாய்க் கலாதியாயிருந்தது! இதுவரை கண்டிராத பறவை இனங்கள் குனிந்ததலை நிமிராமல் மேய்கிற வரிக்குதிரைகள், கூட்டங் கூட்டமாய் மான்கள் என்று! மான்களில் மட்டும் நான்கு வகை.

பத்தரைக்கு 'மாறா சோப்பா' வுக்குத் திரும்பி, மீண்டும் பதினொன்றுக்கே புறப் பட்டாயிற்று, மஸாய்க் கிராமத்தைப் பார்க்க. முக்கீக்கி, சோப்பா விடுதிக்கண்மையில், அரை மணிநேரப் பயணத் தூரத்தில் தான் இருந்தது.

(தொடரும்...)

### கரும்புலிகள் நாள் யூலை - 05



எத்தனை வலைகள் பின்னியென்ன? சூழ்ச்சிகள் எத்தன்ன செய்துமென்ன? ~ கரும் புலிகள் தகர்ப்பர் அத்தனை தீமையும்!

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*

# பாவலன் பதில்கள்



☐ ஒரு வயது முதுர்ச்சி பெற்றவரும் குறைந்த வயது கொண்ட ஒரு இளைஞனும் ஒரே கடமையை செய்யும்போது இருவருக்குமிடையில் போட்டி வரலாமா?

அனுபவமும், வேகமும் இணைந்தால் அந்தக் கடமை சிறப்பாக முடியுமல்லவா? போட்டி பொறாமையில் முடியும். பொறாமை கடமையை சிதைக்கும்.

கீதா,
வவுனியா.

☐அரசியல் இலாபத் திற்காக மனித உயிர் களுடன் விளையாடும் அரசியல் வாதிகளைப் பற்றி என்ன நினைக கிறீர்கள்?

அரசியல் உயிர் கொல்லிகள் என்று நினைக்கிறேன்.

சுதா,
யாழ்ப்பாணம்.

☐ பாவலரே போர் நிறுத்தத்தை இராணுவத் தரப்புகள் மீறுகிறார்கள் இது எந்தக் கட்டத்தில் முடிவடையும்.

அபாய கட்டத்தில் முடியும்.

நளா,
புதுக்குடியிருப்பு.

☐ இலங்கையில் இன்றைய ச னாதிபதியைப் பற்றி என்ன கூறுகிறீர்கள் பாவலரே?

அவர் ச னாதிபதியல்ல அதிகாரபதி.

தீபா,
முழங்காவில்.

☐ பாவலரே இடைக்கால நிர்வாக சபை பற்றி என்ன நினைக கிறீர்கள்?

இந்த அரசே ஒரு இடைக் கால அரசுதானே... அது தன்னை இழுத்துக்கொண்டு போவதே பெரும் பாடாயிருக்கையில் இடைக்கால நிர்வாக சபை இழுத்தடிக்கப்படுவதில் என்ன வியப்பு.

☐ சிரிக்கக் கூடிய "சுவை" ஒன்று பாவலரே?

நகைச் சுவைதான் தம்பி.

பிரியா,
வவுனியா.

☐ பாவலரே படிக்காத முட்டாளையும் படித்துவிட்டும் முட்டாளாய் இருப்பவர்களைப் பற்றிய தங்கள கருத்தென்ன?

படிக்காத முட்டாள் எறும்பு. படித்த முட்டாள் பாம்பு. முன்னைய வரைவிட பின்னயவர் ஆபத்தானவர் புரிகிறதா?

ரமேஸ்,
வவுனியா

☐ கருணாவின் பிரதேச "வாதம்" எப்படியிருக்கிறது?

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் காலில் விழ வைத்திருக்கிறது.

☐ கருணாவும் டக்ளஸ் தேவானந்தாவும் சேர்ந்து புதுக் கட்சி ஆரம்பிக்கப்போகிறார்களாமே?

ஏன் ஆனந்த சங்கரி யாரையும் சேர்த்துக் கொள்ளலாமே கட்சியின் பிரதான கொள்கையாக மாநிலத்தில் பிரதேசவாதம் மத்தியில் தீவிர வாதம் என்மதையும் வைத்துக் கொள்ளலாம்....!

துசி,
கிளிநொச்சி.

☐ ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி இப்போது எப்படி யிருக்கிறது?

'ஐக்கியமற்ற மக்கள் சுதந்திர முன்னணி'யாகிக் கொண்டிருக்கிறது.

யசோ,
யாழ்ப்பாணம்.

☐ அமெரிக்கர்களுக்கு பெரிதாக எதைக் கண்டால் பயம்?

அமெரிக்கர்களுக்கு பெரிதாக என்ன சின்னதாய்கூட விமானத்தைக் கண்டால் பயம.

தீபா, கிளி.




### ஆட்டங்கள் எத்தனை வகை

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்துக்கும் நடை பெற்றது போராட்டம்.

சிறிலங்கா இராணுவம் தமிழ் மக்கள் மீது நடத்தியது வெறியாட்டம். சிங்கள இனவாதக் கட்சிகள் நடத்தி வருவது பேயாட்டம்.

சந்திரிகா அம்மை யாருக்கு இப்போது ஏற்பட்டிருப்பது மாறாட்டம்.

### முடியப் போகும் கலண்டர்

எப்பிடிப் பார்த்தாலும் சந்திரிகா அம்மையார் கூட்டல் கழித்தல்ல பிழைவிட்டுத்தான் பாக்கிறா - முப்பத்தியாறக் கழிச்சு இருவத்திரண்டைச் சேர்த்து மூண்டத்தள்ளிவச்சு, ஏத்தி இறக்கி கணக்கச் செய்து முடிக்க முதல் கலண்டர் முடிந்துபோகுது.

### அடிதந்த உதவி

அரசாங்கத்தை கவுக்கவோ எதிராகச் செயற்படவோ மாட்டோம். அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட ஜாதிக ஹெல உறுமய தயாராக இருக்கிறது. ஜாதிக ஹெல உறுமயம்...... அடியப் போல அண்ணன் தம்பி உதவ மாட்டான்.

### நீந்தத்தானே வேண்டும்

இன்னும் முப்பது விமானம் வாங்க அரசாங்கம் திட்டம் போடுதாம். நீர்கொழும்பில விமானம் கடலில விழுந்ததுக்கு இயந்திரக் கோளாறு தான் காரண மாம்.

சும்மா சும்மா அது நீந்திப் பழகப் போனது தாண்டு போச்சு.

வா வா கறுப்பு ஆடே
இருக்கிறதா உன்னிடம் ஏதும் கம்பளி
ஆஜ்ஜா ஆஜ்ஜா மூன்று பைகள் நிறைய
ஒன்று எனது எசமானுக்கு
ஒன்று எனது குட்டிக்கு
ஒன்று சின்னப் பையனுக்கு
யார் அழுவது அந்த ஒழுங்கையில்.

அப்படி ஒரு புதுக் கவிதை எழுதிவிட்டேன் சரி தானே.

மேற்கத்திய கவிதை முயற்சிகளைப் படிப்பு மூலம் அறிந்து கொண்டவர்கள் இங்கு சுய அனுபவங்களைப் பின்தள்ளி நவீன மோஸ்தர்களின் பிரமைகளுக்கு ஆட்பட்டுத்தம் கவிதைகளைச் சிக்கலாக் கிக் கொண்டிருக்கின்றனர். இந்தச் சிக்கலை நம் வாழ்க்கை அனுபவங்கள் நியா யப்படுத்துவதாகத் தெரியவில்லை. அனுபவங்களைக் குறைக்கும் படிப்பின் பாரங்களை இறக்கி நம் வாழ்வைச் சார்ந்த கவிதைகளை நாம் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. மிகத் தொலைவில் இருப்பதைப் பிடித்துப் போடுவதில் படிமம் தேடும் கவிமனங்கள் தம் விரல் நுனிகளால் ஸ்பரிக்கக் கூடிய எளிமையான ஜீவாதாரமான பேரனுபவங்களைத தொலைத்துக் கொணடிருக்கின்றனர். முற்றிலும் நம் அனுபவங்களைச் சார்ந்து இயற்கையான, ஆரோக்கியமான கவித்துவங்கள் வழியாகவே நாம் உன்னதங்களை அடைய முடியும்.

*சுந்தர ராமசாமி*

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –75



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –75

............................................................
............................................................
............................................................
............................................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –74



**சு.கோகிலா,இல:-56,**
**ஆனந்தபுரம்,**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

*ஊன், உறக்கம் மறந்து பனி, மழை,வெய்யில் எல்லாமே தாங்கி*
*தம் உயிரை துச்சமாக்கி மண் காக்க போராடி*
*எல்லை தாண்டி வருபவரைஎல்லையில்வைத்தேபொசிக்கிடும்*
*இவர்கள் தான் தமிழ்த் தாயவளின் மறப்பிள்ளைகள்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*பகைவனின் கோட்டைக்குள் புகுந்த புலிவீரர்*
*மீட்புக்காய் போராடும் வீரத்தைப்பார் மகனே*
*பாரினில் எமக்கினியில்லை அடிமை நிலை - என்று*
*புதுப் பரணி பாடுவோம் வா புரவலனே!*

ச.மதன்
புதுக்குடியிருப்பு.

*சோதனைகள் பல தாண்டி - பல*
*சாதனைகள் படைத்திட்ட தமிழர் சேனை*
*அதிகாரர் உலகமடா. புலிவீரர்களே! எப்போதும்*
*விழிப்போடு காவலிருப்போமடா.*

கலைநிலா
புதுக்குடியிருப்பு.

*சமாதானம் சாகலாம் அன்றேல் சாகடிக்கப்படலாம்*
*சமநேரத்தில் சமர் வெடிக்கலாம் சகலதையும்*
*ஏற்று சமர்க்களத்தில் இவன்*
*சாதனை புரிவேன் என்று சகதோழனுடன் இன்றும்.*

சி.சிவசிறிதரன்
முல்லைத்தீவு,

*தமிழ் தேசத்தின் குழந்தைகளே கல்லறையில்*
*துயில்கின்ற உமதன்பு உறவுகளின் விடுதலையின்*
*நினைவுகளை உங்கள் நெஞ்சமதில் சுமக்கும் வரை*
*எதிரி கணைகள் சுவர்களைத்தான் துளைக்கும் உமையல்ல.*

சி.குணசேகரன்
கிளிநொச்சி.

*உஷ்! சத்தம் போடாதீர்கள்*
*சினைப்பர் வீரன் நிலை எடுக்கிறான்*
*இலக்கு தவறிவிடக் கூடாது*
*இதற்காக எத்தனைநாள் தவமிருக்கின்றான்.*

கா.சுசி
யாழ்ப்பாணம்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.










இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு யூலை மாதம் 02 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.